678

# கல்வியியல் விடய ஆய்வு

# CASE STUDY IN EDUCATION

377

பாலசுப்பிரமணியம் தனபாலன்
உப பீடாதிபதி - கல்வியும் தர மேம்பாடும்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

377

JAFFNA MEDICAL MUSEUM
TEACHING HOSPITAL JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA MEDICAL MUSEUM * JAFFNA TEACHING HOSPITAL *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியலில் விடய ஆய்வு

# CASE STUDY IN EDUCATION

பாலசுப்பிரமணியம் தனபாலன்
உப பீடாதிபதி – கல்வியும் தர மேம்பாடும்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

JAFFNA MEDICAL MUSEUM
TEACHING HOSPITAL JAFFNA

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மனிதர்களின் செயல்களே அவர்களது இருப்பியத்திற்குத் தெளிந்த பொருளைக் கொடுக்கின்றன. ஒருவர் என்னவாக விரும்புகிறார் என்பதை அவரது செயல்களே முடிவு செய்யும்.

– ஜீன் போல் சார்தர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | – | கல்வியியலில் விடய ஆய்வு |
| ஆசிரியர் | – | திரு. பாலசுப்பிரமணியம் தனபாலன்<br>உபபீடாதிபதி<br>கல்வியும் தர மேம்பாடும்,<br>யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி. |
| முதற்பதிப்பு | – | ஆடி 25 |
| பதிப்புரிமை | – | திருமதி. கர்ணி. தனபாலன்<br>துவாரகை வீதி,<br>கோண்டாவில் வடக்கு,<br>கோண்டாவில், யாழ்ப்பாணம். |
| தாள் அளவு | – | 1/8 |
| பிரதிகள் | – | 1000 |
| அச்சிட்டோர் | – | ரெக்னோவா ஓவ்(*f*) செற் பிறின்ரேஸ்<br>717, கே.கே.எஸ். வீதி,<br>யாழ்ப்பாணம். |
| விலை | – | 150 ரூபா |
| *Title* | - | Case Study In Education |
| *Author* | - | Mr. Balasubramaniam Thanabalan –<br>Vice President<br>Jaffna National College of Education |
| *First Edition* | - | July – 25 |
| *Copy Rights* | - | Mrs. Karni Thanabalan<br>Thuvarakai Lane,<br>Kondavil North,<br>Kondavil,<br>Jaffna. |
| *Paper Size* | - | 1/8 |
| *No of Copies* | - | 1000 |
| *Printers* | - | TECNOWA Offset Printers<br>717, K.K.S. Road,<br>Jaffna. |
| *Price* | - | Rs. 150/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்துறை**

**பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள் வழங்கிய**

# அணிந்துரை

உலகளாவிய வகையில் கல்வி முகாமைத்துவம், கலைத்திட்ட முகாமைத்துவம், முதலிய துறைகளில் பல்வேறு பரிமாணங்களில் விசை கொண்ட மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இம் மாற்றங்களுக்கு அடிப்படையாக அமைவது அறிகை நிலையில் ஏற்பட்டுவரும் தெளிவாகும். அறிகை நிலைத் தெளிவை ஆய்வுகள் ஏற்படுத்துகின்றன.

வினையாற்றல் கொண்ட கல்வி முகாமைத்துவ ஆளணியினரை உருவாக்கும் பயிற்சியில் விடய ஆய்வு அல்லது வகைநிலை ஆய்வு சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. CASE STUDY NOT FOR THE SAKE OF CASE STUDY – "வகைநிலை ஆய்வு வகைநிலை ஆய்வுக்கு அல்ல" என்பதை முதற்கண் கல்வியியலாளர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். முகாமைத்துவ விருத்தி முயற்சிகள் அனைத்தும் சமூகத்தின் அடிநிலை மாந்தர்களை அதாவது பிரதி கூலக் குழுவினரை வளம் படுத்தும் கல்வி முயற்சிக்குரிய புலமைப் பயிற்சியாக — முகாமைத்துவப் பயிற்சியாக இருத்தல் வேண்டும் என்பதை முதற்கண் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

கல்வி நிர்வாகிகள் மேற்குறித்த பணியை முன்னெடுப்பதற்குரிய ஓர் அகல் விரிவாக்கத்தினை கல்வி முகாமைத்துவத்திலும், ஆசிரியர் கல்வியிலும் தெளிந்த அறிவு, அனுபவம் வாய்க்கப் பெற்ற யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி திரு. பா. தனபாலன் ஆக்கித்தந்துள்ளார். எமது பல்கலைக்கழகத்திலும் முது கல்வியியல்மாணி ஆய்வாளர்களுள் ஒருவராக விளங்கும் இவரது வாண்மைச் செயற்பாடுகள் பாராட்டுக்குரியதாகும்.

**கல்வியியல் துறை**
**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்.**

**20–7–2002**

**பேராசிரியர்.**
**சபா. ஜெயராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கல்வியியலில் விடய ஆய்வுக்கற்கை ஒரு புதிய துறையாகவே இன்றும் எமது நாட்டிலுள்ளது. இத்துறை வாண்மைத் தொழில் சார் கல்விப்பயில்வுகளில் முதன்மையான கற்றல் – கற்பித்தல் முறையாக மிளிர்கின்றது. நவீன ஆசிரியர் கல்வி, கல்வி முகாமைத்துவம் என்பவற்றில் பல்பரிமாணத் தேர்ச்சிகளையும், அனுபவங்களையும் பெற விடய ஆய்வுக் கற்கைகள் வழிகாட்டுகின்றன. குறிப்பிட்ட தொழில்சார் களங்களில் ஏற்படும் நிகழ்வுகள், பிரச்சினைகள், முரண்பாடுகள் அவற்றிற்கான சரியான தீர்வுகளைக்காண இக் கற்கை செயல்முறைப்பிரயோக ரீதியாக வழங்குகின்றது. இன்றைய நிலையில் விடய ஆய்வுக் கற்கைக்கான வழிகாட்டல் நூல்களின் தேவை கருதியும், பலரின் வேண்டுகோள்களுக்கு இணங்கவும் இந்நூல் ஆக்கப்பெற்றது.

நூலில் கல்வியியல் விடய ஆய்வுகள் தொடர்பான அடிப்படை விடயங்கள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வுத்திறன்களை வளர்த்தல் தொடர்பான வழிகாட்டல்கள் முன் மொழியப்பட்டுள்ளன. மேலும் கற்றல் – கற்பித்தல் முறையாக விடய ஆய்வின் பரிமாணங்கள், விசேடமாக கல்வி முகாமைத்துவ நவீன செல்நெறிகளில் விட ஆய்வுக் கற்கைகளின் முக்கியத்துவம் எடுத்து விளக்கப்படுவதுடன் மாதிரி விடய ஆய்வுக் கற்கைகளும் விடைகளுக்கான வழிகாட்டல்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக இதுவரை நிகழ்ந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை விடய ஆய்வுக் கற்கை பரீட்சை வினாத்தாள்களும் அவற்றிற்கான விடைக் குறிப்புகளும் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூலாக்கத்திற்கும் அணிந்துரை வழங்கி எனது கல்வியியல், கல்வி முகாமைத்துவ அறிவு உயர்வுக்கும் வழிகாட்டிவரும் பேராசான் போராசிரியர் கலாநிதி. சபா. ஜெயராசா, மற்றும் பேராசான் கு. சண்முகநாதன், கலாநிதி. தி. கமலநாதன், திருமதி. கோ. அம்பலவாணர் ஆகிய ஆசான்களுக்கு இத்தருணத்தில் பணிவான நன்றிகளைத் தொருவித்துக் கொள்கின்றேன். நூலைச் சிறப்பாக அச்சிட்ட நிறுவனத்தினருக்கும் நன்றிகள். இந்த நூலிலுள்ள குறை நிறைகளைச்சுட்டிக்காட்டி மேலும் வெளிவரவுள்ள எனது புதிய ஆக்கங்களுக்கு நல்வழி காட்டுமாறு அனைவரையும் பணிவாக வேண்டுகின்றேன். இறையருள் துணை நிற்பதாக.

**பாலசுப்பிரமணியம் தனபாலன்**

**துவாரகை வீதி,**
**கோண்டாவில் வடக்கு,**
**கோண்டாவில்,**
**யாழ்ப்பாணம்.**
**20–7–2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


அணிந்துரை -I

முன்னுரை -II

**அத்தியாயம் 1**

கல்வியியலில் விடய ஆய்வு –1

விடய ஆய்வு எண்ணக்கருக்கள் –7

**அத்தியாயம் 2**

விடய ஆய்வில் – ஆய்வுத் திறன் –11

ஆக்கத் திறன் –15

**அத்தியாயம் 3**

கற்றல் – கற்பித்தல் முறையாக விடய ஆய்வு –20

**அத்தியாயம் 4**

கல்வி முகாமைத்துவ செல்நெறிகளில் விடய ஆய்வு –29

இலங்கையின் கல்வி நிர்வாக முகாமைத்துவ வளர்ச்சி –31

**பின்னிணைப்பு** –55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம், செயல்கள், விளைவு எனப் பலவகைகளாகவுள்ளன.

குறிப்பிட்ட ஒரு கல்வியியல் விடய ஆய்வு தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பல்வேறு உபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு பிரச்சினைதீர்த்தல் என்பது ஒரு மனிதன் உடனடியாக விடைகாண முடியாத சந்தர்ப்பம் ஒன்றை எதிர் கொள்ளக் கற்றல் என்பதாகும். இதற்குப் பல வகையான பரிசோதனை அணுகுமுறைகளைப் பயன்படுத்தலாம். தோண்டைக் என்ற உளவியலறிஞர் முயன்று தவறும் செயல் முறையே பிரச்சினை தீர்த்தல் எனக் கூறுவார். அறிவு சார் உளவியலாளர்கள் அகக் காட்சியை அல்லது ஒரு தீர்வைக் கண்டு உடனடியாக அகத்தில் களிப்படைதலை வலியுறுத்தினர்.

இன்றைய காலத்தில் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவ்வாறு தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றனர். அவற்றை எவ்விதம் பேணுகின்றனர். மேலும் எவ்விதம் தகவல்களை மாற்றஞ் செய்து ஒரு முடிவுக்கு வருகின்றனர் என்பவை தொடர்பான விஞ்ஞான பூர்வ ஆய்வுகள் விருத்தியாகியுள்ளன. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தரவுகளைக் கையாளும் ஒரு செயல்முறையே பிரச்சினை தீர்த்தலாகும். பிரச்சினை தீர்ப்பவரின் தொகுதியானது மூளையில் இடம் பெறும் நிரற்படுத்தும் உறுப்புக்களுடன் இணைக்கப்படுகின்றது. ஞாபகத்தைப் பயன்படுத்தி அனுபவ வெளிப்பாடுகள் மூலம் பிரச்சினை தீர்த்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இன்றைய நவீன தகவல் தொழில்நுட்ப உலகில் தரவுகளைக் கையாளும் நுட்பவியல்களே பிரச்சினைகளைத் தீர்த்து வெற்றிப் பாதைக்கு வழிகாட்டுகின்றன. அமெரிக்க கல்வியியல் தத்துவ ஞானி ஜோன் டூயி தனது செயல் திட்ட மைக் கல்வியின் அத்திவாரமாக பிரச்சினை தீர்த்தல் செயல் முறையை நான்கு படிமுறைகளில் பின்வருமாறு தெரிவிக்கின்றார். இது கல்வியியல் விடய ஆய்வு தொடர்பான கற்கைகளுக்கு உதவும்.

1. **ஆயத்தம்** – கல்வியல் பிரச்சினைகள் தொடர்பான சம்பவங்கள் மூலம் அறிவைப் பெறுதல், பிரச்சினைககளை அடையாளம் காணல் மனிதர்களின் இடைவினைகளையும், பொருட்களின் தொடர்புகளையும் கண்டு பிடித்தல்.
2. **காத்தல்** – விடயப்பிரச்சினைகள் தொடர்பான மெய்க்கருத்தைத் தெரிந்தெடுத்தல், விளங்கக் கூடிய மொழியிலே பிரச்சினையை மீளக் கூறல், விளக்குதல், பகுப்பாய்வு செய்தல் மாற்றுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்மானங்களை இனம் காணுதல்.

3. **வெளிப்படுத்துதல்** – அகக்காட்சி அனுபவங்கள் மூலம் பிரச்சினைகளை எதிர் கொள்வதற்குச் சாதகமான தீர்வுகளைத் தெளிவாக வழங்கல்

4. **சீர் தூக்கல்** – ஒரு கல்வியியல் பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்ப்பு அப்போதைய சூழ்நிலைக்கும் எதிர் காலத்திற்கும் பயன்படு தன்மை உள்ளதாக்கல்.

ஒரு நல்ல தீர்வு எனப்படுவது ஒரு கல்வியியல் பிரச்சினையின் தீர்வுக்குத் தேவையான நியதிகளை எதிர் கொள்வதைக் கொண்டு தெரிந்தெடுக்கப்பட்டு பிரயோகிக்கப் பட வேண்டும். உதாரணமாக ஒரு கல்விப்பிரச்சினை தொடர்பான விடயஆய்வு சம்பவம் ஒன்றை நோக்குவோம்.

## விடய ஆய்வுக்கற்கை 1

ராஜா கார் கராச்சில் கடுமையாக வேலை செய்து கொண்டிருந்தான். அவனுக்குப் பதின் மூன்று வயது. கார் திருத்துவதற்காக ஒரு பாடசாலை அதிபரான திரு. நாதன் கராச்சில் ராஜாவைச் சந்திக்க நேர்ந்தது. "படிக்க வேண்டிய வயதில் இந்த வேலையைச் செய்யும் உன்னைப் பார்க்க கவலையாகவுள்ளது" என்றார் அதிபர். "எனக்கும் படிக்க ஆசைதான் சேர்!" அவனது பதில் அதிபரை அதிரச் செய்தது. "ஆசை இருந்தும் உனக்கு ஏன் இந்த நிலை? "

"சேர் நான் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை உழைக்கின்றேன். இருவேளை உணவும் நாளுக்கு முப்பது ரூபாவும் தருகின்றார்கள். நான்காம் வகுப்பிலேயே பாடசாலையை விட்டு விலகினேன். எனது வகுப்பாசிரியர் கல்வியில் வெறுப்படையச் செய்து கொடுமைப்படுத்தினார். எனது ஏழ்மையும் இல்லாமையுமே அவர் என்னை வெறுத்தமைக்குக் காரணம் என நினைக்கின்றேன். எனக்குப் படிப்பில் அதிக நாட்டம் இருந்த போதிலும் பாடசாலை செல்வதை வெறுத்தேன். சில ஆசிரியர்கள் மூர்க்கத்தனமாகவும் சிலர் மூர்க்கத்தனம் இன்றியும் கற்பித்தனர். வகுப்பாசிரியர் நான் செய்யும் சிறு சிறு பிழைகளுக்கெல்லாம் திட்டுவார், பிரம்பால் அடிப்பார். அனேகமான நாட்களில் பாடசாலைக்குப் பிந்தியே செல்வேன். ஒவ்வொரு நாளும் என்னைத் துன்புறுத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலைக்கு ஒப்பாகவே எனக்குப் பாடசாலை தென்பட்டது'' அதிபர் நாதன் வினாவினார். நீ ஏன் பாடசாலைக்குப் பிந்திப் போனாய்?

''எனது குடும்பத்தில் நானும் தாயாரும் ஒரு தங்கையும், தந்தை இல்லை, தயார் தோசை சுட்டுத்தர அவற்றைக் கடைக்குக் கொடுத்துவிட்டுப் பாடசாலைக்குச் செல்ல காலதாமதமாகிவிடும்......... அன்றொருநாள் நான் வழமை போல பாடசாலைக்குச் சற்றுப் பிந்தி வர, வகுப்பாசிரியர் மிகக் கோவமாக என்னைப்பார்த்து, '' நீ அப்பன் ஆர் என்று தெரியாமல் பிறந்தவன், அயோக்கியன் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குப் பிந்தியே வருகின்றாய் ஒரு போதும் வீட்டு வேலை செய்வதில்லை என்று கூறி பயங்கரமாக என்மீது பாய்ந்து கைகளாலும், பிரம்பாலும் எல்லோருக்கும் முன்னால் அடி அடியென அடித்தார். காலில் காயம் ஏற்பட்டது. எனக்கு வெட்க்மாகவும், துக்கமாகவும், வேதனையாகவுமிருந்தது.

அதிபரிடமும் என்னைப்பற்றி புகார் செய்யப்பட்டது. அதிபர் அறைக்கு அழைக்கப்பட்டேன்....... ''நீ முட்டாள், மடயன், பாடசாலைக்கு உன்னால் நேரத்திற்கு வர முடியவில்லை என்றால் வீட்டிலேயே இரு நீ இங்கு வராமல் வீட்டிலேயே தங்கும் நேரம் வந்து விட்டது.'' என்றார். நடந்தவிடயங்களைத் தாயாரிடம் கூறினேன். அழுதார். அனுதாபப்பட்டார். தன் தலையில் அடித்துக் கொண்டார். சில நாட்களின் பின் என்னை மீண்டும் பாடசாலைக்கு அனுப்ப முயற்சி எடுத்த போது நான் மறுத்து விட்டேன். எமது பாடசாலை வாழ்க்கை முடிந்து விட்டது. பின்னர் இந்தக் கராச்சில் கூலியாளாகச் சேர்ந்தேன். இப்போதும் பாடசாலைக்குச் செல்கின்ற மாணவர்களைப் பார்க்கின்ற போது எனக்குக் கவலையாக இருக்கும். நான் எனக்காகவே அனுதாபப் படுகின்றேன் சேர். அவன் தனது கதையைக் கூறி முடிக்க அதிபர் திரு. நாதன் கண் கலங்கினார்.

இங்கே விடய ஆய்வுக்கான ஒரு சம்பவம் தரப்பட்டுள்ளது. இதை உங்கள் அனுபவம், ஆராயும் திறன், கல்வி உளவியல், வழிகாட்டல் சேவை சிறுவர் உரிமைகள், கட்டாயக் கல்விச்சட்டம், மாணவர் தனியாள் வேறுபாடு, ஆசிரியர் கடமைகள், அதிபர் பொறுப்புக்கள் பாடசாலை வகுப்பறைப் பிரச்சினைகள் தொடர்பான அறிவு என்பவற்றை இணைத்து மேற் குறிப்பிட்ட விடய ஆய்வை மீண்டும் ஒரு முறை அணுகிவாசித்த பின்னர் கீழ் வரும் வினாக்களுக்கு விடையளிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இவ் விடய ஆய்வுச் சம்பவத்தை நான்கு வரிகளில் சுருக்கி எழுதுக?
2. நீங்கள் ராஜனின் வகுப்பாசிரியராக இருந்தால் அவன் பாடசாலைக்குப் பிந்தி வந்தமைக்கும், வீட்டு வேலை சார்ந்த அவனது மனப்பாங்கிற்கும் என்ன நடவடிக்கை எடுத்திருப்பீர்கள்?
3. வகுப்பாசிரியராலும், அதிபராலும் சீர் குலைக்கப்பட்ட, மீறப்பட்ட ராஜன் என்ற மாணவனது உரிமைகள் எவை?
4. ராஜன் கற்ற பாடசாலை அதிபராக நீங்கள் இருந்தால், அவனுக்கு நீங்கள் மேற்கொள்ள விளையும் பரிகார முறைகளைத் தருக?
5. இவ் விடய ஆய்வின் கல்வியியல் எண்ணக்கரு எது?
6. குறித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாமா?
7. ராஜனின் கதையைக் கேட்ட அதிபரான நாதன் அவனது நல் எதிர் காலத்திற்கு என்ன வழிகாட்டலை மேற்கொள்ளலாம்?

இவ் வினாக்களை முழுமையான ஈடுபாட்டுடன் வாசித்து விடய ஆய்வுச் சம்பவத் தகவல்களுடன் ஒப்பு நோக்கி, பிரச்சினைகளை இனம் கண்டு குறிப்புக்களை எடுக்கவும், தொடர்ந்து இவ் விடய ஆய்விலுள்ள கல்வியியல் முரண்பாடுகள், பிரச்சினைகளுக் கூடாக மைய எண்ணக்கருவை இனம் காண வேண்டும். இதனைத் தொடர்ந்து வினாக்களுக்கான விடையை எழுதலாம்.

விடய ஆய்வுகள் தொடர்பான விடைகளை எழுதும் போது குறித்த விடய ஆய்வுப்பிரச்சினையை விளங்கி, வினாவுக்கு ஏற்ப பொருத்தமான, தெளிவான, நேரடியான, குறிப்பான விடையை வழங்க வேண்டும். விடையில் சர்வதேச, தேசிய சட்டங்கள், ஆவணங்கள், சுற்று நிருபங்கள், நிதிப்பிரமாணங்கள், தாபனக்கோவைகள் மற்றும் பொது நிர்வாக அமைச்சு, கல்வியமைச்சு, மாகாண அமைச்சு, வலயங்கள், கோட்டங்கள், பாடசாலைகள் தொடர்பான ஒழுங்கமைப்பு விதிகள், என்பவைகளை ஆதாரங்களாகக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுதல் பொருத்தமான தாகும். எனவே தான் மேற்குறிப்பிட்ட விடய ஆய்வில் கட்டாயக் கல்விச் சட்டம், ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைச் சாசனம், அதன் முக்கிய சரத்தான – 28(2), என்பவையும் ஆசிரியர், அதிபர் ஆகியோரது கடமைகளும், பொறுப்புக்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் விடய ஆய்வுக் கற்கையில் குறித்த விடய ஆய்வு தொடர்பான மைய எண்ணக்கருவைக் கண்டுபிடித்தல் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்ப அணுகுமுறை ஆற்றல் அவசியமான தொன்றாகும்.

## விடய ஆய்வு மைய எண்ணக்கருக்களைக் கண்டுபிடித்தல்

விடய ஆய்வுப் பிரச்சினைகள் பல முகங்களைக் கொண்டிருக்கும். பல்வேறு பரிமாணங்களில் முரண்பாடுகள், சிக்கல்கள் தொடராக இணைந்தும், மறைமுக விம்பங்களாகவும் தென்படும். தெளிவின்மைகளும், சிரமங்களும் தோன்றும். இவற்றினூடாக குறித்த விடய ஆய்வுப் பிரச்சினையின் மைய எண்ணக்கருவை அல்லது கருக்களை இனம் காண முடியும். ஒத்த பண்புகளைக் கொண்ட ஒரு கூட்டத் தூண்டிகள் எண்ணக்கரு எனப்படும். இத் தூண்டிகள் பொருட்களாக, விடய ஆய்வுச் சம்பவங்களாக, நிகழ்ச்சிகளாக இருக்கலாம்.

ஓர் எண்ணக்கருவைப் பெற்றுக் கொள்வதில் இரு செயல் முறைகள் தொடர்புபடுகின்றன. அவை வேறுபிரித்தலும், பொதுமையாக்கலுமாகும். பொதுமையாக்கலினூடாக ஒரு கூட்டப் பொருட்கள், விடய ஆய்வுச் சம்பவங்கள், நிகழ்வுகள், கருத்துக்கள் ஆகியன ஏதேனும் சில, பல பொது அம்சங்களைக் கொண்டிருப்பதைக் காணலாம். மற்றும் அவை முன்னைய அனுபவங்களுடனும் தொடர்புடையவையாக இருக்கும். பொதுமையாக்கமானது ஒரு மனிதனை அவனுடைய அனுபவங்களிடையே தொடர்புகளைக் காணச் செய்கின்றது. வேறுபிரித்தல், பொருட்கள், சம்பவங்கள், நிகழ்ச்சிகள் என்பவற்றிடையே வித்தியாசங்களை இனங்காண உதவுகின்றது. பொதுமையாக்கல், வேறுபிரித்தல் இயல்புகளை விடய ஆய்வுச் சம்பவங்களில் பொருத்தி ஆராய்ந்து சரியான எண்ணக்கருவை அறிய முடியும்.

மேற்குறிப்பிட்ட முதலாவது விடய ஆய்வு தொடர்பாக ஆராய்கின்ற போது அது "சிறுவர்களின் கல்வி, உரிமை, பாதுகாப்பு" தொடர்பானது என்பதைப் பொதுமையாக்கல், வேறுபிரித்தல் அனுபவங்களினூடாகக் கண்டு பிடிக்க முடிகின்றது. இவ்வாறே விடய ஆய்வுச் சம்பவங்களில் இருந்து குறித் எண்ணக்கருவைக் கண்டுபிடிக்கும் ஆற்றல் சரியான விடைகளைக் காண உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கரு அமைப்பும், அவற்றைப் பயன்படுத்திக் கற்றுக் கொள்வதும் சிந்தனை விருத்திச் செயல் முறைகளின் வெற்றிக்கு வழிகாட்டுகின்றன. பெரும்பாலான கீழைத்ததேச கல்வியியல் தத்துவ ஞானிகளும், அரிஸ்ரோட்டிலும் மனித இனத்தினை வரையறை செய்யும் பண்புக் கூறுகளில் முதன்மையானதாக சிந்தனா சக்தியைத் தெரிவு செய்தனர். இச் சிந்தனையின் வளர்ச்சியே எண்ணக்கருவாக்க விருத்தியாகும். சிறு குழந்தையிலிருந்து மனிதனிடம் எண்ணக் கருக்களை அமைக்கும் ஆற்றல் படிப்படியாக விருத்தியடைகின்றன. எண்ணக்கருக்களின் தொகையும், வகைகளும் ஒரு பிள்ளையின் எதிர்காலக் கற்றலின் வெற்றிகளைப் பாதிக்கின்றன.

எண்ணக்கரு அடைவானது ஒரு தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையென உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். உதாரணமாக "உரிமை" என்னும் எண்ணக்கருவை அறிதலை நோக்கின் ஒரு மனிதன் எவ்வாறான சந்தர்ப்பங்களில் உரிமை தொடர்பான விடயத்தில் கவனம் செலுத்துகின்றான் என்பதை அவதானிப்பதன் மூலம் குறித்த எண்ணக்கருவைக் கண்டறிய உதவலாம். சரியான எண்ணக்கரு வகைப்படுத்தலை உறுதி செய்யும் போது இலகுவாகப் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணலாம்.

எண்ணக்கரு கற்றலின் நோக்கம் குறித்த எண்ணக்கருக்களுக்குப் புதிய உதாரணங்களைச் சரியாக இனங்காணுதலும் தூண்டிகளுக்கு எண்ணக்கரு சார்ந்த துலங்கலை வெளிப்படுத்துதலுமாகும். எண்ணக்கருவாக்க விருத்தியானது பரந்த அறிவு, அனுபவம், தர்க்கிக்கும் ஆற்றல் என்பவற்றினூடாக விடய ஆய்வு தொடர்பான தீர்வுகளுக்கு உதவுகின்றன. மேலும் இதற்கு பின்வரும் கல்வியியல் காரணிகளும் வழிகாட்டுகின்றன.

* தொடர்பு கண்டு தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல்.
* அனுபவங்கள் மூலம் எதிர்காலப் பிரச்சினைகளை முன்னறியும் ஆற்றல்.
* சுருக்கமாக, தெளிவாகச் சிந்தித்து நியாயம் காணும் ஆற்றல்.
* தகுதியுடனும் பயன் தரும் வகையிலும், சூழலுடன் இணங்கச் செல்லும் ஆற்றல்.
* எதிர்பாக்கும் இலக்குகளை அடையவும், சவால்களை எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்குமான ஆற்றல்கள்.

* எண்ணாற்றல், நினைவாற்றல், சொல்லாற்றல், புலக்காட்சி, எண்ணக்கருவாக்கத் திறனாற்றல்.

## விடய ஆய்வுக் கற்கை 1க்கான விடைகள்

1. ஆசிரியர்களால், அதிபரால், குறிப்பாக வகுப்பாசிரியரால் துன்புறுத்தப்பட்டதன் காரணமாக கார் பழுதுபார்க்கும் கராச்சில் ராஜா தொழிலாளியாக வேலை செய்கின்றான் என்பது சம்பவங்கள் மூலம் உறுதியாக்கப்படுகின்றது.
2. முதலில் அவனது நிலையையும், சூழலையும், அவன் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் இனம் காணல், ராஜாவாக நான் என்னை நினைத்துக் கொண்டு, அதாவது அவனது நிலையிலருந்து மேலும் தெளிவாக அவனது பிரச்சினைகளை உணர்ந்து அவனுக்குத் தேவையான உதவியையும் வழிகாட்டலையும் பின்வருமாறு மேற்கொள்வேன்.

   (1) பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வர தாயாருடன் கலந்துரையாடி ஒரு வேலை நேர அட்டவணைப்படி அவனைச் செயற்பட வைத்தல்.

   (2) பாடங்கள் தொடர்பான வீட்டு வேலையின் முக்கியத்துவத்தை உணர்த்தி அதற்கான நேர ஒதுக்கீடு மற்றும் தேவை உதவிகள் தேவைப்படின் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல். ஏழ்மையான பிள்ளை என்ற வகையில் அவனுக்குச் சாதகமான முறையில் அணுகி வழிகாட்டல்.
3. கட்டாயக்கல்வி உரிமை, சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான் உரிமை, ராஜாவினது மனித உரிமைகள்.
4. ராஜாவின் பிரச்சினைகளை மேலான கவனத்துடன் இனம் கண்டு, அவனது வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்களுக்கு சாதகமான, இரக்கமான முறையில் அவனை அணுக வழிகாட்டல் மற்றும் ராஜாவின் தாய், வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்களுடனும் கலந்துரையாடி அவனது கல்விக்குத் தடையாகவுள்ள காரணிகளை அகற்றல்.
5. சிறுவர் கல்வி உரிமையும் பாதுகாப்பும்.
6. பாடசாலை அதிபரினதும், ஆசிரியர்களினதும் கடமைகளில் மாணவர்களை மதித்தல். அவர்களது உரிமைகளைப் பாதுகாத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக முக்கியமானவை. இங்கே ராஜனின் கற்கும் உரிமை, பொருத்தமற்ற தண்டனை வழங்கியமையால் மனித உரிமை மீறல் என்பன நிகழ்ந்துள்ளன. கட்டாயக் கல்விச்சட்டம், சிறுவர் உரிமை பாதுகாப்புச் சட்டச்சரத்து – 28(2) என்பவற்றைக் காரணம் காட்டி குறித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம். கராச் உரிமையாளர் மீதும் கூட சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

7. ராஜன் பாடசாலைக் கல்வியை விட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகின்றது என்ற வகையில் அவனுக்கு தம்பி இன்று கல்வியானது பாடசாலைகளுடனோ, மாணவர்களுடனோ மாத்திரம் தொடர்புடையது அல்ல. கல்வி கற்கும் காலம், வயது, முறைகள் போன்ற எல்லாவற்றிலும் நெகிழ்வுத் தன்மைகள் உள்ளன. நீர் வேலை செய்து கொண்டே பல வகையான பாட நெறிகளை, பாடசாலைகளில் மாலை நேரங்களில் நடைபெறும் முறைசாராக் கல்விப்பிரிவு, விடுமுறை நாட்களில் நடைபெறும் தொழிலுநுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக்கழகம், வேறு தனியார் நிறுவனங்களிலும் பயிலலாம் என வழிகாட்டலாம்.

## குறிப்புரை – 1

1. இலங்கையில் 5–14 வயதுடைய பிள்ளைகள் கட்டாயக் கல்வி பெற வேண்டும் என்ற சட்டம் அமுலில் உள்ளது. இதற்குத் தடையாகவுள்ளோர் சட்டப்படி தண்டிக்கப்படுவர்.

2. சிறுவர் மீதான எல்லா உடல்–உளவன்முறைகளில் இரந்தும் பாதுகாப்பதற்கு அவர்களுக்குள்ள உரிமையை ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைச் சாசனம் மூலம் (convention on the right of the child) இலங்கை நாடும் அங்கீகரித்துள்ளது. இதன் பிரகாரம் சிறுவர் உரிமைகளுக்கும் கௌரவத்திற்கும் ஏற்றதாக பாடசாலை ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படுவதை நிச்சயப்படுத்த சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மீறப்படும் சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம். – சரத்து 28(2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 02

# விடய ஆய்வில் - ஆய்வுத்திறன்

கல்வியியலில் ஆய்வுத் திறன் என்பது உண்மையைக் கண்டறியும் புலப்பயிற்சியாகும். இது தொடர்ச்சியான தேடலை முன்னெடுக்கின்றது. அறிவைத் தேடுதலும், அதனூடு பிரச்சினைகளை இனம் கண்டு தீர்த்தலுக்கும் ஆய்வுத்திறன் உதவுகின்றது. மேலும் புதிய அறிவைத் திரட்டுவதற்குரிய ஒழுங்கமைந்த செயல் முறைகளை முன்னெடுக்கவும் வழிகாட்டுகின்றது. ஆய்வியல் திறன்களின் வழியாக சரியான விடைகளை, கண்டுபிடிப்புக்களை, புத்தாக்கங்களை முன்வைக்கலாம். புதிய தீர்வுகளை எண்ணக் கோலங்களையும் உருவாக்கி – தரவுகளைச் சேகரித்தல், ஒழுங்கமைத்தல், புடமிடுதல், மதிப்பீடு செய்தல், தொகுத்தல், சரியான முடிவுகளை நோக்கி வருதல் எனப் பல பரிமாண கல்வியியல் பிரச்சினைகளைத் தீர்க்க ஆய்வுத்திறன் வகை செய்கின்றது.

அனுபவங்களைப் புதிய முறையில் தொகுத்தமைத்து பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆய்வாகின்றது. இதனைப் புதிர் தீர்த்தல், பிரச்சினை தீர்த்தல், முரண்பாடு தீர்த்தல் எனப் பல வகைகளில் அணுகுகின்றனர். பிரச்சினைகள் இன்றி ஆய்வுகள் தோன்றுவதில்லை. ஒரு குறிப்பிட்ட கல்வி இலக்கை அடைய முயலும் போது ஏற்படும் தடைகளையும், குறுக்கீடுகளையும், பிரச்சினைகளையும் போக்க ஆய்வுத்திறன் பயன்பட்டு சரியான தீர்வைக்காண வைக்கின்றது. கல்வியியல் ஆய்வுகள் :-

1. குறித்த ஒரு விடயம், பிரச்சினையைச் சரியான திசையில் உணர்தல். அல்லது புதிர் அறிதல்.
2. குறித்த பிரச்சினையைத் தீர்க்கப் பயன்படக் கூடிய விடயங்கள், சந்தர்ப்பங்கள், செய்திகள் யாவற்றையும் தேடித்தொகுத்தல்.
3. இவற்றிலிருந்து எதிர் நோக்கியுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவக்கூடிய பல்வேறு உத்திகளை அமைத்தல்
4. இவ்வுத்திகளைச் சரிபார்த்து பிரயோகிக்கத் திட்டமிடல்.
5. குறித்த திட்டத்தைப் பிரயோகித்துத் தீர்வு காணல் என்ற வகையில் நோக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் தோன்றும் போதே ஆய்வினூடாக அதைத் தீர்க்கும் அணுகுமுறைகளும் தோன்றுகின்றன. பிரச்சனை அல்லது சம்பவமானது நம்மைப்பாதிக்கக் கூடியது என உணர்ந்தால் தான் நாம் இயல்பாகவே ஆய்வின் மூலம் சரியான தீர்வுக்கு இட்டுச் செல்லப்படுவோம். இவ் வகையிலேயே விடய ஆய்வுக் கற்கைகளில் வரும் முரண்பாடுகள் பிரச்சினைகள், சம்பவங்களின் பாத்திரங்களில் எம்மையே பொருத்தி தீர்வு காண முனையும் அணுகு முறைகள் பின்பற்றப்படுகின்றன. மற்றும் விடய ஆய்வுச் சம்பவங்களில் செய்திகளையும், தகவல்களையும், தேடித் தொகுத்தலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இதற்குத் தகவல் தொடர்பாடல் திறன் உதவுகின்றது. சரியான தகவல்கள்:-

* சரியான தீர்மானங்கள் எடுப்பதற்கு,
* முரண்பாடுகளைத் தடுப்பதற்கு,
* நிச்சயமற்ற தன்மைகளைக் குறைப்பதற்கு,
* கல்வி அபிவிருத்திக்கு,
* கருத்துக்களை உறுதிப்படுத்துவதற்கு,
* பிறர் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு,
* ஆளணியினரை ஊக்குவிப்பதற்கு,
* வெற்றிகரமான முகாமைத்துவத்திற்கு உறுதுணையாககின்றன.

தகவல்களைச் சம்பவங்களை அலசி ஆராய்ந்து பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய கருத்துக்களையும், செயல் முறைகளையும் உருவாக்குதலை கருதுகோள்கள் எனலாம். கருதுகோள்கள், செய்திகள், தகவல்கள், சம்பவங்களிடையே நமக்குப் பயன்படக் கூடிய புதிய தொடர்புகளை ஆய்வுத்திறன் மூலம் கண்டுபிடிப்பதால் தோன்றுவனவாகும். இத்தகைய பயன்படத்தக்க புதுத்தொடர்புகள் நமது உள்ளத்தினால் படைக்கப்படுகின்றன. இதற்குப் படைப்பாற்றல் திறன் அல்லது ஆக்கத்திறன் வழிகாட்டுகின்றது. விடய ஆய்வில் ஒரு பிரச்சினை பற்றிய பல கருதுகோள்கள் எழக்கூடும். இவற்றில் ஒரு கருதுகோள் மட்டுமே உண்மையில் பிரச்சினையின் விடையாக அமையும். இதனைக் கண்டறிவதற்கு அல்லது உறுதிப்படுத்த எல்லாக் கருதுகோள்களையும் சரிபார்த்து மதிப்பிடுதல் முக்கியமானது.

ஒரு உண்மைக் கட்டமைப்பை நிறுவுவதற்கு அல்லது நிராகரிப்பதற்கு உதவும் முன்னேற்பாடான படிநிலையாகவும் கருதுகோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். குறிப்பிட்ட சம்பவம், விடயம், துறை சார்ந்த ஆய்வு பற்றிய தோற்றப்பாடுகளை அறிவியல் அடிப்படையில் விளக்குவதற்கு உரிய முன்னேற்பாடாகவும் இதனைக் கொள்ளலாம். கருதுகோள்களை அமைத்து தகவல்களை மீள் பரிசீலனை செய்து புதிய செய்திகளையும், மெய்மைகளையும் (facts) கண்டறிய வேண்டி இருக்கும். இதற்குப் பல்வேறு ஆய்வியல் அணுகுமுறைகள் உதவும். (ஒப்பியலாய்வு, வரலாற்றாய்வு, புள்ளிவிபரவியல் முறைமை, வினாக்கொத்து முறைமை, நேர்காணல், பொதுசனக்கருத்து, சர்வதேச வலைப்பின்னல் தகவல் முறைமை, வெளியீடுகள்) இவற்றுடன் விடய ஆய்வுச் சம்பவங்களின் பாத்திர நடத்தைகள், மனப்பாங்குகள், பிரச்சினைகள், முரண்பாடுகள் என்பவற்றை உய்த்தறிந்து உண்மைகளைக் கண்டறிய பின்வரும் உளவியல் அணுகு முறைகளும் உதவுகின்றன.

1. அக நோக்கல் முறை (Method of introspection)
2. உற்று நோக்கல் முறை (Objective observation method)
3. வாழ்க்கைத் துணுக்கு முறை (Anecdotale method)
4. பரிசோதனை முறை (Experimental method)
5. வளர்ச்சி முறை (Development method)
6. தனியாள் வரலாற்று ஆராட்சி முறை (Case-history method)
7. புள்ளி விபரவியல் முறைகள் (Statistical method)
8. வினா வரிசை முறைகள் (Questionnaire method)

**விடய ஆய்வுக்கற்கை – 2**

..... எனது பெயர் வசந்தன் என் இதய நெருடல்களையும், வேதனைகளையும் உங்களுடன் பகிர்வதில் அவாவுறுகின்றேன். நாங்கள் சிறுவர்கள் எமது கற்பனைகள், ஆசைகள், அவாக்கள் என்பவற்றை வெளிப்படுத்த அவாவுற்றோம். ஆனாலும் சந்தர்ப்பங்கள் கடைசி வாங்கிலுள்ள குளப்படிகாரர் என்ற பெயர் பெற்ற எமக்குக் கிடைக்கவில்லை. எமது உணர்வுகளை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்புக்கள் தரப்படவில்லை. ஏனையவர்களுக்கு வாய்ப்பளிக்கும் ஆசிரியர்கள் எமது உணர்ச்சிகளை வெளிப்படுத்த ஏன் அனுமதிப்பதில்லை. இவர்கள் சிறுவர்களாகிய எமக்கு உணர்வுகள் உண்டு என்பதையே மறந்து விடுகின்றார்கள் எதையும் விளங்கிக் கொள்ளாமல் மறப்பதென்பது சிறுவர்களாகிய எமக்குக்கூட நிகழ்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் வகுப்பில் கடைசிப் பிள்ளையாக வந்தேன். ஆனாலும் பாடசாலை செல்ல விரும்பினேன். அன்றிலிருந்து மேலும் அட்டகாசம் மிக்கவனாகவும், கெட்டுப்போனவனாகவும் காணப்பட்டேன். மற்றப்பிள்ளைகளுக்கு அடிப்பதுடன், அவர்களில் சிலருக்கு இனிப்புப்பண்டங்கள் வாங்கிக் கொடுக்க வீட்டில் காசும் திருடினேன். தோல்விக்கு நான் முக்கியமானவனாக இருக்க வேண்டும் என்பதற்காக எனக்கு ஏமாற்றத்தைத் தந்த பரீட்சை முடிவுக்காக; என் செயற்பாடுகள் தீவிரமாகின. வகுப்பாசிரியரும், அதிபரும் அடித்தமைக்காக, இரு நாட்காலிகளை எல்லா மாணவர்களுக்கும் முன்னால் அடித்து நொருக்கினேன். வகுப்பாசிரியரின் சைக்கில் சில்லுக்கு பதினாறு முறை ஊசியால் குத்தினேன். வகுப்பறையில் பொறுமையை இழந்து பாடத்தைக் குழப்ப பின் வாங்கு நண்பர்களுடன் சேர்ந்து சத்தமிட்டேன். விசில் அடித்தேன்.

பாடசாலையில் ஒருநாள் இரவு களவு போய் இருந்தது. பொலீசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று பாடசாலையிலிருந்து விளையாடி விட்டு கடைசியாகப் போனமை என்ற காரணத்துக்காகவும், நான் முன்னர் செய்த குழப்படிகளுக்காகவும் அதிபரால் பொலிசாருக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டேன். அவர்களால் விசாரிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு மூன்று நாட்கள் பொலீஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டேன். பின் நீதி மன்றத்தில் ஆஜராக்கப்பட்டு பெற்றோரின் முயற்சியால் வீடு வந்துள்ளேன். பாடசாலைக்குச் செல்ல விருப்பமில்லை. அதிபரைக் கொலை செய்து விட்டு பாடசாலையை எரித்து விட வேண்டும் போல் உள்ளது.

**– உண்மையில் நடந்த சம்பவம் –**

1. வசந்தன் பாடசாலையில் எதிர்ச் செயற்பாட்டு நடத்தைகளைக் காட்டுவதற்கான காரணம் என்ன?
2. அவன் இத்தகைய நடத்தைகள் மூலம் பெற்றுக்கொள்ள விளைவது என்ன?
3. அவனது நடத்தைகளை மேலும் தூண்டிய காரணிகள் எவை?
4. அதிபரின் அணுகுமுறை சரியானதா காரணம் தருக?
5. நீர் அவனது வகுப்பிற்குப் புதிய வகுப்பாசிரியராக நியமனம் பெற்றால் அவனை நெறிப்படுத்த எவ்வாறான அணுகுமுறையை மேற்கொள்வீர்?
6. அவனது இறுதி நிலையிலிருந்து விடுபட எவ்வாறான வழிகாட்டலை வழங்கலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆக்கத்திறன்:**

விடய ஆய்வுக் கற்கைகளில் வெற்றி பெற ஆய்வுத்திறனுடன் ஆக்கத் திறன் தொடர்பான ஆற்றலும் தேவையாகவுள்ளன. ஆக்கத் திறனைத் தீர்மானிப்பதற்குப் பின்வரும் நான்கு நியதிகள் பயன்படுகின்றன. இவை கல்வியியல் விடய ஆய்வுக் கற்கைகளை வெற்றிகரமாக அணுக உதவும்.

1) **பொருத்தமான தன்மை** – பிரச்சினைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் தேவைகளுக்கும் பொருந்தும் தன்மை.
2) **மாற்றிப்பயன்படுத்தல்** – ஒரு விடயத்தை அல்லது பொருளைக் கையாளும் போது அணுகு முறையில் உண்டாகும் தீவிர இடப்பெயர்ச்சி
3) **புதுமை** – ஆக்கப்படுவது புதிதாகவும், தனித்தன்மை வாந்ந்ததாகவும், பொதுவாகக் காணப்படாததாகவும் இருத்தல்.
4) **சுருக்குதல்** – ஒரு விடயத்தை விரிவாக அல்லது தேவையற்றவையகளை இணைத்து விளக்கிக் கூறாமல் சுருக்கமாக விடயத்தைச் சரியாகக் கூறுதல்.

இவை எண், குறியீடு, மொழி, தொடர்பாடல் என்பவை மூலம் மனிதர்களிடையே விருத்தியாகும். ஆக்கத் திறன் சக்தி பல்வேறு பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க உதவும். இது விட ஆய்வுக் கற்கையை விருத்தியாக்கும் வழியாகவுமுள்ளது. ஆக்கத் திறனானது ஒரு சிந்தனையாளரை அல்லது முகாமையாளரை அல்லது பிரச்சினை தீர்ப்பாளரை அவருடைய வழமையான சிந்தனைத் தொடரிலிருந்து விலகச் செய்து, வேறுபட்ட ஆக்கபூர்வமான சிந்தனைத் தொடருக்கு வழிசமைக்கின்றது. அதன் விளைவு எல்லோருக்கும் பயனுடையதாக இருத்தலேயாகும். இவ் ஆக்கத்திறனை விளக்கும் செயற்பாடுகளாக பிரச்சினைகள் குறித்த நுண்ணுணர்வு, எண்ணங்களில் தடங்கலின்மை, நெகிழ்ச்சி, புதியன புனையுந் திறன், மீள் வரைவிலக்கணங்கள், மீள ஒழுங்குபடுத்தும் ஆற்றல், கிரகிக்கும் ஆற்றல், தொகுப்பு, முடிவுக்கு வருதல் என்பன உள்ளன. ஆக்கத் திறனை விருத்தி செய்வதற்குப் பின்வரும் பத்துப் பண்புகள் தரப்படுகின்றன. இவை கல்வியியல் விடய ஆய்வுகளை வெற்றிகரமாக அணுகவும் வழிகாட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. விழிப்பு – சுற்றாடல் தொடர்பான உணர்வு, அவதானம் செலுத்தி தகவல்களைச் சேகரித்தல்.
2. பதிவாக்கத்தன்மை – இலக்குகளைத் துணிதலும், அடைதலும், நம்பகமும், கூர்ந்து கவனம் செலுத்துதலும் கடமைகளைத் துணிவதில் பொறுமை.
3. ஆபத்து நிலைமைகளை எதிர்நோக்கல் – மாற்று அணுகுமுறைகளை அமைத்துக் கொள்ளும் அனுபவமும் திறனும்.
4. உணர்ச்சித்திறன் – மானிட உணர்வுகளை இனம் காணல், பிரச்சினைகளை இனங்காணல். எல்லோரையும் பற்றிய விழிப்புணர்வு, ஏனையோரை அவதானித்தல்.
5. புதுமை நாட்டம் – சம்பவங்கள், தகவல்கள், தொடர்பான உள ரீதியான காரண–காரிய விளைவுகளிலான நாட்டம்
6. கற்பனை – புதிய கருத்துக்களை உருவாக்கல், சிந்கனை செய்தல், புதிய தொடர்புகளை, கண்டுபிடிப்புக்களை உருவாக்கல்
7. சொல்லொழுங்கு – பல தூண்டல்களையும், துலங்கல்களையும் பிறப்பித்தல், தகவல்களைச் சேகரித்து மாற்று வழிகளைக் காணும் ஆற்றல்.
8. நெகிழ்ச்சித்தன்மை – பல்வேறு கோணங்களில் விடயங்களை நோக்கல், தன் மூல அபிப்பிராயத்தை திருத்தி அமைத்துக் கொள்ள இணக்கம் காட்டல். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மாற்று அணுகுமுறைகளைப் பரீட்சித்துப் பார்த்தல்.
9. புதிதுகாணாற்றல் – புதிய கருத்துக்கள் தொடர்பாகச் சிந்தித்தல், தனிச் சிறப்பான தீர்வுகளைக் காணல், அடிப்படைத் திட்டங்களை உருவாக்கல்.
10. விரிவுபடுத்தல் – இருக்கும் அறிவை விரிவுபடுத்தல், கருத்தியல்களை விரிவாக்கல்.

**விடய ஆய்வுக் கற்கை–2 இற்கான விடைகள்**

1. வகுப்பில் புறக்கணிக்கப்பட்டமையும், வகுப்பில் தான் கடைசிப் பிள்ளையாக வந்ததால், தான் முக்கியமற்றவன் என்ற உணர்வும், அவனது தன்மானமும், பாதுகாப்பும் உள்ள முக்கியஸ்தன் என்ற தேவைகள் நிறைவேற்றப்படாமையும் எதிர் நடத்தைகளுக்குக் காரணமாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தான் ஒரு முக்கியமானவன் என்பதைத் தனது வகுப்பிலுள்ள ஏனையோருக்கு உணர்த்தி அதன் மூலம் தன்னை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் படி செய்ய.
3. அவனது வயது, குணவியல்புகள், புறக்கணிப்பால் ஏற்பட்டட விரக்தி, பாடசாலைச் சூழலும் கற்கும் ஆற்றலிலுள்ள பின்னடைவும், அதிபரின் செயற்பாடுகளும்.
4. பிழையானது நெறிபிறழ்ந்த மாணவர்களை சரியான வழிக்குக் கொண்டு வரும் அணுகுமுறைகளில் தற்போது மிகப்பிரபல்யம் வாய்ந்தது அவனது உளவியல் பாதுகாப்பிற்கு உகந்த அன்பு, பரிவை முதலில் காட்டுவது, அவனை தனியாள், வாழ்க்கைத்துணுக்கு, உற்றுநோக்கல் முறை உளவியலாய்வுகளுக்கு உற்படுத்தி, சரியான வழியைக் காண உதவியளித்தல். இதற்குப் பெற்றோர் ஏனைய ஆசிரியர்களின் உதவிகளைப் பெறல்.
5. ஐந்தாவது வினாவுக்கான விடை நவீன விடய ஆய்வுகளின் அணுகு முறையினூடாக இங்கு தரப்படுகின்றது. அதாவது குறிப்பிட்ட விடய ஆய்வின் பாத்திரமே தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைத் தானே கூறும் முறையியலைப் பயன்படுத்தி இங்கு தரப்படுகின்றது.

....."இதைப் பார்க்கும் போது என்னை நினைத்துக் கொள்" அந்த வார்த்தைகள் எமது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியது. புதிதாக வந்த ஆசிரியை முதல் முதல் என்னை அணுகி எனக்கு ஒரு உறுப்பெழுத்துக் கொப்பியைத் தந்தார்..... அன்றிலிருந்து எனக்குப் பாடசாலையில் ஒரு இடம் உண்டு என்ற நம்பிக்கை என்னிடம் பற்றிக் கொண்டது. அப்போதிருந்தே என் நடத்தைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. என் வாடழ்க்கைப் புத்தகத்தில் கல்வி என்ற மகிழ்ச்சியான பக்கம் கிழிக்கப்பட்டு விட்டது என்ற என் ஏக்கம் மறைந்தது. எமது உணர்வுகளை வெளியிட பல வாய்ப்புக்கள் கிடைத்தன.

நாடகம் நடிக்கச் சேர்க்கப்பட்டேன். என்னால் பிழையாக எழுதப்பட்ட ஆக்கங்கள் ஆசிரியையால் திருத்தப்பட்டு வகுப்பறையில் வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இது ஊக்கத்தை ஏற்படுத்தியதுடன் புதிய ஆக்கங்களையும் எழுதத் தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்படியாகச் சிறுகதை வாசிக்க எல்லா மாணவர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது. அன்றொரு நாள் சோகமான சிறுகதை ஒன்றை நான் வாசிக்க வேண்டியதாயிற்று. உணர்ச்சி ததும்ப வாசித்தேன். வகுப்பிலுள்ள சகலரும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கண்கள் கலங்க மௌனமாக இருந்தனர். "அங்க எங்கட ரீச்சர் கூட அழுகிறா"

எமது ஆசிரியை தனது உணர்ச்சிகளை மாணவக் குழந்தைகளாகிய எம்மிடம் போலியாக மறைக்க முன்வரவில்லை. இது கூட அன்பையும், நேர்மையையும் ஏற்படுத்தும் நல்ல விளைவுதான். எமக்கு இரக்க உணர்ச்சி மேலிட்டது நாமெல்லாம் சேர்ந்து ஆசிரியைக்கு ஆறுதல் கூறினோம்.....

இன்று நினைத்துப்பார்க்கின்றேன். பின்னுக்கிருந்த என்னை ஆசிரியை எப்படி முன்னணிக்குக் கொண்டு வந்தார். எனது குறித்த ஒவ்வொரு இன்னல்களுக்கும் மேலதிக உதவி செய்தார். எப்படி? எனது பிரச்சினைகளைத் தெரிந்து மதிப்பிட்டார். விளங்கிக்கொண்டார். உதவி நடவடிக்கைகளை செயற்படுத்தனார். என்னுடனும், பெற்றோருடனும் ஏனைய ஆசிரியர்களுடனும் கலந்தாலோசித்து மேலும் வழி காட்டினார். இவ்வகையில் கற்றவை கவர்ச்சி மிக்க செய்முறையாக்கும் கொடையாளியாக இருந்து ஒளியேற்றினார். ஆசிரியை சற்று வித்தியாசமான முறையிலும் என்னை அணுகினார். ஆரம்பத்தில் என்னிடமிருந்து பலவற்றை அவர் கிரகித்துக் கொண்டார். எனது தீய செயல்களின் போது ஆசிரியை காட்டும் அலட்சியத்தையும், எரிச்சலூட்டும் செயற்பாடுகளையும் பெற்றுக் கொள்வதற்காகப் போராடினேன்.

ஆசிரியை கற்பித்துக் கொண்டிருக்கும்போது வேண்டும் என்றே வகுப்பபைக் குழப்பினோம். பல எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். எம்மைப் போன்றவர்களை எப்படிக் கையாள்வது என்று உளவியல் நூல்களில் எழுதி வைத்திருக்கலாம். ஆனால் நடைமுறையில் வெற்றி பெறுவதென்பது மிக மிகச் சிரமமானதே. இவை எல்லாவற்றையும் தீர்க்க முதன் முதலில் எமது ஆசிரியை எம்மை நேசித்தார். அதுவே பெரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர் எமக்குப் போதித்ததை விட எம்மிடமிருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டார். எம்மை எல்லோரும் வெறுக்க அவர் உரிமையுடன் நேசித்தார். எம்மைச் சிறந்த மாணவராக்கி கல்வி விளக்கேற்றிய பெருமை அத்தியாகச் செம்மலையே சாரும். என் இதயக் கோவிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதும் தெய்வமாக அவர் உள்ளார். எனது பாடசாலையைக் கோவிலாகவே வணங்குகின்றேன்.!!....

இப்பதில் விடய ஆய்விலிருந்து ஐந்தாம் வினாவுக்கான விடையை எழுதுங்கள்

6. வசந்தன் மன இறுக்க நோய்க்கு உட்பட்டிருக்கலாம். அவன் மிக மோசமான பாதிப்பை அடைந்துள்ளான். அதிலிருந்து விடுபட அவனது பின்னணியை மேலும் ஆராய்ந்து சில வாரம் வெளியூறுக்கு பெற்றோருடன் அனுப்பப்பட்டு அவர்களுக்கும் குறித்த ஆலோசனை வழங்கி அவனது வேகமும், மன இறுக்கமும் குறைவடைய வேறு ஒரு பாடசாலையில் அவனது தனியாள் வேறுபாட்டுக்கு உகந்த சூழலில் கற்க வழிகாட்டலாம்.

**குறிப்பு:**

1. ஆராய்ந்தறிதல் திறனூடாக பிள்ளையிடமே காரணிகளை அளித்தல், சம்பவங்கள் மூலமாக அறிதல், ஆரம்பச்சம்பவம், நிகழ்வு, பிரச்சினைகள், முரண்பாடுகளை அறிதல், நடத்தைகளின் பலாபலன்களை அறிதல், நிறைவேறாக் காரணிகளைக் கண்டறிதல், சந்தர்ப்பங்களுக்கேற்ப நடத்த மாற்றத்திற்கான காரணிகளைக் கண்டறிதல் என்பவற்றினூடாக விடய ஆய்வின் பரிமாணங்களை உணர முடியும்.

2. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தலையீட்டுச் செயற்பாடுகளாக, மாணவர்களின் தேவைகளைப் பூரணமாக நிறைவேற்றல், வளர்ந்தோருடனான சிறந்த உறவை வலுப்படுத்தல், பிள்ளைகளே பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு தீர்வுகாண வழிகாட்டல், தம் அசௌகரியங்களை, உணர்வுகளை, வெளிக்காட்ட இடம் கொடுத்தல், உதவி செய்தல், ஆராய்ந்தறிதலுக் கேற்ப விசேட பிரச்சினைகளுக்கான காரணிகளை இல்லாமற் செய்தல், ஊக்கல்–தேவை தொடர்பான உளவியற் கொள்கைகளைப் பிரயோகித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 03

## கற்றல்-கற்பித்தல் முறையாக விடய ஆய்வு

இன்றைய நவீன சிக்கலான ஆற்றல் மிகுந்த சமுதாயத்திலே தகவல்கள், அறிவு, ஆற்றல்கள், திறன்கள், தேர்ச்சிகள், நம்பிக்கைகள், மனப்பாங்குகளை அடைவதற்கான ஏதுக்களை கல்வி வழங்குகின்றது. ஒருவருக்குக் கல்வி புகட்டுதல் என்பது ஒரு கூட்டு முயற்சியாகும். இதில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மிகுந்த முக்கியத்துவமுடையவையாகக் காணப்படுகின்றன. கற்றல்-கற்பித்தல் முறையியல்களும், நுட்பங்களும் மிகப் பல வகையாகவுள்ளன. ஒரு தலை முறை மனிதர்கள் தாம் பெற்ற அறிவையும் அனுபவங்களையும், ஆற்றல்களையும் அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கும் பாங்கே அதாவது கற்றல்-கற்பித்தல் செயன் முறையே இன்றைய மனித இனத்தின் வியத்தகு விருத்திக்குக் காரணமாகவுள்ளது. சனத்தொகை அதிகரிப்பு, அறிவியல் விருத்தி, உளவியல்-விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், கற்போரின் தொகை அதிகரித்தமை காரணமாக கற்றல்-கற்பித்தல் முறையியல்களும் அதிகரித்தன.

கற்கும் முறையியல்களுக்கு உதாரணமாக, குழுவாகக்கற்கும் முறை, கண்டுபிடித்தக் கற்கும் முறை, செயற்றிட்டமுறை, பங்கேற்றுக் கற்றல் எனப்பல வகையாகவுள்ளன. இவ்வாறே திட்டமிட்ட கற்றல் குறிக்கோள்களை மாணவர் அடைய ஆசிரியர்கள் கைக்கொள்ளும் கற்பித்தல் முறைகளுக்கு உதாரணமாக, விரிவுரை, கலந்துரையாடல், வினாவிடை, விதிவிளக்க, வெளிக்களச் சுற்றுலா, விளையாட்டு, செயல்முறை, செய்துகாட்டல், பரிசோதனை, முயன்றுதவறுதல், ஒப்படை, குழுவேலை, சிந்தனை கிளறல், நாடகமாக நடித்தல், நுண்முறை அணிமுறைக் கற்பித்தல் முறைகள் எனப்பல வகையாகவுள்ளன.

இவற்றுள் கற்றல்-கற்பித்தல் இரு முறைகளுக்கும் பொருந்துவதாக வளர்ந்தோர், தொழிற் கல்வி என்பவற்றில் சிறப்பாகப் பின்பற்றக் கூடிய கற்றல் - கற்பித்தல் முறையாக விடய ஆய்வுக் கற்கை முறை விளங்குகின்றது. முகாமைத்துவம், மருத்துவம், சட்டம், இராணுவம், கல்வியியல், ஆசிரியர் கல்வி, வணிகத்துறை, வங்கித்துறை ஆகியவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்–சேவைப் பயல்வுகளில் இன்று விடய ஆய்வுக் கற்கை முறை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவுமுள்ளது. மனிதன் சமூக விலங்கு. இடையறாது இடைவினைகளினூடே தன் வாழ்வை, கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றான். இவ் இடைவினைகளின் போது மனிதத் தொடர்புகளின் போது, பல்வேறு பிரச்சினைகளும், நடக்கக் கூடாத சம்பவங்களும் ஏற்பட்டு விடுகின்றன. இவற்றை வருமுன்பே தடுக்கவும், பிரச்சினையான சம்பவங்களை எதிர் கொள்ளும் போது சரியான முடிவுகளை எடுக்கவும் விடய ஆய்வுக் கற்கை முறையியல் பல பரிமாணங்களில் வழிகளைக் காட்டுகின்றது. முன்சேவைப்பயிற்சியைப் பெறும் பயிலுநர்கள் தமது தொழிலில் வாண்மைத்துவ நிலையை அடைய தமது தொழில் சார்ந்த பிரச்சினைகளை விடய ஆய்வுகள் மூலம் கற்றுத் தேறலாம்.

மேலும் இன்று அரசாங்க உயர் சேவைகளான நிர்வாக சேவை, கல்விநிர்வாக சேவை, அதிபர் சேவை, மற்றும் ஏனைய தொழிற்துறை சேவைகளுக்கு ஆளணியினரைத் தெரிவு செய்வதற்கும் விடய ஆய்வினைப் பயன்படுத்துகின்றனர். மற்றும் நேர்முகப்பரீட்சைகளிலும் பிரச்சினை தொடர்பான சம்பவத்தைக் கூறி விடய ஆய்வு அணுகுமுறையில் தீர்வுகளைக் காணுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றனர். எனவே விடய ஆய்வுக் கற்கையைப் பயில்வதன் மூலம் பரீட்சைகளில் வெற்றிகண்டு உயர் பதவிகளை அடையலாம். பதவியுயர்வுகளைப் பெறலாம். ஒரு தொழிலைப் பெறலாம். அததோடு இக் கற்கையைப் பயில்பவர்கள் தமது தொழில் திறன்களை, ஆற்றல்களை, வளர்த்துக் கொள்ளலாம். நிபுணத்துவ வாண்மையினராகலாம். ஏனையவர்களுக்கு வழிகாட்டலாம். சிறந்த முகாமையாளராக, கல்வியாளராக, தலைவராகத் திகழலாம்.

ஆசிரியர் முன் சேவைப்பயிற்சி நெறியில் கற்பித்தல் தொழில் என்ற வகையில், தொழில் சார் விருத்தியும், வாண்மைத்துவ இலக்கும் தொடர்பான கற்கைக்கான ஒரு விடய ஆய்வு கீழே தரப்படுகின்றது.

**மாதிரி விடய ஆய்வுக் கற்கை:–**

மோகன் கல்விக் கல்லூரியில்முன்–சேவைப்பயிற்சியை சரியாக நிறைவேற்றியுள்ளார். தமக்கு ஒப்படைக்கப்பட்ட கற்பித்தல் பணியை மேற்கொள்ள அவர் நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றார். கல்விக் கல்லூரியில் சிறந்த மாணவன் என்று நண்பர்கள் மோகனைக் கருதினர். பாடவிடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக ஏதும் உதவி தேவைப்படும் போது மாணவர்கள் மோகனை நாடினர். மோகனுக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது.

கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் முதலாம் தவணையைக் கழித்த அவருக்கு அதிக களைப்பு தென்பட்டது. அவரது வகுப்புக்களின் பாடத்தை ஆயத்தம் செய்வதற்கு சில வேளைகளில் அதிக நேரத்தைச் செலவிட வேண்டி இருப்பதை உணர்ந்தார். இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெற்ற பரீட்சைகளுக்கும் தயாராவதற்கே அவர் வார இறுதி நாட்களை உபயோகித்தார். அவரின் நடத்தை, கற்பித்தல் பிரவேசம் என்பவற்றை மாணவர்கள் வரவேற்ற முறை பற்றி அவருள் திருப்தி ஏற்பட்டது.

பெறுபேறுகள் சிறப்பாக அமைபினும் மாணவர்கள் அவரின் கற்பித்தல் தொடர்பாக திருப்தியடையவில்லை. அவரின் ஒரே வகையான குரலை தொடர்ந்து கேட்டதில் மாணவர்கள் களைத்து விட்டனர். அவரின் உயர்வுச் சிக்கல் மாதிரி குறித்து மாணவர்கள் மன விரக்கதியடைந்தனர்.

அடுத்த தவணை ஆரம்பமாவதற்கு முந்திய தினம் அவருக்கு தபாலில் ஒரு கடிதம் வந்திருந்தது. அது தனது ஒரு மாணவனின் கையெழுத்து என்பதைப் புரிந்து கொண்டாலும் யாருடையது என்பதை நிச்சயமாகத் தெரியவில்லை. அவருக்கு அதிகமாகக் கடிதங்கள் வருவதில்லை என்பதால் ஆசையாக உறையைப் பிரித்து கடிதத்தை வெளியே எடுத்தார். அதில் எழுதியிருந்தது.

**மோசமான ஆசிரியருக்கான**
**உயர் பரிசு**

**வினாக்கள்:-**

1. மோகன் தன்னைப் பற்றி கவனமெடுக்க வேண்டுமா?
2. நீங்கள் மோகன் எனின் எந்த விடயத்தில் கவனம் செலுத்துவீர்கள்?
3. நீங்கள் மோகனின் ஆலோசகர் என்ற வகையில் அவருக்கு வழங்கும் ஆலோசனை யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கேள்விகளுக்கான விடைகளை நீங்களே எழுதலாம். ஆசிரியர் தொழில் சார் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை செயற்பாட்டு நிலையில் ஆராய்வதற்கான விடய ஆய்வுச் சம்பவமே மேலே தரப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் தொடர்பான சிறந்த மதிப்பீட்டாளர்கள் அவர்களிடம் கற்கும் மாணவர்களே.

**விடய ஆய்வுக் கற்கை – 3**

யாழ்ப்பாண மாவட்டத்தில் தூரவுள்ள கிராமப்புற, நகரத்தை அண்டிய சேரிக் குடியிருப்புகளுக்கு மத்தியிலிருக்கும் பாடசாலைகளில் க. பொ. த சாதாரண தரம் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்கள் கூறிய கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றது.

... நான் இப்பாடசலையில் நான்கு வருடங்கள் கற்பிக்கின்றேன். வந்ததிலிருந்து இங்கு கற்கும் பெரும்பாலான பிள்கைளகளின் பெறுபோறுகள் குறைவாகவேயுள்ளன. இதற்குக் காரணம் பிள்ளைகள் மக்குகளாகவுள்துடன் பெற்றோரும் கல்வியறிவு இல்லாதவர்களாக உள்ளனர். தரம் 11 இல் உள்ள பெரும்பான்மையினர் தரம் 5 அடிப்படை அறிவே இல்லாதவர்கள். நலிவான பிள்ளைகளுக்கு உதவ என்னால் முடியாது. அப்படிச் செய்தால் பாடத்திட்டத்தைப் பூர்த்தியாக்கவில்லை என மேலிடத்திலிருந்து கெட்ட பேர் வரும். மேலும் பிள்ளைகளின் பாடவேளைகளுக்குப் பெற்றோரால் உதவ முடியாவிட்டால் எம்மால் எப்படி உதவமுடியும்? – நான் பாடத்திட்டத்தை முடித்துள்ளேன். படிக்கும் வேலை பிள்ளைகளைப் பொறுத்தது. எல்லோரையும் சித்தியடையச் செய்ய என்னால் முடியுமா?

... எனது பாடசாலையில் கடந்த மூன்று வருடங்களாக கணித பாட ஆசிரியர் இல்லை. நான் இந்த வருடமே இங்கு கடமை ஏற்றேன். கணித பாடத்தில் மாணவர்களின் அடைவுகள் குறைவாக இருந்ததுடன், கணித பாடத்தைக் கற்க மாணவர்கள் ஆர்வம் அற்றும் இருந்தனர். நிலமைகளை ஆராய்ந்த நான் கணிதம் கற்பித்தலை விட கற்றலுக்கான வாய்ப்புக்களையும், சந்தர்ப்பங்களையும் பிள்ளைகளுக்கு அளித்தலையே மேற்கொண்டேன். இச் செயற்பாட்டிற்குப் பிள்ளைகள் சிறப்பாகத் துலங்கத் தொடங்கினர். கணித பாடத்தில் ஆர்வம் அதிகரித்தது. இயலாத பிள்ளைகளுக்கு இயன்ற பிள்ளைகள் உதவ வழிகாட்டி அதிலும் வெற்றி பெற்றேன். அன்றோருநாள் திடீர் என வந்த திணைக்களப் பரிசோதனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவினர் பாடசாலையைத் தரிசித்தனர். என் மீது உரிய காலத்தில் பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. நான் நிலமைகளை விளக்கினேன். என்னுடன் முரண்பட்ட அவர்கள் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் கணித பாட அலகுகள் உரிய காலத்தில் கற்பிக்கப்படவில்லை என எழுதிச் சென்றனர். தற்போது எனது பணியில் ஆர்வம் குறைந்துள்ளது.

..... நான் *11* ஆம் தரத்தின் கடைசி D வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர். கற்பிக்கத் திறனற்ற என் நிலையும், கற்கத் திறனற்ற மாணவர்கள் நிலையும் பொருந்துகின்றமையால் என்னை அவ்வகுப்பிற்குத் தெரிந்தெடுத்தாக அதிபர் அடிக்கடி தெரிவிப்பது வேதனை தருகிறது. என் வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு நூறுவரை பூரணமாக எழுதவே தெரியாது. அதையாவது கற்பிப்போம் என்றால் அதிபர் விடுகிறார் இல்லை. பிள்ளைகளைக் கொண்டு வாழைத்தோட்டத்தை ஆக்கவும், நீர்பாச்சவும், பாத்திகட்டவும், பூந்தோட்டம் அமைக்கவும் மற்றும் வேலைகளைச் செய்யப்பணிக்கின்றார். பாடசாலைக்கு வரும் நாட்களில் ஒரு சொல்லாவது அவர்கள் படிக்க வேண்டும் என்பது என் அவா. பெற்றோர்கள் அக்கறை இல்லை. அதிபரோ அவர்கள் அடுத்த வருடம் குடும்பத் தொழிலான மீன் பிடியில் இறங்கிவிடுவர். பெண்கள் திருமணம் செய்வர் அவர்களுக்கேன் படிப்பு என்கிறார் மேற்பார்வையாளர்கள் பாடசாலையைத் தரிசித்து செழித்துள்ள பூந்தோட்டம், வாழைத்தோட்டத்தைப்பார்த்து அதிபரைப் புகழ்ந்து சென்றார்கள். ஆனால் எனது வகுப்பில் கருகிவரும் மாணவப்பூக்கள் பற்றி யார் சிந்திக்கப் போகிறார்கள்.

**வினாக்கள்**

1. பாடத்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்தல் கல்விக் குறிக்கோள்கள் ஆகுமா? காரணம் தருக?
2. பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டிய தேர்ச்சிகள் தொடர்பான விளக்கமின்மைகள் மேற்குறித்த விடயக் கற்கை மூலம் எவ்வாறு புலனாகின்றது?
3. நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பாடத்திட்டங்களை கற்பிக்கையில் ஒரே முறையையும், காலத்தையும் பின்பற்ற வேண்டுமா?
4. விடய ஆய்வினூடாக பரிசோதனைக் குழுவினர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வையாளர்கள் தொடர்பான அபிப்பிராயம் எவ்வாறாகவுள்ளது?

5. மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளையுடைய பாடசாலைகளில் மேற்பார்வையாளர் அணுகுமுறை எவ்வாறானதாக இருக்க வேண்டும்?

6. பாடசாலைகளுக்கே உரிய விசேடமான குறிக்கோள்களை உருவாக்கிக் கொண்டு கற்பிப்பதில் ஈடுபட ஓர் ஆசிரியரால் இயலுமா?

7. மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளையுடைய வகுப்பறைகளில் எவ்வாறு கல்விக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் எனத் தேர்ச்சியுள்ள ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் அளிக்கக்கூடிய அறிவுறுத்தல் என்ன?

மேற்படி விடய ஆய்வில் ஆசிரியர்கள் தெரிவித்த கருத்துரைகள் பெரும்பாலும் எல்லாப்பாடசலைகளிலும் கேட்கப்படுகின்ற குரல்களாகவுள்ளன. தேசிய கல்விக் குறிக்கோள்கள் வாயிலாகப் பாடசாலைகளில் வழங்கப்படவேண்டிய தேர்ச்சிகள் தொடர்பாக ஆராயும்போது பல நலிவுகளும், பிரச்சினைகளும், போதாமைகளும், தெளிவின்மைகளும் உள்ளமை புலனாகின்றது. தேசிய கல்விக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காகப் பாடசாலைகளால் ஆற்றப்பட வேண்டியன எவை என்பது பற்றிய பிரச்சினைகள், முரண்பாடுகள், ஆசிரியர், அதிபர், கல்விப்பணிப்பாளர், கல்வியியலாளர்களிடையே உண்டு. மேலும் இதன் தொடர்ச்சியாகப் பாடசாலைக் கலைத்திட்டம், அதை அமுலாக்குதல் தொடர்பான பிரச்சினைகளும் இவ்விடய ஆய்வில் எழுகின்றது.

பாடசாலைகளின் குறிக்கோள்கள், தேசிய கல்விக் குறிக்கோள்களை நிறைவேற்றலும், பாடசாலைக் கலைத்திட்டத்தை அமுலாக்கலுாகும். அமுலாக்கும் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவே மிக அவதானமாக இருக்க வேண்டும். அவ்வாறான பிரச்சினைகளே இவ்விடய ஆய்வில் எழுந்துள்ளன. முக்கியமாக ஒரு அர்ப்பணிப்பான நல்லாசிரியரின் முயற்சியால் ஊட்டம் பெறும் பிள்ளை எத்தகைய பாடசாலையில் கற்றாலும்வாழ்க்கைத்திறன்களை இனம் கண்டு நாட்டினதும். வீட்டினதும் அபிவிருத்திக்கு ஏதோ ஒரு வகையில் பங்களிப்பாளனாக மாறுவான். இதற்கு ஒவ்வொரு பாடசாலைகளும் அதனைச் சார்ந்தோரும் வழிகாட்ட வேண்டும். ஏதோ ஒரு வகையில் கல்வித் தேர்ச்சிகளை பாடசாலை வழங்கியே தீர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இதற்கு வகை கூறக் கூடியவர்களாக ஆசிரியர், அதிபர், கல்விப்பணிப்பாளர்கள் இருந்தே ஆக வேண்டும். இதிலிருந்து விலகிக் கொள்ள முடியாது என்ற வகையில் இவ்விடய ஆய்வுக் கற்கையை அணுகலாம்.

**விடய ஆய்வுக் கற்கை 3 இற்கான விளக்கம்**

1. இல்லை. பாடத்திட்டத்திலுள்ள கற்றல் தேர்ச்சிகளை மாணவரைக் கொண்டு அடையச் செய்தலே கல்விக்குறிக்கோளாகும்.
2. **ஆசிரியர்கள்** தெரிவித்த கருத்துக்கள்

1) நான் பாடத்திட்டத்தை முடித்துள்ளேன் படிக்கும் வேலை பிள்ளைகளுடையது.
2) பிள்ளைகள் மக்குகளாகவுள்ளனர். பெற்றோரால் உதவமுடியாமல் விட்டால் என்னால் எப்படி உதவமுடியும்
3) தற்போது எனது பணியில் ஆர்வம் குறைந்துள்ளது
4) கற்பிக்கும் திறன் அற்றவர் என அதிபர் என்னைக் கூறுகிறார்.

**அதிபர்**

1) உரிய காலத்தில் பாடத்திட்டத்தை கட்டாயப்படுத்தி முடிக்கச் செய்தல்
2) D வகுப்பு மாணவர்களைக் கற்கவிடாமல் வேலை வாங்குதல்.

**மேற்பார்வையாளர்**

1) மெய்யான பாடசாலைச் சூழலை விளங்கிக் கொள்ளாமை. வெறும் அதிகாரத்தை நிலை நாட்ட முற்பட்டமை.
2) D வகுப்பு மாணவர்களை இனம் காணாமை.

3. கல்வித்தரம் ஒரே மாதிரியாக இருந்தால் இக்கூற்று பொருந்தும் ஆனால் அவ்வாறான நிலை இல்லை. எனவே ஒரே முறையையும், காலத்தையும் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தில் நெகிழ்ச்சித் தன்மைகள் வேண்டப்படுகின்றன.
4. மிக மோசமாகவுள்ளது
5. கற்பித்தல் நடவடிக்கையை விருத்தி செய்தல் (வகுப்பறை, அவதானிப்பு, குழுக்கலந்துரையாடல், தனியாள் கலந்துரையாடல், வழிகாட்டப்பட்ட கற்பித்தல், தரவளர்ச்சி) என்ற நோக்கிலேயே மேற்பார்வையாளரின் அணுகுமுறை அமையவேண்டும். தற்போதைய மேற்பார்வை கற்றல்–கற்பித்தல் சந்தர்ப்பத்தின் மீதேயன்றி தனியாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியினரை நோக்காகக் கொண்டதல்ல. மேற்பார்வைக் குழுவினர், சந்தர்ப்பத்தை முன்னேற்றுவதை இலக்காகக் கொண்டு நடவடிக்கை எடுக்கும் ஒத்துழைப்புடன் உதவியளிக்கும் குழுவாக அணுகுதல் வேண்டும். அதிகாரிகளால் தம் கீழுள்ளவர்களை அல்லது திறனற்றவர்களை விருத்தி செய்ய எடுக்கும் நடவடிக்கை என கல்வி மேற்பார்வையை வரைவிலக்கணம் செய்ய முடியாது என்பதையே இவ்விடய ஆய்வு தெளிவுபடுத்துகின்றது.

6. தற்துணிவும், திறமையும், ஏனையவர்களுக்கு வழிகாட்டும் அற்றலுள்ள ஆசிரியரால் இயலும் எனினும் இது தொடர்பான விருத்தி நிலை இன்னும் எமது நாட்டில் ஏற்படவில்லை.
7. பாடத்திட்டங்கள் உரிய காலத்தில் முடிக்கப்பட வேண்டும் என்பதில் அர்வமுள்ள அனைவரும் அத்திட்டத்தினூடாக அனைத்துத் தேர்ச்சிகளையும் மாணவர் அடைந்துள்ளனரா என்பதிலும் அக்கறை செலுத்துவதுடன் பொறுப்புக் கூறுபவர்களாக இருக்க வேண்டும் என்ற நிலையை உறுதியாக்கிக் கொண்டு மாணவர்களின் நல் விருத்தியையே மையமாக வைத்து, எல்லோரும் புரிந்துணர்வுடன் நிலைமையை உணரவைத்து உறுதியாக மாணவர்கள் கற்க வழிகாட்டல். அதற்கான பல்வேறு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.

**குறிப்புக்கள்:-**

கல்வி மேற்பார்வை தொடர்பாகப் பல விடய ஆய்வுக் கற்கைகள் சிறந்த வழிகளைக் காட்டுகின்றன. இவ் விடயக் கற்கையில் எமது நாட்டின் தற்போது கூட நிலவும் மோசமான கல்வி மேற்பார்வை பற்றி எடுத்துக்க காட்டப்படுகின்றது. ஒரு நல்ல கல்வி மேற்பார்வையாளர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் இங்கு தரப்படுகின்றன.

1. கல்வி, முகாமைத்துவம், பாடத்துறை தொடர்பான நிபுணத்துவ அறிவுடன் மனிதாபிமானமும் இருக்க வேண்டும். எவ்வளவு சிறப்பான அறிவு இருப்பினும் மனிதாபிமானமும், தொடர்பாடல் திறமையும் குன்றியிருந்ததால் எவ்வித பயனுமிருக்காது.
2. மேற்பார்வையாளர் ஆசிரியரின் வேலையை மதிக்கவும், அவருக்குத் தேவையான பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். தன் ஆதிக்கத்தைக் காட்டுவது அபிவிருத்தியை பாதிக்கும்.
3. ஆசிரியர்களுக்குப் பொருத்தமான விதத்தில் உதவிபுரிந்து வழிகாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனை வழங்கினால் ஆசிரியர் தம் தொழிலில் விருத்தியடைவார்கள் என்பதைப் புரிய வேண்டும்.

4. நடுநிலையான, நியாயமான, மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும். தன் விருப்பு வெறுப்புக்களை காட்டக்கூடாது.

5. மேற்பார்வைச் செயன் முறை பற்றி மேற்பார்வை தொடங்கு முன்னரே மேற்பார்வையாளரும் ஆசிரியரும் ஒன்றாகச் சேர்ந்து திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

6. மதிப்பீட்டின் பின் திறந்த மனதுடன், சுதந்திரமாக, நேர்மையாக தான் அவதானித்தவற்றை ஆசிரியருக்கு எடுத்துக்காட்ட வேண்டும். அது பற்றி கருத்து வெளியிடுவதற்கு ஆசிரியருக்கு இடமளிக்க வேண்டும்.

7. சுகயீனமான, சோம்பலான ஆசிரியர்களுக்கிடையில் உற்சாகத்தை ஏற்படுத்தி, ஆசிரியர்களுக்கிடையில் சாதகமான மனப்பாங்கு இருக்கும் நிலையை உருவாக்கி வெற்றிகரமாகக் கற்றல்-கற்பித்தல்-அபிவிருத்திக்கு வழிகாட்டும் ஆற்றல் உள்ளவராக மேற்பார்வையாளர் திகழ வேண்டும். இதன் மூலம் உயர்ந்த அபிவிருத்தி ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 04

## கல்வி முகாமைத்துவ செயல் நெறிகளில் விடய ஆய்வு

ஒரு தாபனத்தின் குறிக்கோள்களை அடைவதற்குப் பயனுள்ள மனித-பௌதீக-நிதி வளங்களைப் பயன்படுத்தலும், வழிப்படுத்தலுமான நடைமுறையே முகாமைத்துவமாகும். நவீன முகாமைத்துவ நடைமுறையானது மனித வரலாற்றைச் சீர்ப்படுத்துவதற்கான செயன் முறையாகவுள்ளது. மனித எதிர்பார்ப்புக்களை அடைவதற்காக வளங்களை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தல்களை, திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடாத்தல், கட்டுப்படுத்தல், மதிப்பீடு செய்தல் ஆகிய முறையியல்களினூடாக நிர்வகிக்கும் நுட்ப முறைகள் உள்ளடங்கிய தொகுதியாக முகாமைத்துவம் உள்ளது. இன்று உலகளாவிய ரீதியில் எல்லாத் துறைகளிலும் சவால்களுக்கும், பிரச்சினகளுக்கும் முகம் கொடுத்து வெற்றி காண முகாமைத்துவ அணுகு முறைகளே உதவுகின்றன.

சமூக உறவுகளோடும் உருவாக்கத்தோடும் இணைந்த கல்வி முகாமைத்துவம் சார்ந்த செல்நெறிகள் (Trends in Educational Management) இன்று கல்வியியல் துறையில் முதன்மையாகவுள்ளன. கல்வி சார் இலக்குகளை வென்றெடுக்க முகாமைத்துவ செல் நெறிகள் வழிகாட்டுகின்றன. கல்வி முகாமைத்துவமானது மனித வள முகாமைத்துவத்தையே பெரிதும் சார்ந்துள்ளது. கல்வி முகாமைத்துவ செல் நெறிகள் தொடர்பான திறனாய்வுகள், விடய ஆய்வுகள், கல்வி அபிவிருத்தி நோக்கிற்கும், பல்வேறு பிரச்சினைகள், முரண்பாடுகளைத் தீர்க்கவும், தலைமைத்துவம், கூட்டுணர்வு, ஜனநாயகத்தன்மை சமூகவுறவுகளைப் பலப்படுத்தவும் உத்வேகத்தை அளிக்கின்றன.

**இலங்கையில் கல்விநிர்வாக - முகாமைத்துவ வளர்ச்சி**

இலங்கையிலே கல்வி நிர்வாக சீர்திருத்தங்கள் *1869*ஆம் ஆண்டு பொதுக்கற்பித்தல் திணைக்களம் (Department of Public Instrution) உருவாக்கப்பட்டதிலிருந்து விரிவடைந்து வருகின்றது. தொடர்ந்து *1920*ஆம் ஆண்டு முதலாம் இலக்க கல்விச் சட்டம் முதலாவது கல்விச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டமாக இலங்கையில் நிறைவேற்றப்பட்டது. 1931இல் டொனமூர் அரசியல் சீர்திருத்தம். 1939ஆம் ஆண்டு 31ஆம் இலக்க கல்விக்கட்டளைச் சட்டம். டாக்டர் C.W.W கன்னங்கரா அவர்களின் முயற்சியால் 1945ல் இலசவசக் கல்வி அறிமுகமானது. 1960–61 இல் அரசாங்கம் 90 வீதமான பாடசாலைகளைப் பொறுப்பேற்றதுடன் இலங்கையில் கல்வி நிர்வாக சீர்த்திருத்தங்கள் கட்டமைப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டன. 1961ஆம் ஆண்டு புண்டாரவளையில் ஒரு தேசிய கல்வி மகாநாடு கூட்டப்பட்டது. இது கல்வி நிர்வாக சீர்திருத்தங்களில் "நிர்வாகப்பன்முகப்படுத்தல்" என்ற மைய எண்ணக்கரு தொடர்பானதாக இருந்தது. இம் மகாநாட்டின் முக்கிய தீர்மானம் 23 பிரதேச கல்வி அலுவலகங்களை நிறுவுதலும், அவற்றுள் 10 கல்விப்பிரதேசங்களுக்கு பொறுப்பாக உதவிப் பணிப்பாளர்களும், 13 மாவட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் பொறுப்பாக கல்வி அதிகாரிகளும் நியமிக்கப்பட வேண்டும் என அமைந்தது.

1966இல் நிகழ்ந்த சீர்திருத்தங்களினூடாக கல்விப்பிரதேசங்களின் தொகை இலங்கையில் நான்காக உயர்ந்தது. பூரண அதிகாரம் கொண்ட அரச திணைக்களங்களாக அவை அங்கீகரிக்கப்பட்டன. கல்விப்பிரதேசங்களுக்குப் பொறுப்பாக கல்விப்பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். மாவட்டக் கல்வி அலுவலகங்கள் பிரதம கல்வி அதிகாரியின் பொறுப்பில் விடப்பட்டன.

1972ஆம் ஆண்டு புதிய பாதை கல்விச்சீர்திருத்தத்தினூடாக முதன்முதலாக இலங்கை கல்விச் சேவை தாபிக்கப்பட்டது. ஐந்து தரங்களைக் கொண்ட கல்விச் சேவை அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். 1981ஆம் ஆண்டின் கல்வி வெள்ளை அறிக்கைபடி 1985ஆம் ஆண்டுவரை பல கல்வி நிர்வாக பன்முகப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1981 இல் இலங்கையில் 24 பிரதேசக்கல்வி அலுவலகங்களும், 7 உபபிரதேசகல்வி அலுவலகங்களும் நிறுவப்பட்டன. மேலும் நாட்டின் கல்வி வாய்ப்புக்களை விரிவாக்கல், கல்வித்தர அபிவிருத்தி, ஆசிரியர் கல்வி அபிவிருத்தி, மேற்பார்வை முறைகள் ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு கோட்டக்கல்வி அலுவலகம், கொத்தணிப்பாடசாலை முறைமை, கல்வி வலயம் என்பன தோற்றுவிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1984ஆம் ஆண்டிலிருந்து கல்வி நிர்வாக முறைமையிலிருந்து முகாமைத்துவத்தை நோக்கி:

கல்வி நிர்வாகக் கலாச்சாரம் படிப்படியாக கல்வி முகாமைத்துவ கலாச்சாரமாக மாற்றமடையத் தொடங்கியது. கல்வி நிர்வாகச் செயற்பாடுகளினால் விரைவான பயனுறுதித் தன்மைகள் எதிர்பார்க்கப்பட்டன. ஒவ்வொரு கல்விப் பிரிவும், பாடசாலைகளும் தமது நிறுவனங்களுக்கு சரியான இலக்குகளை அமைத்து செயற்பட வேண்டும். இதை முகாமைத்துவத்தில் இலக்கு அடிப்படை முகாமைத்துவம் (management by objectives) - (M.B.O) என்பர். இவ் இலக்குகள் குறிப்பானவையாக, யதார்த்தமானவையாக, நல்விளைவுகளை அடையக் கூடியவையாக, நிறுவனத்தின் தேவைக்கு ஏற்றதாக, அங்குபணிபுரியும் பணியாளர்களை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும். 1984ஆம் ஆண்டைத் தொடர்நச்து கல்வி முகாமைத்துவக் கலாச்சாரத்தைப் படிப்படியாக புகுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டே கல்வி வலயங்கள் அமைக்கப்பட்டன. பாடசாலைகளின் விருத்திக்கு குறிப்பிட்ட வலயங்களில் காணப்படும் வளங்களை உச்ச மட்டத்திற்குப் பயன்படுத்துவது வலய அமைப்பின் முக்கிய இலக்கு என அறிவுறுத்தப்பட்டது. 1985ஆம் அண்டு இலங்கை அதிபர் சேவை தாபிக்கப்பட்டது. இவ்வாண்டே தேசிய கல்வி நிறுவகமும், கல்வியமைச்சும், கல்விமுகாமைத்துவ அபிவிருத்தித் துறையும் கல்வி முகாமைத்துவம் தொடர்பான பாடநெறிகளை அதிபர்கள், கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரியர்களுக்கு சிறப்பாக மேற்கொள்ளத் தொடங்கினர். பல கல்வி முகாமைத்துவ ஆய்வியல் நூல் வெளியீடுகளும், பல பயிலமர்வுகளும், கல்விமுகாமைத்துவம் தொடர்பாக வெளிநாட்டுப் புலமைப்பயிர்ச்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

1988ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பின் 13வத சீர்திருத்தம் காரணமாக எட்டு மாகாண சபைகளுக்கு நிருவாகம் பன்முகப்படுத்தப்பட்டது. மாகாண மட்டத்தில் திட்டமிடல், நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல், மதிப்பீடு, தீர்மானம் மேற்கொள்ளல், மனிதவள முகாமை, நிதி, கணக்கீடு கணக்காய்வு, பொதுச்சேவைகள் என்ற வகையில் அதிகாரப் பரவலக்குதல் நிகழ்த்தப்பட்டது. இதனூடாக கல்வி முகாமைத்துவ விருத்தி மேலும் விருத்தியடையும் என எதிர்பார்க்கப்பட்டது. 1960ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் கல்வி நடவடிக்கைகள் துரிதமாகச் செயற்பட்டாலும் போதிய திட்டமிடல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிப்பு, கடமையுணர்வு இன்மைகளும், இனப்பிரச்சினை, பொருளாதார வளர்ச்சியின்மை, மனிதவளப்பயிற்சிக் குறைபாடுகள், அனுபவக் குறைபாடுகள், நிர்வாக முகாமைத்துவப் பன்முகப்படுத்தலுடன் செலிழந்த தன்மைகள் காரணமாக எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை.

*1990*ஆம் ஆண்டிலிருந்து தற்போதுவரை தேசியகல்வி ஆணைக்குழு, கல்வி உயர்கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழகங்கள் கல்விச்சீர்திருத்த நடவடிக்கைகளைப் பல்பரிமாணங்களில் நடைமுறைப்படுத்தி வருகின்றன. அவற்றுள் முக்கிய பிரிவாக கல்வி முகாமைத்துவமும், வள ஏற்பாடுகளும் என்ற வகையில் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னேடுக்கப்படுகின்றன. மேலும் முகாமைத்துவ நோக்கில் உள்ளீடு–செயன்முறை–வெளியீடு என்றவாறு கல்வியின் பயனை விரைவாக்க, தொழிற்கல்வி, தகவல் தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்திக்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

*2000*ஆம் ஆண்டு இலங்கையில் *10,977* பாடசாலைகள் இருந்தன. *4337188* மாணவர்களும், *199906* ஆசிரியர்களும் கடமையாற்றினார். மாணவர் ஆசிரியர் விகிதம் *22*, கல்விக்கான மொத்த செலவீனம் *30.930* மில்லியன் ரூபா, பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை *13*, அங்கு கற்ற மாணவர்கள் *48296* விரிவுரையாளர்கள் *3241*. மேலும் பல கல்வித் தொகுதிகளுடன் ஒரு பாரிய கல்வியமைப்பையும் முறைமையையும் அரச துறைகளிலேயே முதன்மையான பாரிய துறையாகக் கல்விக்கட்டமைப்பு உள்ளது. இத்துறையை பல்வேறு கட்டங்களில் முகாமைத்துவ ரீதியில் அபிவிருத்தி நோக்கி முன்னெடுக்கும் போது பல பிரச்சினைகள் தோன்றும். இவற்றைத் தீர்ப்பதற்கான ஆற்றல்களைப் பல்வேறு பயிற்சி அனுபவங்கள் மூலம் ஆசிரியர்களும், அதிபர்களும், கல்விப்பணிப்பாளர்களும், கல்வியியலாளர்களும் கொண்டிருக்க வேண்டும் என்ற அடிப்படைகளை முன் நிறுத்தியே கல்வி முகாமைத்துவம் தொடர்பான விடய ஆய்வுக் கற்கைகளை அணுகுதல் வேண்டும். இங்கு தரப்படுகின்றவிடய ஆய்வுக் கற்கைகளை கல்வி முகாமைத்துவ அறிவைப் பின்புலமாக வைத்தே ஆராய்ந்து வெற்றி கொள்ளலாம். விடைகளைக் குறிப்பாக உதாரணம் காட்டி தர்க்க ரீதியாக எழுதுதல். நேர முகாமைத்துவத்தில் அக்கறை செலுத்தவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடய ஆய்வுக்கற்கை 01

யாழ்ப்பாண நகரில் இருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவில் கிராமத்தையும், நகரத்தையும் இணைக்கும் மத்திய பகுதியில் அப்பாடசாலை அமைந்திருந்தது. வளங்கள் குறைந்த ஒரு இடைநிலைப்பாடசாலையாகத் தரம் 9 வரை 400 மாணவர்களுடன் இயங்கி வந்த அப்பாடசாலையை திரு. க. ரவீந்திரன் கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னர் அதிபராகப் பொறுப்பேற்றார். கடமையேற்ற போது அவர் அதிபர் சேவைத் தரத்தில் இருக்கவில்லை. ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்து சுயமாகக் கற்று கலைப்பட்டதாரியாகி, பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் சிறப்புச் சித்தி எய்தி பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணி ஆய்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

அப்பிரதேசதில் புகழ் பூத்த பெரிய பாடசாலை அயலில் இருந்தது. அதனுடன் போட்டியிட்டு சகல வழிகளிலும் தனது பாடசாலையை புதிய வளர்ச்சிக் கட்டத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற அவாவுடன் புதிய அதிபர் செயற்படத் தொடங்கினார். மிக வேகத்துடன் பாடசாலையைப் பிரபல்யப்படுத்தும் பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆசிரியர்களும் ஒத்துழைத்தனர். பல்வேறு உத்திகள் மூலம் பாடசாலையில் பயிலும் மாணவர்களின் தொகையை இரட்டிப்படையச் செய்தார். திணைக்களத்துடன் புரிந்துணர்வாக ஆரோக்கியமான தொடர்புகளை வைத்திருந்தமையால் மாணவர்களின் அதிகரிப்புகளுக்கு ஏற்ப ஆசிரிய வளமும் கிடைத்தது.

பாடசாலையைப் பொறுப்பேற்ற இரண்டாவது வருடத்திலேயே திணைக்கள அனுமதியுடன் பாடசாலையில் க. பொ. த சாதாரண தரம் வரை மாணவர் கற்கக்கூடிய வசதியை ஏற்படுத்தினர். பாடசாலையுடனிருந்த சிறிய மைதானத்தில் அப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் உதவியுடன் இரு மாடிக்கட்டடம் ஒன்றை அமைத்தார். பாடசாலையுடன் இணைந்த பெரிய காணி ஒன்றை வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பழைய மாணவர் சங்கம், ஆகியவற்றின் உதவியுடன் கொள்வனவு செய்து விளையாட்டு மைதானமாக்கினார். சிறந்த மைதானமாக அதை ஊர் மக்கள் ஒழுங்கமைத்துக் கொடுத்தனர். அதிபர் பாடசாலை தவிர்ந்த வேளைகளிலும் கல்லூரியில் நின்று கடுமையாக உழைப்பார். பாடசாலை விரைவாக, சிறப்பாக வளர்ச்சியடைந்தமையால் பொது மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரின் சேவையைப் பாராட்டி அவருக்குப்பக்க பலமாக இருந்தனர்.

இவ்வேளை திணைக்களத்திற்குப் புதிதாக மாற்றலாகி வந்த கல்விப்பணிப்பாளர், அதிபர் தரம் உள்ளவர்களே பாடசாலை அதிபர்களாகக் கடமையாற்ற வேண்டும் என்பதில் கடுமையாக இருந்தார். அப்பாடசாலைக்குப் புதிய ஒரு அதிபரை நியமித்து திரு. க. ரவீந்திரனை உப அதிபராக சிபார்சு செய்தார். இதனை அப்பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், பழைய மாணவர் சங்கத்தினரும் மிகக் கடுமையாக எதிர்த்தனர். விடயம் அரசியல்வாதிகள் வரை சென்றது. புதிய அதிபர் பின் வாங்கியதைத் தொடர்ந்து தனது கடமைகளை திரு. க. ரவீந்திரன் மேற்கொண்டார்.

பாடசாலை விடயங்களில் தொடர்ந்து கடுமையாக உழைத்து வசந்தாலும் தான் தொடர்ந்து செய்த ரியூசன் வகுப்புக்களை நடாத்தி வந்தார். இவர் பிரபல ரியூசன் ஆசிரியருமாவார். ரீயூசனில் படிக்கும் வேறு பாடசாலை மாணவர்களைத்தனது பாடசாலையில் வெற்றிகரமாகச் சேர்க்கும் திறனும் அவருக்கிருந்தது.

பதில் அதிபர்களாக இருந்தவர்களுக்கு அரசாங்கம் அதிபர் சேவை தரம் வழங்கிய போது இவரும் உள்வாங்கப்பட்டார். தனது வெற்றிகள் மீது நம்பிக்கை வைத்து பல விடயங்களை தானே முடிவெடுத்து செயற்படுத்தினார். முரண்படும் ஆசிரியர்களுக்குக் கடும் பயமுறுத்தல்களை விடுத்தார். தானும், தனது பாடசாலையும் பிரபல்யம் அடைய வேண்டும் என்பதற்காக கோட்ட, வலய மட்டத்தில் நடைபெறும் விழாக்கள் போட்டிகளைத் தனது பாடசாலையில் வைத்தார். இறுதியாக நடைபெற்ற கோட்ட மட்டத் தமிழ்மொழிதினப்போட்டிகளுக்குப் பெருமளவு பணத்தைச் செலவளித்தார். அம்மாதம் ஆசிரியர்கள் சம்பளத்தில் அவர்களைக் கேட்காமலே போட்டிச் செலவுகளை ஈடுசெய்ய 500 ரூபாக்களை கழித்தார். பல ஆசிரியர்கள் முணுமுணுத்தனர். ஆசிரியர் திரு. ப. நாதன் நேரடியாகச் சென்று விடயத்தைக் கேட்க நான் உனது பணத்தை எடுக்கவில்லை. பொதுவான விடயத்திற்கு எடுக்கப்பட்டது. உனக்கு இங்கு வேலை செய்ய விருப்பமில்லை என்றால் வேறுபாடசாலைக்கு மாற்றலாகிச் செல்லலாம் என்றார். இச்சம்பவத்துடன் ஆசிரியர்களுடனான முரண்பாடு அதிகரித்தது. திரு. ப. நாதன் பல ஆசிரியர்களுடன் இணைந்து அதிபரைப் பழிவாங்கச் சந்தர்ப்பம் பார்த்திருந்தார்.

விழாக்கள், புதியவிடயங்கள், பிரபலங்கள் என்ற நிலையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுபடாமல் அதிபர் செயற்பட்டுக் கொண்டிருந்தார். பாடசாலை மாணவர் கல்வியில் பாடவிதான முகாமைத்துவ அபிவிருத்தியில் அவரால் அக்கறை செலுத்த முடியவில்லை. இறுதியாக வந்த க. பொ. த சாதாரணப் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியானதாகவும் இருக்கவில்லை.

அப்பாடசாலையின் நிதி தொடர்பான விடயங்கள், வசதிகள் சேவைகள் கட்டணம் ஒரு பெண் ஆசிரியையின் பொறுப்பில் இருந்தது. நிதி தொடர்பன ஆவணங்கள் எதுவும் பேணப்படவில்லை. பெரும்பாலான வசதிகள், சேவைகள், பணம் கட்டிய மாணவர்களுக்குப் பற்றுச்சீட்டுகள் வழங்கப்படவில்லை குறிப்பிட்ட பொறுப்பாசிரியை பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் அதிபருடன் தனியாக இருந்து அலுவலகத்தில் செயலாற்றுவார். இப் பெண் ஆசிரியையிடம் தகாத உறவை அதிபர் கொண்டுள்ளார் என ஆசிரியர்களும் மாணவர்களும் பேசிக் கொண்டனர்.

ஆனாலும் சமூகத்தில் அதிபர் மீதான மரியாதை சிறப்பாக இருந்தது. அதிபர் பாடசாலை அபிவிருத்திச்சபையினருடனும், பழைய மாணவர் சங்கப் பொருளாளருடனும் மிக நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார். ஒரு நாள் மாலை 7.00 மணியளவில் இவர்களுடன் பாடசாலை அலுவலகத்தில் மது அருந்தியதைக் கண்ட திரு. ப. நாதன் ஏற்கனவே அதிபருடனிருந்த கோவத்தை தீர்க்க அரிய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மனம் மகிழ்ந்த வலயக்கல்விப்பணிப்பாளருக்கு விடயத்தைத் தெரிவித்து, அதிபர்–பெண் ஆசிரியை உறவு, நிதிவிடயங்கள், கடந்த மூன்று மாதங்களாக ஆசிரியர் கூட்டம் நடைபெறவில்லை. காலைக் கூட்டத்திலேயே அதிபர் எல்லா விடயங்களையும் கூறுகின்றார் என்பவற்றையும் உறுதிப்படுத்தினார். பொய்கள் எதையும் கூறவில்லை.

திரு. க. ரவீந்திரன் தனது பாடசாலையில் க. பொ. த உயர்தர வகுப்பு கலைப்பிரிவை புதிதாகத் தொடக்க அனுமதிக்க வேண்டும் என பல தடவைகள் கோட்ட, வலய மாகாணக்கல்வித் திணைக்களத்தினருக்கு வேண்டுகோள் கடிதங்களை அனுப்பி முயற்சித்தும், அருகில் பெரிய பாடசாலை உள்ளதைக் காரணம் காட்டி அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. தனது கடுமையான முயற்சியுடன் கொழும்பிலுள்ள பாடசாலையின் பழைய மாணவர்களின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி கல்வியமைச்சிலிருந்து, க. பொ. த. உயர்தரக் கலைப் பிரிவை புதிதாக ஏற்படுத்த அனுமதியைப் பெற்று மிகப் பெரிய விழாவும் ஏற்பாடு செய்து நடாத்தினார். அவ்விழாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்ட, வலய கல்விப்பணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுத்தும் அவர்கள் சமூகமளிக்கவில்லை.

விழாவைத் தொடர்ந்து பாடசாலை அதிபர் பற்றிய புகார்கள் பல்வேறு இடங்களிலும் வலயக்கல்வித்திணைக்களத்திலும் கதைக்கப்பட்டன. மொட்டைக்கடிதங்கள், பல்வேறு வதந்திகள் பாடசாலை நிர்வாகம் பற்றிய கீழ்த்தரமான செய்திகளாக வெளிவந்தன. அன்று திடீர் என திணைக்கள கணக்காய்வுச்சோதனைக் குழுவினர் பாடசாலைக்குத் தரிசனமாகினர். நிதி தொடர்பன கணக்குகளை, அறிக்கைகளை, முன்னனுமதிகளைப் பேணாத அதிபரின் பல மோசமான நிதி துஸ்பிரயோகங்களை, ஊழல் உறுதிப்படுத்தப்பட்டன.

1. இப்பாடசாலையின் தற்போதைய பிரச்சினைகளை வரிசைப்படுத்துக?
2. அதிபர் என்ற முறையில் திரு. க. ரவீந்திரனிடம் காணப்பட்ட மூன்று சிறப்பியல்புகளையும், மூன்று குறைபாடுகளையும் தருகக?
3. இவ் அதிபரின் நிதி முகாமை தொடர்பான குறைபாடுகளை விளக்கி அவற்றை நீக்க நீர் கூறும் ஆலோசனைகளை விளக்குக?
4. முதல் தர முகாமையாளர் என்ற வகையில் அதிபரிடம் மிளிர வேண்டிய சிறப்பியலல்புகள் எவை?
5. அதிபர்–ஆசிரியர் முரண்பாடுகள், ஆசிரியர் கூட்டத்தை அதிபர் கூட்டாமை, சுயாதீன முடிவுகள் எடுத்தல் தொடர்பாக இவ் அதிபரின் முகாமைத்துவ அணுகுமுறை தோல்வியானவை என்பதை அவ் அதிபர் உணராமல் செயற்பட்டுள்ளார். அவருக்கு இது தொடர்பான ஒரு ஆலோசனை விளக்க மொன்றை எடுத்துரைக்க?
6. ஒரு வெற்றிகரமான பர்டசாலையின் இயல்புகளைத் தருக?
7. அதிபர் திரு. ரவீந்திரனின் பாடசாலை அயற் சமூகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், அரசியல்வாதிகளின் தொடர்புகள் பற்றிய உமது அபிப்பிராயம் என்ன?
8. அழைப்பு விடுத்தும் கல்விப்பணிப்பாளர்கள் க. பொ. த உயர்தர கலைப்பிரிவு ஆரம்ப விழாவுக்குப் போகாமை சரியான நடவடிக்கையா விபரிக்க?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடைகள்:-**

1. 1. அதிபரின் பொதுவான முகாமைத்துவக் குறைபாடுகளும் எதிர்காலம் நோக்கிய நீண்ட பார்வை இல்லாமையும்.
   2. முரண்பாடுகளுடைய-சுமுகமற்ற-ஆரோக்கியமற்ற அதிபரிர்-ஆசிரியர் உறவு.
   3. முரண்பாடான - அதிபர் கல்விப்பணிப்பாளர் உறவு.
   4. பெருமளவு குறைபாடுகளுடைய, ஒழுங்கமைப்பற்ற நிதி முகாமை
   5. பாடசாலையின் முக்கிய இலக்கான மாணவர் கல்வி கலைத்திட்ட அமுலாக்க முகாமை அபிவிருத்தி செயற்படாத நிலை.
2. 1. தனது கல்வித் தகுதியைப் படிப்படியாக உயர்த்திக் கொண்டமை.
   2. குறுகிய காலத்தில் புதிய கட்டடம், புதிய விளையாட்டு மைதானம், மாணவர் தொகை அதிகரிப்பு, க. பொ. த. உயர்தர கலைத்துறை ஆரம்பம் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
   3. பாடசாலை அபிவிருத்திசபை, பழையமாணவர் சங்கம், பாடசாலையின் அயற்சமூகத்துடனான சிறப்பான உறவும், அவற்றைப் பாடசாலை விருத்திக்குச் சிறப்பாக பயன்படுத்தியமையும்.

**குறைபாடுகள்:-**

1. தீர்மானங்களை குழு அடிப்படையில் ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து எடுக்காமை. ஆசிரியர்களுடன் முரண்பாடுகள் (அதிபர் பிந்திய காலத்தில் பல விடயங்களைத் திட்டமிடாது தான் தோன்றித்தனமாக செயற்படுத்த முற்பட்டு பல பிரச்சினைகளுக்கு ஆளாகிறார். இவரது செயல்கள் நிர்வாண முகாமையாளர்களின் (Naked managers) தன்மைகளை எடுத்துக்காட்டுகின்றது. முகாமைத்துவ செல்நெறியில் திட்டமிடாது செயற்படடு, தீர்மானங்களைத்தானே எடுத்து செயற்பட்டு இறுதியில் திண்டாடும் முகாமையாளர்களை இவ்வாறு அழைக்கின்றனர்.
2. நிதி முகாமையில் அக்கறை செலுத்தாமை, தனது தனிப்பட்ட செல்வாக்கை உயர்த்த பாடசாலை அதிபர் பதவியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தியமை.

3. ஒழுக்க மீறல் நடத்தைகள், மற்றவர்கள் சந்தேகிக்கும் விதமாக குறித்த ஆசிரியையுடன் பழகியமை, அலுவலகத்தில் ஏனையவர்களுடன் மது அருந்தியமை. மாணவர் கல்வியில் அக்கறை காட்டாமை.

3) நிதி முகாமை ஒரு பாடசாலையின் ஒழுங்கமைப்பில் மிகவும் முக்கியமானது. இதற்கு முழுப் பொறுப்பு வாய்ந்தவர் அதிபரோயாவார். பாடசாலை நிதிக்கணக்குகள், குறித்த சட்ட ஒழுங்குகளின், தாபனக் கோவைகளின் படி குறித்த ஆவணங்களில் பேணப்பட வேண்டும். இப்பாடசாலை ஒரு 1C தர பாடசாலையாக உயர்வுற்ற நிலையில் நிதி தொடர்பான கணக்குகளும், ஆவணங்களும் பேணப்படாதமை மிகப் பெரிய தவறாகும். வசதிகள் சேவைகள் கட்டணம் கட்டிய மாணவர்களுக்குப் பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை. இது நிதி மோசடி நடந்துள்ளமைக்கு ஆதாரமாகும். மற்றும் முன் அனுமதி பெறாமல் ஆசிரியர் சம்பளத்தில் 500 ரூபா அதிபரால் கழிக்கப்பட்டமையும் குறைபாடான நிதி முகாமையின் அம்சமாகவுள்ளது.

எனவே வசதிகள் சேவைகள் கட்டணங்களை அறவிட முதலில் அங்கீகாரம் பெற்று, வசதிகள் சேவைகள் கட்டணப் பதிவேட்டில் மாணவர் பெயர்களைப் பதிந்து பற்றுச் சீட்டுக்களை வழங்குவதுடன், வசதிக்கட்டண வரவு, செலவுத் திட்டப்பதிவேடு, காசுப்புத்தகம், வங்கிக்கணக்கு, காலாண்டு கணக்குச் சுருக்கம் என்றவற்றைக் கொண்டு குறித்த பாடசாலை நிதி முகாமையில் வசதிகள் சேவைகள் கட்டணக்கணக்கு, பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கு, விடுதிகள் இருப்பின் விடுதிக்கணக்கு என்பவை முறைப்படி ஆவணங்களில் பதிவிட்டு வங்கி மூலம் கொடுக்கல் வாகங்கல்களைச் செய்தால் மேற்கூறப்பட்ட பல பிரச்சனைகள் ஏற்படாது. மற்றும் பாடசாலை பொதுவிழாக்கள், மாணவர் மன்றக் கணக்குகள், ஆசிரியர் கழகக் கணக்குகளின் வரவு செலவு விபரங்கள் ஆதாரங்களுடன் முறையாக ஆவணப்படுத்தல் வேண்டும். எவரிடமும் பணம் அறவிடும் பொழுது அங்கீகாரம் அவசியமாகும்.

**குறிப்புக்கள்:**

1. வசதிகள் சேவைகள் கட்டணம் தொடர்பான சட்ட ஒழுங்குவிதிகள் இலக்கம் 11.:645 சென்ட 1959 ஜனவரி 23ஆம் திகதி இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க வர்த்தமாணியில் வெளிவந்தது. அவ்விதிகள் அடங்கிய சுற்று நிருபம் 1969 யூன் 1ஆம் திகதி (இல–123) கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டது. 1973 பெப்ரவரி 28 ஆம் திகதி 296 இலக்க சுற்று நிருபப்படி கட்டணம் அறவிடுதல் தொடர்பாக அதிபருக்குப் பொறுப்புக்களை வழங்கியது. 1975 ஆண்டு நவம்பர் 5 ஆம் திகதி வெமியிடப்பட்ட 19/20 இலக்க சுற்று நிருபப்படி கணக்குப்பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும். செலவுகளுக்கான கொடுப்பனவு வவுச்சர் பயன்படுத்த வேண்டும்.

2. பாடசாலை அபிவிருத்திச் சங்கக்கணக்கு 1979 சனவரி 23 ஆம் திகதி வெளிவந்த 28 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு ஏற்பவும் விடுதிக்கணக்குகள் 1974–03–31 திகதி 328 கொண்ட சுற்று நிருபப்படிவம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

4. அதிபரிடம் மிளிர வேண்டிய சிறப்பியல்புகள்:–

* தம் உடை, சிந்தனை, சொல், செயல் நடத்தையில் முன்மாதிரியானவராக இருத்தல்.
* பாடசாலை ஆரம்பமாகும் நேரத்திற்கு 15–30 நிமிடங்களுக்கு முன்பாகவே பாடசாலையை அடைதல், அடக்கமாணவராக இருத்தல், தெளிவாகக் கருத்துக்கள் வெளியிடல்.
* சிறியோர்–பெரியோர் எவராக இருப்பினும் அவர்களது தன்மானத்திற்குப் பங்கம் ஏற்படாதவாறு கதைத்தல்.
* மதுவருந்துதல், புகைத்தல் என்பவற்றிலிருந்து முற்றாக விலகியவராக இருத்தல்.
* பக்கச் சார்பற்றவராக இருத்தல் சனநாயகத்தை மதிப்பவராக பணிபுரிதல். ஆசிரியர்–மாணவர்–பெற்றோரை சமத்துவமாக நடாத்துதல்.
* எல்லோரிடமும் மரியாதையுடன் நடந்து கொள்ளுதல்.

தற்போதைய நிலையில் பாடசாலை அதிபர் நிர்வாக அலுவலர் என்ற நிலையிலிருந்து "சமமானவர்களிடையே முதன்மையானவர்" (First among equals) என்ற புதிய முகாமைத்துவ பரிமமாணத்தைப் பெற்றுள்ளார். தற்காலப்பின் நவீனத்துவ கல்வி முகாமைத்துவ நிபுணர்கள் அதிபர்களை அபிவிருத்தி முகாமையாளர்கள் (Development managers) என அழைக்கின்றனர். அதிபர் ஒரு அதிகாரியல்ல. அவர் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளர். பாடசாலை ஒரு கலாசார விளை நிலமாகவும் (cultura



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

field) என அழைக்கின்றனர். ஆசிரியர்களை நண்பர்களாகவும், மாணவர்களின் வளர்ப்புத் தந்தையாகவும் கருதி அதிபர் செயற்பட்டால் அதுவே உயர்ந்த சிறப்பியல்பாகும்.

5) மனிதவள முகாமைத்துவத்தில் அதிலும் பாடசாலை சார்ந்த கல்வி முகாமைத்துவத்தில் தீர்மானங்களைத் தனி ஒருவராக அதிபர் எடுப்பது பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. குழு அடிப்படையில் ஆசிரியர்களுடன் இணைந்து கூட்டாகச் சேர்ந்து தீர்மானம் எடுக்கும் பண்பினூடாக வேலை ஒழுங்கமைப்பினூடு தீர்மானத்தைச் சிறப்பாக செயல் வடிவமைக்கலாம். இது கல்வி முகாமைத்துவத்தை ஜனநாயக முறையில் வழிப்படுத்தல் என்ற அணுகுமுறைக்கு இட்டுச் செல்கின்றது. இவ் ஜனநாயக முறை அரசியல் ரீதியான விவகாரங்கள் அன்றி கல்வி முகாமைத்துவத்தின் பயனைப்பெறவும் அதிபருக்கும் ஆசிரியர்களுக்கிடையேயும் நட்புறவுகளை வளர்த்துக் கொள்ளவும், முரண்பாடுகளைத் தீர்க்கவும் ஆதாரமாக அமையும். எனவே பாடசாலையை வெற்றிகரமாக இயக்க மாதம் ஒரு முறையாவது ஆசிரியர் கூட்டங்களைக் கூடி, அவர்களின் ஒத்துழைப்புடன் அவர்களின் கருத்துக்களையும் திறந்த மனதுடன் ஏற்று தனது கருத்துக்களையும் தெரிவித்து புரிந்துணர்வுடன் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். மேலும் ஒவ்வொரு ஆசிரியர்களும் பாடசாலையில் சில பொறுப்புக்களை ஏற்க விரும்புகின்றனர். இதனூடு தானும் அந் நிறுவனத்தில் முக்கியத்துவம் உடைய ஒருவன் என உணரத் தலைப்படுகின்றான். இதற்கேற்ப அதிபர் தனது பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கும் பொழுது ஆசிரியர்கள் மேலும் பாடசாலையின் பங்குதாரர்களாக மாறி உச்சப்பயன்பாட்டை விளைவிக்க முற்படுவர். இவர்களுக்கான ஊக்கல்களையும் உதவிகளையும் அதிபர் வழங்கினால் போதும் இதுவே அபிவிருத்தி முகாமையின் ஆதாரமாகும்.

6) சரியான நோக்கங்களைக்கைக் கொள்ளவும் அந் நோக்கங்களைக் முழுமையாக அடைந்து கொள்ளவும் ஆற்றல் படைத்த பாடசாலை வெற்றிகரமான பாடசாலையாகும். நாட்டிற்குச் சுமையாகாத நாட்டின் மேம்பாட்டிற்குப் பங்களிப்பினை நல்கக் கூடிய அதே சமயம் சிறந்த ஆளமையுடைய பிரசைகளை நாட்டிற்கு அளிக்க இப்பாடசாலைகளால் இயலும். சரியான பாதையில் நடைபோட்டு, சரியான பெறுபேறுகளைப் பெறுவதால் சமூகத்தினது புகழுக்கு இப்பாடசாலை உள்ளாகும். இதுவே வெற்றிகரமான பாடசாலையாகும். கலைத்திட்டத்தை, இணைக்கலைத்திட்ட கருமங்களை முற்றாகப் பின்பற்றி மாணவர்களுக்குக் கற்றல் அனுபவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி அதிபர், ஆசிரியர்கள், பௌதீக வசதிகள், சமூகத்தொடர்பு ஆகிய நல்ல பின்னணிக்காரணிகளே வெற்றிகரமான பாடசாலையைத் தீர்மாணிக்கின்றன. ஒரு வெற்றிகரமான பாடசாலையின் முக்கிய இயல்புகள்

1. ஒரு வெற்றிகரமான பாடசாலைப் பின்னணியில் சிறந்த ஒரு அதிபரும், நல்லாசிரியர்களும் இருப்பர்.
2. மாணவர்களின் பாடசாலை வரவு உயர்ந்த மட்டத்திலிருந்கும், மாணவர் இடைவிலகல் நிகழமாட்டாது. ஒழுக்க சீலர்களாக மாணவர்கள் காணப்படுவர்.
3. மாணவர்களுடைய தேர்ச்சிகளும், கணிப்பீட்டு, பரீட்சைப் பெறுபேறுகளும் மிக உயர்ந்த மட்டத்தில் இருக்கும்.
4. ஆசிரியர் லீவு பெறல் குறைந்த மட்டத்திலிருக்கும்.
5. பாடசாலையானது சமூகத்துடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கும். உயிர்ப்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் இயங்கும்.
6. வகுப்பறைகள், அலுவலகம் சார்ந்த வளவு, கட்டடங்கள், காணி என்பன ஒழுங்குக்கிரமத்தோடு தூய்மையாகக் கவர்ச்சியாகப் பேணப்படும்.
7. ஒரு சிறந்த நூலகம், கணனி அறை, கற்றலுக்கான உபகரணங்கள், செயற்பாட்டறை என்பவை இருப்பதுடன் அவற்றைச் சிறப்பாக இயக்கி, ஆக்கபூர்வமான நேர்க்கணிய சார்பு கற்றலும்-கற்பித்தலும் இருக்கும். புதிய ஆக்கங்கள் வெளிவரும், நல்ல பெறுபேறுகள் கிடைக்கும்.

7) ஒரு பாடசாலையின் அபிவிருத்தி தனியே பாடசாலையுள் மட்டும் நின்றுவிடுவதில்லை. அது சமூகத் தொகுதியின் ஒரு பகுதி என்ற வகையில் ஏனைய சமூக நிறுவனங்களுடனும், பொது மக்களுடனும், அயற் சமூகத்துடனும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். பாடசாலை அதிபர் சமூக நிறுவனங்களுடனும், பொது மக்கள், அரசியல்வாதிகள் மற்றும் முக்கியமாகப் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மணவர் சங்கங்களுடன் உயிர்த்துடிப்பான தொடர்பை பேணியமை சிறந்த நடவடிக்கையாகவுள்ளது. பாடசாலையிலிருந்து அதிபரை மாற்ற முயற்சித்த பொழுது இவற்றின் உறுதியான செயற்பாடு புலனாகின்றது. தொடர்ந்து அப்பாடசாலையிலேயே அதிபர் சேவையாற்ற அதிபருக்கு இவை உதவின. மேலும் அரசியல்வாதிகளுடன் அதிபர் தொடர்பு கொண்டிருந்தமையால் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பாகப் பல விடயங்களைச் சாதிக்க முடிந்தது. மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுடனான தொடர்பு பாடசாலை அபிவிருத்தி நோக்கில் சாதகமாக இருந்தது.

எனினும் அதிபர் பழைய மாணவர் சங்க பொருளாளருடனும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுடனும் மிக நெருக்கமாக நடந்தமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. மாலை 7.00 மணிக்கு அவர்களுடன் இணைந்து அதிபர் மது அருந்தியமை மன்னிக்க முடியாத குற்றம். *1977-08-31* ஆம் திகதிய *134:77:(099)* இலக்க அரசினர் பாடசாலைகள், ஆசிரிய கலாசாலைகள், தொழில்நுட்பக்கல்லூரிகள் ஆகியவற்றில் மதுபானம், போதைப்பொருள் என்பவற்றைத் தடைசெய்தல் என்ற சுற்றுநிருபப்படி இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்கு சட்டப்படி தண்டனை வழங்கப்படும்.

8) பிரச்சினைகள் பல இருந்தாலும் அன்றைய பாடசாலைப் பின்னணி நிலைமைகளை கல்விப்பணிப்பாளர்கள் மேலும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவர்கள் அழைப்பு விடுத்தும் இவ் விழாவிற்கு வராமை ஒரு ஆரோக்கியமான தீர்மானம் அல்ல. தீர்மானங்கள் எடுப்பதற்கு முன்பு போதிய தகவல்கள் திரட்டப்படுவது அவசியம். அத்துடன் பல்வேறு அம்சங்களும் சீர்தூக்கி ஆராயப்பட வேண்டும். இக் குறிப்பிட்ட நிலமை தொடர்பாக தீர்மானம் எடுத்தலின் போது உண்மையான பிரச்சினைகளைச் சரியாக அடையாளம் காண வேண்டும். தொடர்ந்து பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய மாற்று வழிகள் எந்த அளவிற்கு உருவாக்கப்படுகின்றதோ, அந்த அளவுக்குச் சிறந்த தீர்மானத்தினை எடுக்க முடியும். இப்பிரச்சினைகளின் மாற்று வழியாக வலய அல்லது கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள் அவ் விழாவிற்கு தத்தமது பிரதிநிதிகளையாவது அனுப்பி இருக்க வேண்டும்.

**விடய ஆய்வுக்கான மாதிரி**

இவ்விடயம் தொடர்பான செய்தி *1997* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதிய Daily News பத்திரிகையில் வெளிவந்தமை இங்கு தரப்படுகின்றது.

*10* வயது நிரம்பிய வீட்டுப்பணியாளரைத் துன்புறுத்தியமைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா 30,000 அபராதம் செலுத்துமாறு ஆசிரியர்களுக்குக் கட்டளையிடப்பட்டது.

சிலாபத்தில் வாழ்ந்த ஒரு தம்பதியினர், தாம் 10 வயது நிரம்பிய வீட்டுப்பணியாளை உடல் ரீதியாகத் துன்புறுத்தினர் என்று ஏற்றுக் கொண்டதன் விளைவாக, சிலாப மாவட்ட நீதிபதி பிரியங்கர பண்டார ரூபா 30,000 பணத்தினை அந்த வீட்டுப் பெண்ணின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்து, அதன் பின்னர் அந்தச் சேமிப்புப் புத்தகத்தை மார்ச் மாதம் 14 ஆம் திகதி மீண்டும் அவர்கள் சிலாப மாவட்ட நீதிமன்றில் தோன்றும் போது கையளிக்க வேண்டும் எனக்கட்டளையிட்டார்.

ஆசிரியர்களாகக் கடமையாற்றும் இத் தம்பதியினர் எச். ரேணுகா சுபாஷினி என்ற பெண்ணை இரு வருடங்களாகத் தமது பாதுகாப்பில் வைத்துத் துன்புறுத்திமைக்காகக் குற்றம் சுமத்தப்பட்டனர்.

தான் பெற்ற மனிதாபிமான மற்றசெயல்கள், சுடுகாயங்கள், அடி உதை போன்றவற்றை ஊர்க்காவலருக்கு வெளிப்படுத்திய சுபாஷினி, தூரத்து உறவினரான இத்தம்பதியினரிடம் மீண்டும் போவதற்கு மறுத்துவிட்டாள்.

சிலாப ஊர்க்காவலர்கள் குற்றச்சாட்டுக்களைப் பதிந்த பின்னர், நீதிமன்றத்திற்குத் தாம் அழைக்கப்படும் போது சான்று பகருவதாகக் கூறினார்.

சாட்சிகளாக – பொறுப்பு பொலிஸ் உத்தியோகத்தர் (OIC) பொலிஸ் அதிகாரி (I.P) சிலாப மாவட்டப் புலனாய்வு குற்றப் பிரிவைச் சேர்ந்த எச். வி. எஸ். ஹெற்றியாராச்சி (OIC), சிலாபம் குழந்தைப் பராமரிப்பும்பெண்கள் பொலிஸ் குற்றப்பிரிவு நில்மினி பீரிஸ், தலைமை அலுவலக அதிகாரி (HQI), பொலிஸ் அதிகாரி டபிள்யூ விக்கரமரட்ன, இதற்கு முன்பு, முதன் முதலாக நீதிமன்றத்தில் தோற்றிய போது சிலாப மாவட்ட நீதவான் இப்பிள்ளையின் சமூகவியல் தொடர்பான அறிக்கையைச் சிலாப பிள்ளை நன்னடத்தை பாதுகாப்பு நிலைய அதிகாரி கே. எஸ். ஜே. காந்தி அசோக்காவிடம் கேட்டிருந்தார்.

பின்னர் நன்னடத்தை நிலைய அதிகாரி காந்தி அசோக்கா தனது அறிக்கையை சமர்ப்பிக்கையில் கூறியதாவது. ரேணுகா சுபாஷினியின் தகப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலை புரிந்தவர் என்றும், தாயார் வி. நிர்மல் பெணாண்டோ வெளிநாட்டில் தொழில் புரிவுதாகவும் கூறினார். பிள்ளையினது தாயாருக்கும் இவ் ஆசிரியர் தம்பதியினருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததென்றும், ஆனால் துன்பநிலைக்கு உட்பட்ட சுபாஷினி தம்பதியினரின் 8 வயது, 6 வயது நிரம்பிய பிள்ளைகளையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பு இருந்த காரணத்தால் இவ்வுறவில் விரிசல் ஏற்பட்டது:

இப் பிள்ளை துணிகள் துவைத்தல், வீட்டைத் துப்பரவு செய்தல், சமைத்தல், சமையல் உபகரணங்கள் கழுவுதல் போன்றவற்றை மேலதீகமாகச் செய்ய வேண்டியிருந்தது. சுபாஷினி, இத்தம்மபதியினருடன் வசிப்பதற்குத் தனியாகச் சென்ற பிற்பாடு சிறு சிறு தவறுகளுக்கு உடல் ரீதியாகத் தண்டிக்கப்பட்டார். மிக அண்மையில் இதன் காரணமாகத் தலையில் ஓர் காயம் ஏற்பட்டது.

"என்னுடைய புலனாய்வுகளின் போது, இவ்வாசிரியர் தம்பதியினரது பெற்றோர் இவர்களது அடி, உதை போன்ற துன்புறுத்தலை நன்கு அறிந்திருந்தனர். அத்துடன் அப்பிள்ளையைக் காரணமில்லாமல் துன்புறுத்த வேண்டாம் என்றும், அப்பிள்ளையயை அவளின் பாதுகாவலரிடம் கையளிக்குமாறும் கூறியிருந்தனர். இந்தப்பிள்ளைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளை கல்வி, சுதந்திரம் ஆகியவற்றை இத் தம்பதியினர் வழங்கத் தவறிவிட்டனர் என்பது தெட்டத் தெளிவாகின்றது.

என்னுடைய கணிப்பீட்டின் படி, இப் பிள்ளை 12 வயது நிரம்பியவள். நாத்தாண்டியாவிலுள்ள ஒரு பாடசாலையில் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளாள். இரண்டு வருடங்களாகப் பணியாளாகக் கடமையாற்றியுள்ளாள். பல தடவைகள் அவள் மூர்க்கத்தனமான துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாள்.

இப்பிள்ளை புறக்கணிக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டு அலட்சியப்படுத்தப்பட்டுள்ளாள். இவ்வாறு துன்பம், சித்திரவதை, வேதனை ஆகியவற்றிற்கு உட்பட்டவளுக்கு நஷ்டஈடு செய்யும் முகமாகச் சிறிய தொகை வழங்குவது பொருத்தமானது ஆகும்.

ஆகையால் இவளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு உதவ வேண்டுமென நீதிமன்றத்தினைக் கேட்டுக் கொள்கிறேன். இது இவ்வாறிருக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஆண் ஆசிரியருடன் மேற்கொண்ட உரையாடலின் போது, ரூபா முப்பதாயிரத்தை வங்கியில் இப்பிள்ளையின் பெயரில் வைப்புச் செய்வதற்குச் சம்மதம் தெரிவித்திருந்தார். பெண் ஆசிரியர் பிரசவத்திற்குச் சென்றிருந்தார். அத்துடன் இந்தப்பிள்ளை மீண்டும் இத் தம்பதியினரின் வீடு செல்ல மறுத்துவிட்டாள். இவளை வென்னப்புவலிலுள்ள, டம்மலதேனியாவிலுள்ள சிறுவர் இல்லத்திற்கு அனுப்புவது பொருத்தமாக அமையும்.

**வினாக்கள்:–**

1. பிள்ளைகளின் உரிமைச் சாசனத்தின்படி றேணுகா சுபாஷினியின் எத்தகைய உரிமைகள் அவ் ஆசிரியத் தம்பதியினரால் சீர் குலைக்கப்பட்டன என்பதை இனம் காண்க?
2. தற்போது இலங்கையில் மேற்கூறப்பட்டது போன்ற பல சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன இவற்றை தீர்க்க உமது ஆலோசனைகளைத் தருக?
3. பாடசாலை மாணவர்களுக்கும், பாடசாலையை விட்டு விலகிய சிறுவர்களுக்கும் வாழ்க்கை வழிகாட்டல் திட்டங்கள் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் இக் கூற்றை ஆராய்க? தற்போது அரசாங்கத்தால் இதற்கான ஏதும் ஏற்பாடுகள் பின்பற்றப்படுகின்றனவா?
4. சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய ஆசிரியர்களே அதை மிக மோசகரமாக மீறுவது எந்த அளவுக்கு நியாயமானது?
5. இப்பிள்ளையின் தயாராக நீர் வெளிநாட்டில் இருந்தால் குறிப்பிட்ட சம்பவத்தின் பின் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவையாக இருக்கும்?

இவ் விடய ஆய்வுக்கான பிரச்சினை சிறுவர்கள் உரிமைகள் தொடர்பானவை இதை மையமாக வைத்து விடைகளை எழுதுங்கள்.

## விடய ஆய்வுக் கற்கை 02

"இக் கூட்டத்தை நடத்த நான் எத்தகைய ஆவலோடு காத்திருந்தேன். .... பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிக்க உழைத்த அளவு... எங்கே இந்த ஆசிரியர் குலாம்? எமது கருத்துக்கள் பற்றி எத்தகைய ஊக்கத்தையும் காட்டவில்லையே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் அலுவலகத்தில் இருந்தவாறு தனிமையில் சிந்திக்கின்றார். முதல்முறையாக அதிபர் பதவியைப் பெற்ற தாம் புது வருட ஆரம்பத்திலேயே இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளதை அறிந்தவுடன் அவரில் தோன்றிய மகிழ்ச்சி நினைவில் வருகின்றது. தமக்கு வழங்கப்பட்ட பணியைச் சிறப்பாக ஆற்றுவதே அவரது குறிக்கோள்களாக இருந்தது. பாடசாலையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் பற்றிச் சிந்திக்கலானார். இக்கருத்தை ஆசிரியர் குளாத்திடம் சமர்ப்பித்து, அவர்களது ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு அவர் முதலாவது ஆசிரியர் கூட்டத்தைப் பயன்படுத்த முனைந்தார். பாடசாலையின் நன்மையைக் கருத்திற் கொண்டுதான் அவர் மாணவர்களை முன்கூட்டியே வீடுகளுக்கு அனுப்பிக்கூட்டத்திற்காக நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

எனினும் அக் கூட்டம் அவர் எதிர்பார்த்த முறையில் அமையவில்லை. ஆரம்பத்திலேயே புதிய அதிபரை வரவேற்கவெனத்தாமாகவே எழுந்த சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் விரிவுரை ஒன்றையே நிகழ்த்த அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டார். அவ்வுரை எதிர்மாறான கருத்துக்களைச் சார்ந்ததாக இருந்த காரணத்தினால், அதிபர் மிகுந்த சிரமத்திற்கு உள்ளானார். அடுத்து அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றி கூறித் தமது கருத்துக்களைச் சமர்ப்பிக்க் ஆரம்பிக்கும் போதிருந்தே தாம் இழுபறிக்கு ஆளாகியிருப்பதை உணரலானார். இழுபறிக்கயிற்றின் தம்பக்க அந்தத்தில் தான் மட்டும் தனித்திருப்பதையும் நன்கு புரிந்து கொண்டார். தாம் சமர்ப்பித்த சகல கருத்துக்களுக்கும் ஏளனமான நகைப்பும், பின்வாங்கச் செய்யும் வாக்கியங்களும் ஆசிரியர் குழாத்திடமிருந்து பிரதிபலித்தன. அவ்வாறான நிலையைச் சார்ந்து ஆரம்பத்தில் நாலைந்து பேர் மட்டுமே இருந்த போதிலும் படிப்படியாகப் பெரும்பாலானோர் அவர்களைப் பின் தொடர்வோராக மாறுவதையும் அவர் விளக்கிக்கொள்ளலானார்.

“அவை நகர்ப்புற பாடசாலைகளில் முடியுமெனினும் இங்கே செய்ய முடியாதவை.

இப்பிள்ளைகள் கூலி வேலைக்குச் செல்வார்களே அல்லாமல் பல்கலைக்கழகம் செல்ல மாட்டார்கள்”

அன்றாட உணவைத் தேடிக் கொள்ளாத பெற்றோர் பாடசாலை விடயங்களோடு தொடர்பு கொள்வர் என்பது எவ்வாறு நிகழும்?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஆசிரியர் குலாத்திடம் இருந்து தோன்றிய பிரதிபலிப்புக்கள். இவ்வாறிருக்க, பிற்பகல் 1.00 மணியளவில் சில ஆசிரியர்கள் தம் பிரயாணப் பைகளைக் கைகளில் ஏந்துவதையும் அவர் கண்டார்.

"1.15 பஸ்ஸைத் தவறாவிட்டோமாயின் பல மணித்தியாலங்களைத் தெருவில் கழிக்க வேண்டியிருக்கும்" எனக்கூறிய முதிய ஆசிரியை ஒருவர் இருக்கையில் இருந்து எழுந்தார். இது பலரில் பரபரப்பை ஏற்படுத்தவும், கடிகாரத்தைப்பார்க்கவும், தெருவை நோக்கவும் காரணியாக அமைந்தது. ஆசிரியர்கள் தாமே தம்மோடு கதைத்துக் கொள்வதை உணர்ந்து கொண்ட அதிபர், "அப்படியாயின் கூட்டத்தை இப்போது நிறுத்துவோம். எனக்கூறிக்கொண்டு தானாகவே முடிவடைந்த கூட்டத்தை உத்தியோக ரீதியாக நிறுத்தி வைத்தார்.

1. இவ் விடய ஆய்வில் அதிபர் கூட்டத்தினூடு எவ்வாறான விடயங்களை நிறைவேற்றிக் கொள்ள முனைந்திருப்பார்?
2. பொதுவாக நிறுவனங்களில் கூட்டங்களைக் கூட்டுவதற்கான குறிக்கோள்கள் எவையாகவுள்ளன?
3. இவ்விடய ஆய்வில் அதிபரினால் கூட்டத்தை வெற்றிகரமாக நடாத்த முடியவில்லை. நீர் ஒரு சிறந்த கூட்ட முகாமையாளர் என்ற வகையில் கூட்டத்தை நடாத்தும் ஒருவருக்குறிய முக்கிய பணிகளை வரிசைப்படுத்துக?
4. பாடசாலையின் அதிபர்–ஆசிரியர்களிடையே கருத்து மோதலாக எதிர் மறையான (Negative) விளைவுகளே இக்கூட்டத்தின் விளைவாகியது. இதன் விளைவுகள் எவையாகப் பாடசாலையைப் பாதிக்கும்.
5. கல்வி முகாமைத்துவத்தில் பங்குகொள் (Participatory) முகாமை என்றால் என்ன?
6. நேர முகாமையின் முக்கியத்துவத்தை விளக்குக?

**விடைகள்**

1. தனது பாடசாலை தொடர்பான அபிவிருத்தித் திட்டத்தை ஆசிரியர் குழாத்திடம் சமர்ப்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அது தொடர்பாக ஆசிரியர்களது கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்.
3. ஆசிரியர்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தல்.
4. ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல்.
5. எல்லோரிடையேயும் நட்புறவைக் கட்டி எழுப்பி பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக சாதகமான மனப்பாங்கை ஏற்படுத்தி அதன் அபிவிருத்திக்கு ஒவ்வொருவரையும் பங்காளிகளாக்குதல்.

2. 1. கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல்.
2. பங்கு பற்றல் முகாமைத்துவத்திற்கு வலுச்சேர்த்தல்.
3. தெளிவு தீர்வுகள் புலப்படாத பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணுதல்.
4. பொதுவான தீர்மானத்தை மேற்கொள்ளுதல்.
5. ஊக்குவிக்கவும், புத்துணர்வை ஊட்டவும் நிறுவனத்தின் மீது பற்று ஏற்படவும் வழி செய்தல்.

3. 1. திட்டமிடல் – நோக்கங்களை அடையக் கூடியவிதத்தில் சகல விடயங்களையும் முறையாக திட்டமிடல்.
2. கூட்டத்தை ஆரம்பித்தல் (Initiating) புதிய திசையில் கூட்டத்தை முகாமைத்துவ நுட்ப முறைகளுக்கு ஏற்ப அனைவரையும் விளித்து ஆரம்பித்தல்.
3. செவிமடுத்தல்–ஏனையோரின் கருத்துக்களை நன்கு செவிசாய்த்தல்.
4. ஊக்குவித்தலும் வசப்படுத்தலும் (Motivating and Facilitating) குறைவாகக் கதைப்போரை பல்வேறு வழிகளில் ஊக்குவித்தல். பிரச்சினைகளைப் பொறுப்புடன் தீர்க்க முனைபவர்களுக்கு ஊக்குவித்தல், வழங்குதல், நிறுவன உயர்வுக்காய் அனைவரையும் வசப்படுத்தும் புகழும் நுட்பங்களைப் பயன்படுத்தல்.
5. வாயில் கட்டுப்பாடு (Gate-Keeping) இங்கே வாயில் கட்டுப்பாடு என்பது குறைவாகக் கதைப்போருக்கு இடமளிப்பதற்காக அதிகமாகக் கதைப்பவர் கருத்துக்களை வெளியிடுவதைத் தலைமை தாங்குபவர் மட்டுப்படுத்தலாம். அதாவது தலைமை தாங்குபவர் கூட்ட இலக்கை அடையும் பொருட்டு இவ்வாறான மட்டுப்படுத்தல்களை விதிக்கும் போது அது வாயிலை மூடவும், இயன்ற அளவு கலந்து கொள்ளலில் ஈடுபாடாதவர்கள் மட்டில் வாயிலைத் தீர்க்கவும்மேற்கொள்ளும் முயற்சிகள்.
6. சாராம்சத்தைத் தருதல்– இது கூட்டமுடிவில் மட்டுமல்ல பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களிலும் அதனை ஓர் உபாயமாகக் கையாளலாம். ஒரே விடயத்தைத் திரும்பத் திரும்ப கதைப்பதைத் தவிர்க்க சராம்சப்படுத்தல் உதவும்.

7. முற்றுப்பெறச்செய்தல்– கூட்ட இறுதியில் கூட்ட குறிக்கோள்கள் நிறைவேறியிருப்பதற்கான பொறுப்பைத் தலைமை தாங்குபவர் ஏற்க வேண்டும். கூட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் அனைவரும் உணர்ந்து கொண்டால் அக்கூட்டம் வெற்றிகரமாக முற்றுப்பெறச் செய்யலாம்.

4)

1. ஆசிரியர் குழாம் பல்வேறு குழக்களாகப் பிளவுபட்டு, பலப்பரீட்சை வளரும், ஆசிரியர்களின் கவனம் இப்பலப்பரீட்சைகளின் மீது செலுத்தப்படுவதால் கற்பித்தலின் நல்லியல்புகள் குன்றும்.
2. தவறான தலைவர்க்ள தோன்றுவர். அதிபரின் முகாமைத்துவ நடவடிக்கைகள் தடைப்படும். பல சவால்கள் ஏற்பட பாடசாலை நோக்கங்கள் பாதிக்கப்படும்.
3. மானிடத் தொடர்புகள் நலிவடையும், பாடசாலையில் மகிழ்ச்சியான சூழல் அகலும், சுதந்திர வெளிப்பாடுகள் பின்னடையும், ஐயம், பயம், நம்பிக்கையீனம் கொண்ட பாடசாலைச் சமூகம் தோன்றும். ஆக்கபூர்வ அபிவிருதிகளுக்கான வாய்ப்புக்கள் மூடப்படும்.
4. பாடசாலை வெறுப்பான இடமாக அமைவதால் ஆசிரியர் லீவு அதிகரிக்கும், ஊக்கம் சிதையும், மேலதிக பொறுப்புக்களை ஆசிரியர் ஏற்க மறுப்பர். நல்லாசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல முனைவர். மாணவர்கள் கல்வி பாதிப்படையும்.
5. பாடசாலையின் பிணக்குகளைப் பெற்றார் கேள்விப்படுவதால் பாடசாலை பற்றி மக்கள் கொண்டிருக்கும் நல்லபிப்பிராயம், புகழ் என்பவற்றுக்குப் பங்கமேற்படும். மக்களின் ஒத்துழைப்புக் குன்றும். சிறந்த ஆசிரியர் பாடசாலைக்குப் புதிதாக நியமனம் பெற விரும்பார்.

5) தொழில் சார்ந்த அமைப்புக்களுக்கு (Professional Organizations) உகந்ததும், வெற்றிகாணும் முரண்பாட்டு முகாமைத்துவ நுட்பங்களே பங்கேற்பு முகாமைத்துவ முறைகள் எனப்படுகின்றன. பாடசாலைக் கூட்டங்கள் இவ்வாறான நுட்பங்களைக் கையாளவும், விருத்தியாக்கிக் கொள்ளவும் உகந்தவையாகும். அதிபர் தனது கடமைகளை ஆசிரியர்களுக்குப் பகிர்ந்தளித்து அவர்கள் மூலமாக பல அபிவிருத்திச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளைச் செய்யவும் உபாயங்களுக்கான வெற்றிகளே பங்கு கொள் முகாமையின் அடிப்படையாகும். இதற்கு முதலில் ஆசிரியர்கள் மீது அதிபரும், அதிபர் மீது ஆசிரியர்களும் நம்பிக்கை வைக்க வேண்டும். அல்லது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். மேலும் ஆசிரியர் குழு உறுப்பினர் தொடர்பாக,

1. சுய கௌரவத்தை உருவாக்குதல்– குழு உறுப்பினர்களுக்கு கௌரவம் உண்டு என்பதை ஏற்று அதைப் பாதுகாத்தல். விருத்தி செய்தல்.
2. குழுவின் பலத்தின் மீது கவனஞ்செலுத்துதல்– நபர்கள் ஒன்று சேர்வதால் பலம் உண்டாகின்றது என்பதை ஆணித்தரமாக நம்பி கூட்டு முயற்சிகளுக்கான ஊக்கத்தையளித்தல்.
3. நபர்களை வளங்களாகக் கருதுதல்– எல்லா நபர்களும் பெறுமதியான நபர்களே எனவே அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கும் போது இவ் வளங்களைக் கையாள்வதற்கான பொறுப்புக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
4. குழுத்திட்டமுகாமை– பிரச்சினை தீர்வில் குழுத்திட்ட முகாமைத்துவம் மிகப் பிரதானமாகும் என்ற நம்பிக்கையின் படி அனைத்துத்திட்ட முகாமைத்துவங்களையும் குழுத்திட்ட முகாமைத்துவங்களாக அமைத்துக் கொள்ளல்.
5. பொறுப்புக்களைக் குழுவிடம் ஒப்படைத்தல்– குழுவினால் இடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல், அவற்றை வெற்றிகரமாக்கல் போன்ற பொறுப்புக்களையும் குழுவே ஏற்றுக் கொள்ளல்.

இவ்வாறாக முகாமையாளர் பணியாளர்களை இணைத்து பங்குபடுத்தி முகாமைத்துவக் கருமங்களினூடு உச்சப் பயனைப் பெற பங்கு கொள்ள முகாமை வழிகாட்டுகின்றது.

6) எப்போது எந்த வேலையை, எந்த நேரத்தில் எவ்வாறு செய்து வெற்றி பெறலாம் என்ற வகையில் எந்த ஒரு முகாமைத்தவ செயல்பாடுகளையும் ஒழுங்கமைக்க நேர முகாமையே முதன்மை நிலையிலுள்ளதுடன் அதன் சொத்தாகவுமுள்ளது. மிகப் பெறுமதிமயானதாகும். இவ்வளத்தைச் சேமிக்வோ முடியாது. இழந்தால் மீட்க முடியாது. எப்பொழுதும் ஓடிக் கொண்டிருக்கும் அதை முகாமையாளர்கள் முன்கூட்டியே திட்டமிட்டுப் பயன்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதில் மிகுந்த அக்கறை எடுக்க வேண்டும். அதுவும் பாடசாலை முகாமையில் நேரம் மிகுந்த திட்டமிடலினூடு பயன்படுத்த வேண்டும். இல்லையேல் இளஞ் சந்ததியினரின் எதிர்காலம் அழிந்துவிடும். இதில் அதிபர்–ஆசிரியர் மிகுந்த கவனமெடுக்க வேண்டும். நேரப்பயன்பாட்டுக்கான நாளாந்த, வாராந்த, மாதாந்த, காலாண்டு, அரையாண்டு, வருடாந்த திட்டங்களை முறையாகப் பின்பற்ற வேண்டும். மேலும் கடந்த காலத்தை மீளாய்வு செய்தலும் நேர முகாமையின் முக்கிய அம்சமாகவுள்ளது. மேலும் நேரத்தை வீணாக்குபவையாகத் திருடுபவையாகப் பின்வருவன கொள்ளப்படுகின்றன.

ஒழுங்குபடுத்தப்படாத கூட்டங்கள், திட்டமிடலின்மைகள், திட்டமிட்டாத வேலை ஒப்படைப்புக்கள், தீர்மானமின்மைகள், நெருக்கடிகளை முகாமை செய்யும்போது சுயகட்டுப்பாடு ஒழுக்கமின்மைகள், சுய அபிவிருத்தி இன்மை, தெளிவற்ற பொறுப்பு ஒப்படைப்பு, குறிப்பிட்ட பணிகளில் அதிக ஈடுபாடு, பணியாளர்களில் முன்னுரிமை வழங்காமை, திட்டமற்ற தொடர்பாடல்கள் என்பவைகளாகவுள்ளன.

பொதுவாக கல்வியியல், கல்விமுகாமைத்துவம் தொடர்பான விடய ஆய்வுகளை, கல்விநிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை, அதிபர்தரம், ஆசிரியர்தரம் போட்டிப்பரீட்சைகளில் வெற்றிகொள்ள பினவரும் கல்வியமைச்சின் சுற்று நிருபங்களையும் ஏனைய அறிக்கைகளையும் வாசித்து குறிப்பெடுத்தல் விடைகளை ஆதாரத்துடன் எழுத உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சுற்றுநிருப இலக்கம் | விடயம் | இலக்கம் | திகதி |
|---|---|---|---|
| 230<br>6/254<br>143/77 | பாடசாலைகளுக்கான புதிய கல்வி ஆலோசனைகள்<br>ஆசிரியர் குழாத்தின் கலந்துரையாடல்கள்<br>பாலர் பிரிவு வேலைத்திட்டம் தொடர்பான அடிப்படை ஆலோசனைகள் | 2/12<br>6/380 | 1971-10-20<br>1993-10-24<br>1978-01-04 |
| ஏபீ<br>எம்டீ/23 | விசேட பயிற்சித் தராதரப்பத்திரம் உள்ள ஆசிரியர்களின் ஆகக் குறைந்த கற்பித்தல் மணித்தியாளங்கள்<br>பாடசாலையின் ஆசிய தேவைகள்<br>Guidelines for determinig the classes / grades of the supervisory staff of Each school | 3/1552<br>3/பீபீ/ஜீ/3.1<br>3/பீஎம்டி<br>எஸ்எம்/31 | 1979-03-28<br>1989-05-19 |
| 1986/13<br>1988/1<br>1981.13<br>1983/3 | திருத்தப்பட்ட பாடவிதானங்களை அமுலாக்குதல்<br>வாழ்க்கைத்திறன் பாடத்தைக் கற்பித்தலை ஒழுங்குபடுத்தல்<br>பாடசாலைகளில் மனிதவலு தொடர்பான குறைந்தபட்ச பயன்பாடு.<br>வரலாறு. சமுகக்கல்வி திருத்தப்பட்ட பாடவிதானத்தை அமுலாக்குதல் | 271<br>வா.தி/5<br>3/அகி/2<br>333<br>2/பாச/6/<br>44 | 1988.01.04<br>1982.02.27<br>1988.07.06 |
| 24 | மாணவர் சங்கங்கள் | | 1962 |
| 165 | பாடசாலை மாணவர்களின் சீருடைகள் | | 1970 |
| 258 | தேசிய கொடியை ஏற்றுதலும் பாடசாலைக் கூட்டமும் | பா.ச.வி<br>11/595 | 1972.06.01 |
| 335 | க.பொ.த (சா.த) வகுப்புக்களிலிருந்து க.பொ.த (உ.த) வகுப்புக்களுக்கு வகுப்பேற்றம் செய்யப்படல் | பா/21/10 | 1972.01.01 |
| 254 | ஆசிரியர் கலந்துரையாடல் | | 1973.01.24 |
| 162 | பகிரங்க வைபவங்களின் பொருட்டுப் பாடசாலை மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்தல் | 428 | 1974.08.01 |
| | கலாச்சாலைகள் தொழிநுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் மதுபான போதைப்பொருள் என்பவற்றை தடைசெய்தல் | 099 | 1977.08.31 |
| 1980/5 | பாடசாலைக் கட்டொழுங்கு | 1/பா/<br>6/7 | 1980.12.01 |
| 1983/2 | பாடசாலை மாணவர்களைச் சமூக சேவைகளில் பங்கேற்கச் செய்தல் | 2/கிவிபா/<br>7/29 | 1986.04.11 |
| | பாடசாலை மத்திய உணவு முத்திரை முறையை அமுலாக்கல்<br>மத்திய உணவுமாணவர் முத்திரை முறை | எம்.எம்.<br>பீ 26/90 | 1990.10.05<br>1990.11.08 |
| 17/91 | பாடசாலைகள் மற்றும் கல்வியோடு தொடர்புடைய நிறுவனங்கள் தொடர்பான மேற்பார்<br>வேலைத்திட்டங்கள்<br>புலமைப்பரிசில் ஜனாதிபதியின் புலமைப்பரிசில்கள் செல்லுபடியாகும் கால எல்லையை நீடிக்கச் செய்தல் | எஸ்டீ<br>எஸ்எஸ்<br>/96<br>அ/உ/<br>1199 | 1991.06.03<br>1982.03.29 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 325 | அரையாண்டுத் தேர்வுகளும் மாணவரின் தேர்ச்சி பற்றிய மதிப்பீடுகளும் மாணவர் விடுதிகள் | பா.ச. 6/254<br>பா.ச/4/ 127 | 1973.10.26<br>1974.06.26 |
| | ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தாரர்களை இடம் மாற்றல் செய்தல்<br>புலமைப் பரிசில் தாரர்களின் பெற்றோர்களது வருடாந்த வருமாண எல்லையை அதிகரித்தல் | பா.ச. /4/4 202<br>பா.ச.4/ 202 | 1977.06.16<br>1977.07.16 |
| 144/77 | புலமைப் பரிசில் முறை, புலமைப் பரிசில்களுக்கு பணஉதவி வழங்குதல் | பா.ச/4/ 229 | 1977.12.30 |
| 1988/3 | கல்விப்பொதுத்தராதர பத்திர (உயர்தர) வகுப்புக்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் | 2/பா.ச/ 227 | 1988.03.23 |
| 1982/2 | பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பாடசாலைகளின் அபிவிருத்தியின் பொருட்டுப் பெற்றாரை நேரடியாகப் பங்கேற்கச் செய்வதற்கான வேலைத்திட்டம் | 3/பா.ச/ 9/4/28<br>3/பீஎம் டீ/ எஸ் டிடீசீ எஸ் /131 | 1982.03.20<br>1987.08.12 |
| 123 | வசதிகள், சேவைக்கட்டணங்கள் | பா.ச/ | |
| 185 | வசதிகள், சேவைக்கட்டணங்கள் | 14/19/2 0<br>பா.ச. /14/ 19/20 | 1969.06.11<br>1970.12.09 |
| 296 | வசதிகள், சேவைக்கட்டணங்கள் | பா.ச/1/ 137 | 1973.02.28 |
| 328 | வசதிகள், சேவைக்கட்டணங்கள் | பா.ச/14 / 19/20 | 1973.11.27 |
| 26/75 | வசதிகள், சேவைக்கட்டணங்கள் | பா.ச/15 / 131 | 1975.06.27 |
| 57/75 | வசதிகள், சேவைக்கட்டணங்கள் | பா.ச.14 / 19/20 | 1975.11.05 |
| 262 | சுகயீனக் காரணங்களுக்காக லீவு பெற்றுக்கொள்ளும் போது வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் | பா.ச/10 / 223(ஆ ) | 1974.11.19 |
| 459 | பாடசாலைக் கட்டிடங்களைப் பயன்படுத்துதல் | பா.ச 14/19 | 1974.11.05 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாவிய துணைநூல்கள்:-


1. ஆய்வு முறையியல் - பேராசிரியர். சபா. ஜெயராசா கல்வியியல் ஆய்வுக்கழகம், யாழ்ப்பாணம் - 2000
2. ஆற்றுப்படுத்தலும் சீர்மியமும் - பேராசிரியர். சபா. ஜெயராசா பட்டதாரி ஆசிரியர் வாண்மை விருத்தி அமைப்பு, யாழ்ப்பாணம்
3. Effective school Management – Everard K.B, and G. Morris, Harper and Row Publishers London – 1985
4. A Hand Book of Personnel Management Practice – Armstrong – A Kogan Page Limited, U.K – 1996
5. Management in the Next millenneium – Milke John B.H. Ltd, Oxford, U.K. – 1995
6. Ministry of Education and Higher Education – The Presidential Task Force on General Education – 1997
7. De. Centralisation of Education Administration in Sri Lanka, in 1984, A Case study in the matara region (Prepared for the BRIDGES (U.S.A) Project and NIE, maharagama) – 1989
8. Basic Training Programme in Educational Planning and management, Book 1 – viii, Uunesco Regional office of ecducation in Asia and Oceania, Bankok - 1980




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

## இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப்பரீட்சை (1987) – 1988 மே

## Case study relating to educational administration

**விடய ஆய்வு** நேரம் : 2 மணி

**இவ்விவரனத்தை வாசித்து எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**

இவ்விவரனம் புதிதாக நிறுவப்பட்ட குடியிருப்பினை அண்டிய பிரதேசத்திலுள்ள வித்யாதான வித்தியாலயத்தைப் பற்றியதாகும். தளர்விலாத அபிவிருத்தி கண்ட ஒரு கனிட்ட பாடசாலையாகக் திகழ்ந்த இப்பாடசாலை அண்மையில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையிலான மிகப் பெரிய, துரிதமான அதிகரிப்புடன் பாரிய மாற்ற மொன்றைக் கண்டது. வட்டாரத்தில் கிராமக் குடியிருப்புக்கள் சில தாபிக்கப்பட்டதன் விளைவாகவே அதிகரித்த அளவில் மாணவர் இங்கு அனுமதிக்கப்பட்டனர். இதற்கு இன்னுமொரு காரணம், இப்பிரதேசத்தில் இப்பாடசாலைக்கு இருந்த பெருமதிப்பாகும். பெண் பிள்ளைகளுக்கும் ஆண்பிளளைகளுக்கும் சிறந்த அடிப்படைக் கல்வியை வழங்கிவரும் ஓர் இடமாக இப்பாடசாலை குறிப்பிடப்பட்டு வந்தது.

தற்பொழுது பாடசாலையில் அனுமதிக்கபட்டிருந்த மாணவர் எண்ணிக்கை 950 ஆகும். அங்கிருந்த அதியுயர்ந்த வகுப்பு கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரமாகும். இப்பாடசாலையின் ஆசிரியர் குழுவில் பயிற்சி பெற்ற ஒரு தொகையான பட்டதாரிகள், தனித்துறை ஆசிரியர்கள் உட்பட 35 பேர் இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் அதிபர் திரு. வித்யாசேகர குணதாச இப்பாடசாலையின் அதிபராகப் பத்தாண்டுகாலம் சேவையாற்றியவராவார். எட்டு ஆண்டுகாளகப் பயிற்சி பெற்ற ஆசிரியராக இருந்த அவர் சுயமாக கற்று வெளிவாரிப் பட்டதாரியானார். திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து அவரது கல்வி டிப்ளொமாப் பட்டத்தையும் பெற்றுள்ளார். சென்ற ஆண்டு அதிபர்கள் சேவையின் முதலாம் வகுப்புக்குப் பதவியுயர்த்தப்பட்டார்.

கடந்த ஆண்டு பாடசாலைக்கு எட்டு வகுப்பறைகளைக் கொண்ட ஒரு புதிய கட்டடம் - இருமாடிக் கட்டடமொன்று கட்டப்பட்டது. இட நெருக்கடியைக் குறைப்பதற்கு எழுந்த பல்வேறு வேண்டுகோள்களுக்குப் பதில் நடவடிக்கையாகத் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இப்புதிய கட்டடம் பொதுவாக முற்போக்கு வாய்ந்த ஒரு பெரிய நடவடிக்கையாகக் கருதப்பட்டது. இப் புதிய கட்டடம் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இது தொடர்பில் அதிபரின் கடமைக்கூறு உண்மையில் முக்கியத்துவம் வாய்ந்ததாயிற்று. வெளி நிறுவகங்களினதும் நிர்வாகக் கட்டமைப்பின் சில பகுதிகளினதும் முயற்சிகளை இயைபு படுத்துவதற்கு நிறைவேற்றப்படவேண்டிய வேலைகள் பல இருந்தன. இப்பணியில் உள்ளூர்க் கல்வி அலுவலகத்திற்கு முக்கிய பங்கொன்று உண்டு என அதிபர் நம்பினார் எனினும் அவற்றுக்காகக் காத்திருந்த காலம் ஆறு மாதங்களுக்கு மேலாக நீடித்தது. கடிதத் தொடர்புகளின் பிரதிகள் பாடசாலைக் கோப்புகளைத் தேடிப்பெறச் செய்தன. "நிலைமை மோசமகிவிட்டது. உண்மை வேண்டும்" என்று உள்ளாரக் கிடந்தத தனது அதிருபபியை அவர் உதவி ஆசிரியர் சுமித்திரசேனவுக்கு வெளியிட்டார். சுமித்திரசேன ஓர் இளம் பட்டதாரியாசிரியராவார். அவர் மிகச் சமீப காலத்திலேயே கல்வி டிப்ளோமாப்பட்டத்தைப் பெற்றிருந்தார். பாடசாலை விவகாரங்கள் பலவற்றில் அவர் விரும்பத்தகுமளவில் கடுமையாக உழைப்பார். "பாடசாலையைக் கட்டி யெழுப்பியவர் நீர். தற்பொழுது பாடசாலையை விட்டு விலக எண்ணுகிறீர். மக்கள் இச்செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைவர். உண்மையில் உம்மை எவரும் வெறுக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபாடங்கள், நூலக ஒழுங்கமைப்பு, பழைய மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்குரிய நன்கொடைகள், சமாந்தர வகுப்புக்களின் முகாமை, ஒழுங்கமைக்கப்பட்ட சில விளையாட்டு முயற்சிகள் என்பவை பற்றி எழுகின்ற எண்ணற்ற முறைப்பாடுகள், ஆசிரியர்களது வேண்டுகோள்கள் ஆகியவற்றைச் சமாளித்துக் கொள்ளுதல் எனக்குச் சிரமமாகவுள்ளது. இவ்விடயங்கள் யாவும் ஒன்றன் மேலோன்றாக அடுக்கிக் கொணரப்படும் பொழுது யாவற்றையும் ஒரே குழப்பமயமானவையாகக் காண்கிறேன் என்று குணதாச விளக்கினார்.

"தனியொரு பாடசாலைக்கு அனைத்தையும் கொடுக்கமுடியாது எனும் கருத்தில் அலுவலகம் நிலைகொண்டால் நாம் எமது கருத்துக்களைப் பலமாக முன்வைத்தல் வேண்டும்"

"புதிய கட்டடம் காரணமாகவே தளபாடம் வழங்கலில் தீவிரமான கவனக்குறிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது"

"தளபாடமற்ற புதிய பாடசாலைக் கட்டடத்தைப் பயனற்ற ஓர் அன்பளிப்பாக மக்கள் கருதத் தலைப்பட்டுள்ளனரா?"

அவர்கள் இருவரும் அன்று தமது பாடசாலைக்கான தளபாடம் வழங்குதலுக்கு முன்னுரிமை அளிக்கப்படச் செய்தனர். அவசரக் கட்டளையொன்றின் பேரில் கிடைக்கக் கூடும் எனக் கருதப்பட்ட சில தளபாடங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர்கள் நம்பிக்கை கொண்டனர். தளபாடம் வழங்கற் பிரிவின் மூலம் இவ்விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு, குணதாசவுக்கு சுமித்திரசேனவின் வாதங்கள் எவற்றையேனும் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை. உறுதியாக நிகழக்கூடிய விடயங்களையிட்டு ஓரளவு திருப்திகொண்ட உணர்வுடன் அவர்கள் கல்வி அலுவலகத்தைவிட்டு நீங்கினார். பாடசாலைக்குத் திரும்பும் வழியில் பாடசாலை தொடர்பான பல விடயங்களையிட்டும் அவர்கள் கலந்துரையாடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசிரியர், பாடநூல்கள் பாடநெறிகளையும் பகுத்து ஆராய்தல் வேண்டும். இவை குறித்து நெடிது கலந்துரையாடுவதுடன் கற்பித்தலுக்குதலும் பொருட்களையும் விருத்தி செய்துவர வேண்டும். தரம் ஒவ்வொன்றுக்கும் ஏதேனும் கற்பித்தல் ஒழுங்கமைப்பு இருத்தல் வேண்டும் என்றெல்லாம் அவர்கள் கூறுகிறார்கள் போற் தெரிகிறது. இவை எவையும் இன்றியே சிறந்த கறிபித்தல் நிகழலாம் என்று உறுதியாக நான் நம்புகிறேன் என்று கூறினார் குணதாச.

"நீர் குறிப்பிட்ட யாவற்றையும் முற்று முழுதாகப் புதியவையென்றோ அன்றேல், சிரமமானவை என்றோ கருதுகிறீரா," என்று வினாவினார் சுமித்திரசேன. அவர்கள் கலந்து உரையாடிய ஏனைய விடயங்களும் சில கீழே தரப்பட்டுள்ளன.

"பலிதா என்னும் பழைய மாணவர் ஒருவர் பாடசாலைக்குப் பட்டிகைப் பதவி (Cassette Recorder) ஒன்றையும் வெறுமையான சில பட்டிகைகளையும் வழங்க முன்வந்துள்ளார். அதை ஏற்று அந்த அன்பளிப்பினால் யாம் பயனடைதல் வேண்டும். புதிய தொழில் நுட்பச் சாதனங்களில் நீர் பரிச்சமுடையவர் என்று நான் நம்புகிறேன் எனவும் பாடசாலையில் தொழில் நுட்பவியலைப் பயன்படுத்துதலின் தொடக்கம் இதுவே போலும்."

"உதவி ஆசிரியர் ஜெயமான நூலக வசதிகளை ஒழுங்கு படுத்துவதற்குப் பயனள்ள முன்மொழிவுகள் சிலவற்றை வழங்குகிறார். நூலக அட்டைகளும் வேறு ஆவணங்கள் சிலவும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளப்படலாம். புத்தக நன்கொடைகள் சில வற்றுக்கும் ஒழுங்கு செய்யப்படலாம். குறிப்பாக புதிய கட்டமொன்று எமக்குக் கிடைத்துள்ள காரணத்தால் நூலகத்திற்கான கட்டடமொன்றைப் பெற்றுக் கொள்ளவும் வசதியுண்டு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசிரியர்கள் பலர் விளையாட்டு முயற்சிகளிலும் விளையாட்டுப் பயிற்சி வசதிகளிலும் தீவிரமான நாட்டத்தைக் காண்பிக்கின்றனர். பயனள்ள முன்மொழிவுகள் சிலவற்றை அவர்கள் வழங்கியுள்ளனர். சமாந்தர வகுப்புகள், கூடிய ஒழுங்கமைப்பு வாய்ந்த வேலைக்கு வாய்ப்புக்களை வழங்கும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த உண்மை பலதடவைகள் எடுத்துரைக்கபட்டுள்ளது.

"ஒரே பொழுதில் விடயங்கள் அனைத்தையும் என்னால் நிறைவேற்றிக்கொள்ள முடியாது. தளபாடப் பிரச்சினையை முதலில் தீர்ப்பேன். ஏனைய விடயங்களை அதன் பினனர் கவனிக்க எண்ணுகிறேன்.

சுமித்திரசேனவும் குணதாசவுடன் தனிப்பட்ட முறையில் கூடிய தொடர்பு கொண்ட விடயங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டார்.

"திணைக்களம் உம்மில் ஓரளவு திருப்தி கண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாக உமக்கு எதிராக முறைப்பாடு எதுவேனும் எழுந்ததில்லை. பாடசாலை குறித்த ஒவ்வோர் அமிசமும் ஏதோ ஒரு வகையில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது" இவை பற்றி குணதாச தனது கருத்துக்களை அதிகம் வெளியிடவில்லை. விடயங்கள் பலவற்றையும் பற்றித் தீவிரமாகச் சிந்தித்தவாராகிச் சுருக்கமான கருத்துரைகள் சிலவற்றை தந்தார். அவை பின்வருமாறு:

"வெகுவிரைவில் – சில நாட்களுக்குள் ஆசிரியர் கூட்டமொன்றைக் கூட்டவேண்டும். ஏறக்குறைய மூன்று மாதங்களாக ஒரு கூட்டமேனும் நடத்தப்படவில்லை. எந்த நடவடிக்கையையும் நான் எடுத்துக்கொள்ளாது முன்மொழிவுகளை, ஒன்றன்பின் ஒன்றாக எடுத்தாராய்தல் பயனற்றதென எண்ணியிருந்தேன்" சுமித்திரசேன ஆலோசனைகள் சிலவற்றை வழங்கினார்.

"புதிய முன்மொழிவு எதுவும் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு வேளையிலும் அதை அற்புதமான ஒரு முன்மொழிவாக நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதைநீர் மிகவும் விரும்புவதாக கூறுவதோடு முன்மொழியும் அவருக்கு வழங்குதல் வேண்டும். இயல்பாகவே அம்முன்மொழிவுகள் நசுங்கிவிடும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

குணதாச அக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. "தெரிவிக்கப்படும் கருத்து ஒவ்வொன்று தொடர்பாகவும் எவ்வாறு நான் எப்படி கூற முடியும்? எழும் புதிய கருத்துக்களை நான் நிறுத்தத் திட்டமிட வேண்டாமா? அவர் மீணடும் ஆசிரியர் கூட்டம் பற்றிய விடயத்துக்குத் திரும்புகிறார்.

"எமது மக்களிற் பலர் இப்பாடசாலையின் வரலாறு பற்றி மிகச் சொற்ப அளவிலே அறிந்துள்ளனர். இப்பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கு குறித்த சில காலம் எம்மிற் சிலர் எங்ஙனம் அயராது உழைத்தோம் என்பதை நான் அவர்களுக்குக் கூறவேண்டும்"

அம்மக்களின் மீது வெளிப்படையான தாக்கத்தை உண்டுபண்ணும் வகையில் இது நிகழ்த்தப்படவேண்டுமென சுமித்திரசேன ஆலோசனை பகர்ந்தார். ஆனால் குணதாச அதற்கு இணங்கவில்லை. "இவ்விடயங்களைச் சிநேக பூர்வமான தொனியில் என்னாற் கூறமுடியும். முன்னைய நாட்களில் எமது மாணவர் எழுதிவந்த முத்தை நிகர்த்த எழுத்துக்காளலான ஆக்கங்களின் பொருட்காட்சி யொன்று குறிப்பிடப்படுதற்குரிய விடயங்கள் பல உள்ளன. "சீகரியாவின் நிழல்கள்" எனும் தலைப்பிலான சித்திரப் பொருட்காட்சி, "தொழிற்படும் கரங்கள்" எனும் தலைப்பிலான கைப்பணிப் பொருட்காட்சி, எமது பாடசாலைத் தோட்டத்தில், அவற்றுக்குரிய புதிய பெயர்களுடன் கவனத்தை ஈர்க்கும் தானங்களான மலர் வேலி, வட்டப்பாகை, பாறைக் கூனல், பானிறக் குன்று, மல்லிகைச் சேலை போன்றவையும் அவை இனங்காணப்பட்டு பயன் கொள்ளப்பட்ட விதமும் – இவை யாவும் பற்றிக் குறிப்பிடுதல் வேண்டும். இவ்வரலாறு வளம் மிக்க ஒன்றாக விளங்கவில்லையா? அது பெருமானம் மிக்கதாகத் தோன்றவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இச்சாதனைகள் பற்றி நீர் பெருமைப்படுதல் வேண்டும் அவற்றைக் குறிப்பிட்டு அவற்றுக்கான பாராட்டையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்" என்று சுமித்திரசேன கருத்துக் தெரிவித்தார்.

இச்சாதனைக்கான பாராட்டை நான் பெற்றுக்கொள்ளவேண்டுமா? அவை பற்றி நான் வீம்பு பேசவேண்டுமா?" அவ்வாறு செய்வதற்குத் தனக்கு உரிமையுண்டா என்று அவர் வினவினார். ஆயினும் பயன் மிக்க ஆசிரியர் கூட்டமொன்றை நடத்துவதற்கான திட்டங்களில் அவர் முனைப்புடையவராக இருந்தார். தற்காலத்துடன் கடந்த காலமும் இணைக்கப்படுதல் வேண்டும் கடந்த காலச் சாதனைகளிலிருந்து அகக்காட்சியொன்றைச் செயன்முறைப்படுத்த முடியுமா?

1. நிருவகக் கட்டமைப்பு, நிருவாகச் செயன்முறை, நிருவாகச் செயல் நிறைவேற்றம் என்பன பற்றிய கோட்பாடு. எங்ஙனம் பொருத்தமான வகையில் வித்யாதான வித்தியாலயத்துக்குட் பிரயோகிக்கப்படலாமென விளக்குக. உமது விடையைத் தெளிவுபடுத்துவதற்கு நூலகத்திற்கான முன் மொழிவுகள் பயன்படுத்தப்படலாம்
(25 புள்ளிகள்)

2. "சுமித்திரசேன பொழுது போக்கும் ஓர் ஆலோசகராக விளங்குகிறார்" சுமித்திரசேன வழங்கிய ஆலோசனைகளை மதிப்பிடுக.

3. வித்யாதான வித்தியாலயத்தின் பிரச்சினை யாது இங்கே தரப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பகுத்தாராய்க.

4. வெற்றிகாணும் ஓர் அதிபருக்குரிய சிறப்பியல்புகள் சிலவற்றை குணதாச பெற்றிருப்பதை ஒருவர் அவதானிக்க முடியும். இதுபற்றிக் கருத்துரை தருக. (25 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடைகளுக்கான குறிப்புகள்**

1. நிர்வாகக்கட்டமைப்பு வித்தியாதான வித்தியாலய சூழ்நிலையை ஆராய்து பார்க்கின்றபோது அங்கு நிர்வாகக் கட்டமைப்பு முறையாகப் பேணப்படாத நிலை உள்ளது. அதிபர் தன்னால் பல விடயங்களைச் செய்ய முடியாதுள்ளமையைக் கூறிகின்றார். (நூலக அபிவிருத்தி, தளபாடம், வகுப்புமுகாமை) இவ்விடயங்களை மேற்கொள்ள நிர்வாகக் கட்டமைப்பில் சீரான ஒழுங்குகளை உடன் மேற்கொள்ள வேண்டும். இப்பாடசாலையின் மாணவர் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப நிர்வாகக்கட்டமைப்பு ஒரு அதிபருடனும் ஒரு உபஅதிபர்களும் தர இணைப்பாளர்கள், பாட இணைப்பாளர்கள் முறையான கட்டமைப்பின் கீழ் கடமையாற்றும் போது பல பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

இப்பாடசாலையின் நூலக விருத்தி தொடர்பாக ஆசிரியர் திரு. ஜெயமான சிறப்பான முன்மொழிவுகளை வழங்கியமையால் , ஆர்வமுள்ள அவரிடம் நூலக அபிவிருத்தி தொடர்பான செயற்திட்டத்தினை ஒப்படைக்கலாம். மற்றும் விளையாட்டு முயற்சிகளில் ஆர்வம் காட்டும் ஆசிரியர்களுக்கும் அத்துறைகளைப் பொறுப்பாக வழங்கலாம். பழைய மாணவர் சங்கத்தைச் செயற்பட வைக்கலாம். முழுமையாக நோக்கும் போது பெரிய தரம் 1C பாடசாலையின் முறையான நிர்வாகக் கட்டமைப்பை முகாமைத்துவ ரீதியில் ஒழுங்குபடுத்தி பிரயோகிக்கும்.

நிர்வாகம் செயன்முறை மேற்குறிப்பிட்ட கட்டமைமப்புக்கு ஏற்ப செயற்படுத்தலாம். இப்பாடசாலையின் நிர்வாகச் செயன் முறையின் முக்கிய குறைபாடாக மூன்று மாதங்களாக ஆசிரியர் கூட்டம் நடைபெறவில்லை. இதனைக் கருத்தில் எடுத்து அதிபர் உடனடியாக கூட்டத்தை ஒழுங்குபடுத்தி பல்வேறு குழக்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வேலைகளை உடன் ஒப்படைக்க வேண்டும். இதை நூலக ஒழுங்கு அதற்கான தளபாட வசதிபெறல், நூல்களை சேகரித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கொடைகளைப்பெறல், ஒரு செயற்திட்டத்தை அதிபர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடி திட்டமிடவேண்டும்.

## 111 நிர்வாகச் செயல் நிறைவேற்றம்

1 முகாமைத்துவ அடிப்படையில் செயற்திட்டங்கள் திட்டமிடல் (planning) அமைப்பு(organization), பணியாளர்களை நியமித்தல் (appointment of staff), வரவு செலவுத்திட்டம் தயாரித்தல் (preparation of budget), ஒருங்கிணைத்தல் (co-ordination), வழிகாட்டலும் இயங்குதலும் (direction), அறிக்கை சமர்ப்பித்தல் செயல்திட்டங்களை ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் பாடசாலை அபிவிருத்திசங்கம் ஆகியோரால் வெற்றிகரதமாக அமுலாக்கல் செய்யலாம்.

2 சுமித்திரசேன கூறிய கூற்றுக்களில் இருந்து இவ்விளைவுக்கான விடைகளைப் பகுத்தாராயலாம். அதிபர் மனமுடைந்து இருக்கையில் அவருக்கு சுமித்திரசேன உற்சாகத்தையும் தைரியத்தையும் ஊட்டக் கூறிய கருத்துக்கள் ஆக்கபூர்வமானவை வரவேற்கக்கூடியவை. அதேவேளை கூடுதலான கருத்துக்கள் அவர் பொழுதுபோக்கு ஆலோசகர் என்பதை உறுதிப்படுத்துகின்றன (தனி ஒரு பாடசாலைக்கு அனைத்தையும் கொடுக்க முடியாது... , தளபாடமற்ற புதிய பாடசாலைக்கட்டடத்தை பயனற்ற ஓர் அன்பளிப்பு என மக்கள் கருத...) போன்ற கருத்துக்கள் இவரது ஆலோசனைகளில் பெரும்பாலானவை பயனற்றவை என்பதைக் காட்டுகின்றன.

3 வித்தியானந்த வித்தியாலயத்தின் பிரச்சினைகள் இப்பாடசாலை தளர்வில்லாது அபிவிருத்தி கண்டது. புதிய குடியிருப்புக் காரணமாகவே பிரச்சினைகள் எழுகிறது. மாணவர் தொகை பல மடங்கு அதிகரித்தமை, இடநெருக்கடி, கட்டடம் கட்டப்பட்டும் தளபாடம் கிடைக்காமை, பல அபிலாசைகளை அதிபரால் நிறைவேற்ற முடியாமை, சமாந்தர வகுப்புமகாமை, விளையாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளை முறைமைப்படுத்தமுடியாமை, எண்ணற்ற முறைப்பாடுகள், கல்வித்திணைக்கள உதவிகிடைக்காமை, நூலக தேவையை நிறைவேற்ற முடியாமை, இவற்றைத்தீர்க்க பல பக்கத் தொடர்புகளை அதிபர் ஏற்படுத்த வேண்டும். பாடசாலையின் பிரதான செற்பாடான கலைத்திட்ட அமுலாக்கம் தொடர்பான சாதகமான நிலையை ஏற்படுத்த வேண்டும். அதிபர் தெளிவும் அறிவும் உள்ளவராக இருத்தல் வேண்டும். இவ்வியல்புகளும்மேற்குறிப்பிட்ட பாடசாலை அதிபரிடம் இல்லாமையும் பிரச்சனையாகவே உள்ளது.

4 தனது தனிப்பட்ட கல்வியை உயர்த்தியமை, திருப்தியான சமூக உறவு மூலம் பல நன்மைகளைப் பெற்றமை, புதிய கட்டடத்தை நிர்மாணித்தமை, பல்வேறு அபிவிருத்திசார் அபிலாசைகளைக் கொண்டிருந்தமை, அயராத உழைப்பு, பாடசாலையில் மிகுந்த அக்கறை, பாராட்டுக்களைப் பெற விரும்பாமை, தன்னால் இயலாத நிலையைப் பகிரங்கமாகக் கூறல், தர்க்கிக்கும் ஆற்றல்.

இங்கு விடைகளுக்கான சுருக்க வழிகாட்டல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் மேலும் பிரச்சினைகளைப் பகுத்தாராய்ந்து, தர்க்க ரீதியில் உதாரணங்கள் கருத்துக்களை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி விடைகளை விரிவாக எழுதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கல்வி நிருவாக சேவையின் 111 ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப்பரீட்சை –1991 ஜூன்

### கல்வி நிருவாகம் தொடர்பான விடய ஆய்வு

நேரம் 2 மணி

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) திரு. பரணவிதானே என்பவர் தென் மத்திய மாகாணத்தின் கல்விப் பணிப்பாளராவார். இப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் முறைமையாகக் கற்பித்தல் நடைபெறவில்லையெனப் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் கல்விப் பணிப்பாளருக்கு அடிக்கடி முறையிட்டு வந்தனர். ஆசிரியர்கள் நேரம் பிந்தி வருகின்றனர். அதிக லீவு எடுக்கின்றனர். பாடக் குறிப்புக்களையும் வேலைத்திட்டங்களையும் அவர்கள் எழுதுவதில்லை. பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆயத்தமாக அவர்கள் வருவதில்லை. பாடசாலை நேரங்களில் பொருள்களை வாங்குவதற்குச் சந்தைக்கும் கடைகளுக்கும் செல்கின்றனர் என்பவையே பொதுவான முறைப்பாடுகளாக இருந்தன. மேலும் ஆசிரியர்கள் தமது பாடசாலைக் கடமைகளைப் புறக்கணித்து பிரத்தியேகக் கற்பித்தலில் அல்லது முழுநேரப் பயிர்ச்செய்கை வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றச்சாட்டு விடுக்கப்பட்டது.

2) மாகாண கல்விப் பணிப்பாளரும் பங்குபற்றியிருந்த, அண்மையிற் கூடிய கல்வி ஆலோசனைக் குழுக்கூட்டமொன்றிலே பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள், தாம் செய்த முறைப்பாடுகள் தொடர்பில் கல்விப் பணிப்பாளர் இதுவரை நடவடிக்கையெதனையும் எடுப்பதற்குத் தவறியுள்ளாரெனவும் நிலைமையைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளெவையும் எடுக்கப்படாவிட்டால் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்துக்கு மாறாகவேனும் தாம் கல்வி , உயர் கல்வி அமைச்சருக்கு அறிக்கையிடவேண்டிய நிர்ப்பந்தமேற்படுமெனவும் அறிவுறுத்திக் கூறினார்.

3) 56 வயதைத் தாண்டிவிட்ட கல்விப் பணிப்பாளர், தனக்கு எதிரான அச்சுறுத்தல் குறித்து மிக அஞ்சினார். தனது சொந்த ஊர் அலுவலகமான தற்போதைய இடத்திலிருந்து தன்னை இடமாற்றுவதற்குக் கௌரவ அமைச்சர் தீர்மானித்தால் தான் சேவையிலிருந்து ஓய்வு பெறக் கட்டாயப்படுத்தப்படுவார் என்பதுடன் தமது பாடசாலைக் கல்வியையே இன்னும் பூர்த்தி செய்யாத, தனது இரு இளம் புதல்வியர் வீட்டில் இருந்ததால் உரிய காலத்திற்கு இளைப்பாறுதல் பற்றிய சிந்தனை அவருக்குப் பீதியை உண்டு பண்ணியது.

4) இக்கூட்டத்தில் பணிப்பாளர் சக்தி வாய்ந்த பேச்சொன்றை நிகழ்த்தி அதிபர்கள் தமது பாடசாலைகளில் நிலவும் சீர்கேடுகள் அனைத்தையும் களைவதற்கு உடனடியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமெனக் கூறினார். ஆசிரியர்கள் இயற்கையாகவே பணிவிளக்கமுள்ளவர்களெனவும் கற்பித்தலில் அவர்கள் அதிக ஆர்வங்காட்டவில்லையெனவும் சுட்டிக் காட்டினார். ஏனைய அரசாங்க ஊழியர்களைப் போன்று அவர்களும் அதிகுறைந்த வேலையைச் செய்து அதியுயர்ந்த நன்மைகளையும் சலுகைகளையும் பெறக் கருதுவதால் அதிபர்கள் அவர்கள் மீது நெருங்கிய மேற்பார்வையையும் கூடிய கட்டுப்பாட்டையும் கொண்டிருக்க வேண்டும் என்றார். இது மிக உறுதியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கமைய நடவாத ஆசிரியர்கள் எவரும் இருப்பின் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்ததற்காக அவர்கள் பற்றிக் கல்விப் பணிப்பாளருக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும். இக்கடமை நிறைவேற்றப்பட்டால் அவர்களை நன்றாகவும் மெய்ம்மையாகவும் தாபிக்க முடியும் என்று அவர் கூறினார். மேலும் தனது அலுவலகத்தில் இத்தகைய ஆசிரியர்கள் பற்றிய மனுக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்பாடுகளையும் கொண்ட ஏடுகளைத் தயாரிப்பதற்கு உடனடியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறினார்.

பணிப்பாளர், அச்சுறுத்தல் தொனியில் இவ்வாறு பேசியதின் பின்னர் இறுதியாக, தமது நிர்வாகக் கடமைகளைத் தகுந்தவாறு நிறைவேற்ற முடியாதிருக்கும் அதிபர்கள் அனைவருக்கும் எதிராகத் தான் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறினார்.

கூட்டத்திலிருந்து அதிபர்கள் தமது அங்கீகாரத்தைத் தெரிவிக்குமுகமாகத் தமது தலைகளை அசைத்தனர். ஆனால் அண்மையிலேயே, கல்வி நிர்வாகக் கல்லூரியிலே கல்வி முகாமைத்துறையில் தனது டிப்ளோமாக் கற்கை நெறியைப் பூர்த்திசெய்தவரான சிங்கராஜமகா வித்தியாலயத்தின் இளம் அதிபர் திரு. சுதாசூரிய என்பவர், தனது ஆசனத்தினின்றும் எழுந்து கல்விப் பணிப்பாளரால் எடுத்தியம்பப்பட்ட குறிப்புரைகள் தொடர்பில் தனது கருத்துக்களைத் தெரிவிக்கையில், வன்மைவாய்ந்த அச்செயல்நெறியைத் தொடக்கத்திலேயே மேற்கொள்வதற்குக் கல்வித் திணைக்களம் எடுத்திருக்கும் தீர்மானம் பற்றித் தான் திகைப்படைந்துள்ளதாக் கூறினார். அடிப்படையில், ஆசிரியர்கள் வேலை செய்வதற்கு விருப்பம் கொண்டவர்களெனவும் பாடசாலைச் செயற்பாடுகளில் அவர்கள் கட்டாயப்படுத்தலின்றித் தாமாக முன்வந்து செயற்பாடுகளில் பங்குபற்றி வருகின்றனரெனவும் தமது பணி இயன்றவரை சிறப்பாகக் கருமமாற்ற முயல்வரெனவும் அவர்களுக்கு வேண்டியது பணியாற்றுவதற்கான ஊக்கலை அவர்களிடம் உண்டுபண்ணுவதேயாகும். எனவும் அவர் கூறினார். மேலும் தற்கால ஆசிரியர்கள் 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆசிரியர்களிலிருந்து மிக வேறுபட்டவர்களெனவும் வெளிப்பாடாது மறைந்திருக்கும் ஆற்றல்கள் பலவற்றை அவர்கள் கொண்டிருப்பதால் அத்தகைய ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் திணைக்களம் மேற்கொள்ள வேண்டுமெனவும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் முறைப்பாடுகள் அனைத்தும் ஆசிரியர்கள் தம் அவதானத்திற்குக் கொண்டு வரப்படவேண்டுமெனவும் அவை பற்றி ஆசிரியர்களுடன் கலந்தாராய்ந்து, நிலவும் சீர்கேடுகள் எங்ஙனம் ஒழிக்கப்பட வேண்டுமெனவும் ஆசிரியர்களது ஆலோசனை பெறப்பட வேண்டும் மெனவும் கூறித் தனது உரையைக் சுதாசூரிய முடித்துக் கொண்டார். தீர்மான மெடுத்தற் செயல்முறையில் ஆசிரியர்களைப் பங்குபற்றச் செய்யும் இம்முறை அதிசிறந்த பயன்களைத் தருமென அவர் கூறினார்.

திரு. சுதாசூரிய வழங்கிய இக்குறிப்புரைகளால் திடீரென மின்னலால் தாக்குண்டவர் போலக் கல்விப் பணிப்பாளர் குழப்பமடைந்தார். மீண்டும் பேசத் தொடங்குவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்த திரு. பரணவிதானேயிற்குச் சில நிமிடங்கள் எடுத்தன. நெடு மூச்சொன்றுடன் தனது சுவாசப்பையை நிரப்பிக் கொண்டு அவர் அமைதியாகப் பேசத் தொடங்கினார். திரு. சுதாசூரியரால் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்கள், குறித்த விடயத்தில் நவீன நூல்கள் எழுதப்பட்டுள்ள வெளிநாடுகள் சம்பந்தப்பட்டவரை பொருத்தமானவையாக அமையுமெனவும் ஆனால் எமது நாட்டிலுள்ள பாடசாலைகளில், நிலைமைகள் முற்றிலும் வேறுபட்டவையாக இருத்தலினால் அத்தகைய கருத்துக்களைச் செயற்படுத்துதல் முடியாத காரியமெனவும், அவ்வாறு செய்ய முற்படுவதால் நிலைமைகள் சீர்கெடலாமெனவும் அவர் அறிவுறுத்தினார்.

உறன்கெந்த மகாவித்தியாலயத்தின் அதிபர் திரு. சீதலரத்தின கலந்துரையாடலுக்கு தனது பங்களிப்பை நல்குகையில் பாடசாலைகளின் நிலைமைகள் பாடசாலைக்குப்பாடசாலை வேறுபடுகின்றனவெனவும் மேற்குறித்த குறைபாடுகளையும் பலவீனங்களையும் கொண்ட பாடசாலைக்கும் அவையற்ற பாடசாலைகளும் உள்ளன எனவும் பாடசாலைகள் அனைத்திலும் அத்தகைய செயல்நெறியைப் பிடிவாதமாக நிறைவேற்றினால் அது பாதகமான விளைவுகளைக் கொணரு மெனவும் எச்சரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாகப் பேசிய, புஞ்சிதுன்உறிந்த மகாவித்தியாலய அதிபர் திரு. இரத்தினபால தான் பல கடிதங்கள் எழுதியும் கல்வி அலுவலகத்திலிருந்து தனது பாடசாலைக்கு எவ்வித உதவியும் கிடைக்கவில்லையெனக் கூறினார். உரிய நேரத்தில் பாடசாலையைத் தொடக்கவும் மூடவும் ஒரு மணிக்கூடுதானும் வழங்கப்படவில்லையெனவும் பாடசாலைக்கு மணியொன்று இல்லையெனவும் பல ஆண்டுகளாக ஆண்டுக்குரிய பழுதுபார்த்தல் வேலைகள் எவையும் ஆங்கிகரிக்கப்படாததால் கட்டிடங்களும் வேலியும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன வெனவும் பாடசாலை பாழடைந்துள்ளதெனவும் இவற்றால் தானும் தனது பணியாளர்களும் ஊக்கலை இழந்துள்ளதாகவும் முறைப்பாடு கூறினார்.

குரகிங்குல வித்தியாலயத்தின் அதிபர் திருமதி. பாலமயற்றவக்க, அங்கிகரிக்கப்பட்ட பதவியின் வரிசையில் 5 ஆசிரியர்கள் குறைவாக இருப்பதாகவும் பாடசாலையில் ஆங்கிலமோ, விஞ்ஞானமோ கற்பிக்கப்படாததால் இப்பாடங்களைக் கற்பதற்கு மாணவர்கள் பிரத்தியேக படிப்புக்குப் போகவேண்டியுள்ளதாகவும் கூறினார். இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்வரை பாடசாலைகளில் திருப்திகரமான நிலைமைகளை மீள ஏற்படுத்துதல் சிரமமான பணியாக அமையுமென்பது அவர் கருத்துத் தெரிவித்தார்.

கன்மறுல்ல வித்தியாலயத்தின் அதிபர் திரு. கருணதாச தனது பாடசாலையில் ஆசிரியர்களுக்கான குடிமனைகள் இல்லையெனவும் தூர மாவட்டங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் குறித்த இப்பிரதேசததில் தமக்கு உறைவிட, தங்குமிடவசதிகள் இல்லாத காரணத்தால் அவ்வாசிரியர்கள் நேரத்திற்குப் பாடசாலைக்கு வரமுடிவதில்லையெனவும் குறைபட்டுக் கொண்டார்

எனவே கூட்டத்தின் தொனி முற்றிலும் வேறுபட்ட திசையிற் சென்றது. அதிபர்கள் ஒருவர் பின் ஒருவராக எழுந்து பாடசாலைகளிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் பௌதீக, மனித வளங்களின் குறைபாடுகளை நிரற்படுத்தத் தொடங்கி திணைக்களத்தினால் அக்குறைவுபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்வரை திருப்திகரமான பாடசாலை நிர்வாகம் சாத்தியமற்றதாக அமையுமென அறிவுறுத்தினர். .

திடீரெனப் பணிப்பாளர் எழுந்து கூட்டத்தை அமைதிகொள்ளச் செய்து அதிபர்கள் ஒவ்வொருவரும் தமது பாடசாலைகளில் தற்பொழுது நிலவும் குறைபாடுகளை எங்ஙனம் களையலாமெனவும் குறிப்பான முன்மொழிவுகளுடன், உடனடியாக, அறிக்கையொன்றைத் தயாரித்து அடுத்துவரும் வாரத்தின் இறுதிக்கு முன்னதாக அதை நேரில் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கூறிக் கூட்டத்தை ஒத்தி வைத்தார்.

1. இடமாற்ற அச்சுறுத்தலினின்று தப்பிக் கொள்வதற்கும் கல்விப் பணிப்பாளர் திரு. பரணவிதானேயினால் எடுத்துக் கொள்ளப்பட்ட செயல்நெறி பற்றி நீர் கொள்ளும் கருத்துக்கள் யாவை? அவரது பேச்சினில் வெளிவந்த அவரது கருத்துக்களையும் மனப்பாங்கைகளையும் நீர் ஏற்றுக் கொள்கிறீரா – உமது விடைக்கு நியாயங்கள் தருக.

   (25 புள்ளிகள்)

2. எமது நாட்டின் பாடசாலை நிர்வாகத்தில் சிங்கராஜ மகாவித்தியாலய அதிபர் திரு. சுதாசூரியரினால் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்கள் எவ்வளவிற்குப் பயனுள்ளவையாகவும், பிரயோகிக்கப்படத் தக்கவையாகவும் உள்ளன? உமது அனுபவத்தின் மூலம். விடையைத் தெளிவு படுத்துக (25 புள்ளிகள்)

3. தென் மத்திய மாகாணத்திலுள்ள ஒரு பாடசாலைக்கு அதிபராக நீர் நியமிக்கப்பட்டால் பாடசாலையின் இக்குறைபாடுகளை வெல்வதற்கு நீர் எந்நடவடிக்கைகளை மேற்கொள்வீர்? அவரது செய்கையின் கூட்டத்தில் அதிபர்கள் எடுத்துக்காட்டிய பௌதீக, மனித வளங்களில் பற்றாக்குறைகள் எந்த அளவிற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கட்டுப்பாடுகளாக அமையும்? (25 புள்ளிகள்)

4. மேற்குறிப்பிட்ட பாடசாலைகளிற் காணப்பட்ட பலவீனங்களைக் குறைப்பதற்கு அதிபர்களுக்கு உதவும் வகையில் கல்வி அலுவலகத்தினால் தயாரிக்கப்படத்தக்க பொருத்தமான கட்டமைப்பு வாய்ந்த திட்டமொன்றை ஆலோசனையைத் தருக

(25 புள்ளிகள்)

## விடைக்குறிப்புகள் - 1991 ஜூன்

1 தான் தப்பிக்கொள்வதற்காக, தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக விரைவான நடத்தை ஒன்றை மேற்கொண்டு, மாற்றமொன்றைக்காட்ட வேண்டும். அதனூடாகத் தனது இடமாற்றத்தைத், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் சுயநலத்துக்காக, அப்பிரதேச எல்லா அதிபர், ஆசிரியர்கள் மீதும் எதுவித கல்வி முகாமைத்துவ சீராக்கத்தை இதுவரை நடைமுறைப்படுத்தாமல் திடீர் என ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் என்ற செயல்நெறி தொடர்பாகக் கூட்டத்தில் கடும் தொனியில் பேசியமை பிழையான அவரது கல்வி முகாமைத்துவ அணுகுமுறையைக் காட்டுகின்றது. தன் நலனையே கருத்திற் கொண்டு பொதுவான, விசேட பிரச்சினைகளுடைய பரந்த தொகுதியான பாடசாலைகளின் நிலைபற்றி எவ்வித முன்னாய்வுகளோ, கணிப்புகளோ இல்லாமல் ஏனையவர்கள் கூறியதை வைத்துக் குற்றம் சுமத்துதல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்ற அவரது பேச்சு ஆரோக்கியமானதல்ல.

அவரது பேச்சினூடு வந்த கருத்துக்களையும், மனப்பாங்குகளையும் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. தான் சார்ந்த கருத்துக்களை மேலும் உறுதியாக்கி ஏனையவரின் ஆக்கபூர்வ கருத்துக்களுக்கு தடைவிதிக்கின்றார். குறிப்பாக திரு. சுதாசூரியவுடைய கருத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டுப்பாடசாலைகளில் செயற்படுத்த முடியாதவை. மேலும் நிலமைகள் சீர் கெட்டுவிடும் போன்ற கருத்துக்கள் மிக மோசமானவை. குறித்த பிரச்சினைகள் எப்பாடசாலைகளில் நிலவுகின்றன? எதன்பொருட்டு எந்நேரங்களில்? எவ்விடயங்களில்? எவ்வாறு பாடசாலையில் நிலவுகின்றன. என்பதை தகவல்கள் பெற்று பகுத்தாய்ந்து பிரச்சினைகள் குறித்த பாடசாலைகளில் இனம் கண்டு அணுகாமல் தன்னைப் பாதுகாத்தல் என்ற நோக்குடன் குற்றச்சாட்டுக்களையும் அதற்கெதிராகத் தான் கடும் நடவடிக்கை எடுப்பது எனக்கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

1. பிரச்சினைகளை சரியாக இனம் கண்டு அணுகுதல்.
2. மெய்யான கருத்துக்களை பகுப்பாய்வு செய்தல்.
3. கருத்துக்களை மதிப்பிடல்
4. பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஏனையவர்களுடன் இணைந்து அணுகுதல் என்ற வகையிலான கல்வி முகாமைத்துவ அணுகுமுறைகளைத் திரு. பரணவிதானே கொண்டிருக்காமை அவரது கருத்துக்களையும், மனப்பாங்குகளையும் ஏற்க முடியாதுள்ளது. மனிதவளம் ஆசிரியர் வளம் தொடர்பான புறக்கட்டுப்பாடுகளாக அமையும்.

2 அதிபர் திரு. சுதாசூரிய அடிப்படையில் ஆசிரியர்கள் பாடசாலையின் அபிவிருத்தி கல்வி தொடர்பான எல்லா வேலைகளிலும் ஈடுபட விருப்பம் கொண்டவர்கள் அவர்களுக்கு ஊக்கலை அளிக்க வேண்டும். மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர வேண்டும். முறைப்பாடுகளை ஆசிரியர்களுடன் கலந்துரையாடி அவர்களது ஆலோசனை பெற்று தீர்மானமெடுத்தலில் ஆசிரியர்களைப் பங்குகொள்ளச் செய்தல் பயன்தரும் நடவடிக்கை என நவீன முகாமைத்துவ அபிவிருத்தி செயன் முறை தொடர்பான அவரது கருத்துக்கள் தற்போதைய காலத்திற்கு மிகவும் பொருத்தமானது. இவ்வாறான பங்கு பற்றல் முகாமைத்துவ அணுகுமுறையினூடாக முறைப்பாடுகளையும், முரண்பாடுகளையும், பிரச்சினைகளையும் இலகுவாகத் தீர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். (பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகளை உதாரண அனுபவமமாகக் கூறி அவற்றைத் தீர்க்க அதிகாரம் சார்ந்த செயல்முறையை விட பங்குபற்றல் அணுகுமுறையினூடு வெற்றிகாணும், நீண்டகாலப் பயன்காணும் நிலையை உங்கள் விடையினூடு மேலும் விளக்கலாம். நூலின் முன்பகுதியில் பிரச்சினை தீர்த்தல் தொடர்பான மற்றும் பங்குபற்றல், ஜனநாயகமுகாமை தொடர்பான கருத்துக்களைக் கற்க.)

3 தென் மாகாணத்திலுள்ள ஒரு பாடசாலைக்கு அதிபரினால் மேற்கூறிய விடய ஆய்வினூடாக முதலில்

1. பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் தரப்பினர்களது தேவைகளையும், கரிசனைகளையும், பிரச்சினை, அச்சங்களையும் இனம் கண்டு பிரச்சினைகளை வரையறைப்படுத்தல்.
2. மேலும் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி பிரச்சினை தீர்வுசார்ந்த பல்வேறு மாற்று நடவடிக்கைகளை பாடசாலை ஆசிரியர்கள், ஏனையவர்களுடன் கலந்துரையாடி உருவாக்கல்.
3. பல்வேறு மாற்று நடவடிக்கைகள், தீர்வுகளை முன்வைத்து சரியான தீர்வுகளை இனம்காணல், அவற்றைச் செழுமைப்படுத்தல், அவற்றை அமுலாக்கப் பல்வேறு படிமுறைகளை உருவாக்கல்.
4. தீர்வுகளை எல்லா உறுப்பினர்களின் ஆதரவுகளுடன் அமுலாக்கல். தீர்வு அமுலாக்குகையில் வினைத்திறன்களை இடையிடையே மதிப்பீடு செய்தல்.

என்ற வகையில் பாடசாலையின் ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்க்க நடவடிக்கை எடுப்போன் (சில முக்கிய பிரச்சினைகளை உதாரணம் காட்டி விளக்கவும்) மேலும் கூட்டத்தில் அதிபர்கள் எடுத்துக்காட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதீக – மனிதவளப் பிரச்சினைகளின் பெரும்பாலானவற்றை அவர்களே தீர்க்க முடியும். இவற்றின் புறக் கட்டுப்பாடுகளின் செல்வாக்கை அதிபர்களே குறைக்கலாம் உதாரணமாக மணி ஒன்றைக் கூட திணைக்களம் தர வேண்டும் என எதிர்பார்க்கும் அதிபர்களின் நிலை மோசமானது.

4 பொதுவாக பாடசாலைகளில் காணப்படும் பிரச்சினைகளைக் கண்டறிதல், பிரச்சினைகளுக்கான காரணங்களை ஆராய்தல், பல்வேறு மாற்று வழிகளை உருவாக்கல், சிறந்த மாற்று வழியைத் தெரிவு செய்தல், தெரிவு செய்யப்பட்டமாற்றுவழிகளை அமுல்படுத்தல் என்ற வகையில் பலவீனங்களைக் குறைப்பதற்கான கட்டமைப்புத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கையில்

1. நோக்கங்களை வரையறுத்தல்.
2. நோக்கத்தினை அடையும் பொருட்டு வளங்களை ஒதுக்கீடு செய்தல்.
3. செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு வளங்களை ஒதுக்கீடு செய்தல்.
4. செயற்பாடுகளை அமுல்படுத்தல் ஆகிய செயன் முறைகளில் பொதுக்கட்டமைப்பு ஒன்றைத்தயாரித்து ஒவ்வொரு பாடசாலைகளுக்குமான விசேடமான தம் பிரச்சினைகளைத் தீர்க்கும் செயற்திடடத்தை கல்வி அலுவலகம் ஏற்படுத்த வேண்டும்.

(விடையைத் தொடர்ந்து எழுதும் போது பாடசாலைப் பிரச்சினைகள் அனைத்தையும் எழுதி அவற்றைத் தீர்ப்பதற்கான நிகழ்ச்சி திட்ட செயற்திட்ட அமைப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரச்சனைகள் | பிரச்சனைகளை தீர்ப்பதற்கான செயற்பாட்டு கூறுகள் | பொறுப்பு | உள்ளீடு | செயற்பாடு | வெளியீடு | காலம் | செலவு | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

திணைக்களத்திலுள்ள பாடசாலை ஒவ்வொன்றுக்கும் அதிபர், ஆசிரியர்களின் ஆலோசனைகள், உதவிகளுடன் திணைக்களம் இவ்வாறாகத் திட்டத்தைத் தயாரிக்கலாம். உதாரணத்திற்கு குறித்த பாடசாலைப் பிரச்சினை ஒன்றை உதாரணமாக எடுத்து விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி நிருவாகச் சேவையின் 111 வகுப்பிற்கு (பொதுப் பதவி அணி) ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 1994 (1995 மார்ச்)

### கல்வி நிர்வாகம் தொடர்பான விடய வகைக் கற்கை

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

ஒரு கிராமப் பிரதேசத்தில் அமைந்திருந்த கம்புரவெல்ல மகா வித்தியாலயத்தின் அதிபரான திரு. பண்டிதசேகர கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றவுடன் திடீரென இடமாற்றஞ் செய்யப்பட்டார். இதனால் பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் பெருந்துயரமும் வேதனையுமடைந்தார்கள் . கிராமத்தின் நடவடிக்கைகள் அனைத்திலும் தலைமைத்துவத்தை ஏற்கும் கிராமத் தலைவரான இரத்நாயக்கராலகாமி என்பவர் இது தொடர்பாகக் கூட்டமொன்றைக் கூட்டுவித்தார். கிராமத்தின் பிரதம மதகுருவின் ஆதரவின் கீழ் இக் கூட்டம் நடாத்தப்பட்டது. பாடசாலை அதிபரைத் தவிர கிராமத்திலிருந்து முக்கியமான நபர்கள் அனைவரும் இக்கூட்டத்திறகுச் சமுகமளித்திருந்தனர்.

முதலாவதாக உரையாற்றிய இரத்நாயக்க ராலகாமி என்பவர் கூட்டம் கூட்டுவிக்கப்பட்டமைக்கான காரணத்தை விளக்கிக் கூறினார். அதிபரான திரு. பண்டிதசேகர தன்னுடைய சொந்த நலனுக்காகவும் முன்னேற்றத்துக காகவும் செல்வதனால் அவரைத் தடுப்பது நியாயமல்ல என்பதை அவர் எடுத்துக் கூறினார். எனவே நன்றியுணர்வுள்ள மக்கள் என்ற முறையில் அவருடைய அர்ப்பணவுணர்வுடைய சேவையைக் கௌரவிக்குமுகமாக தாம் அதிசிறப்பான பிரியாவிடை வைபவமொன்றினை ஒழுங்கு செய்யவேண்டும் என்று அவர் கூறினார்.

அடுத்த பேச்சாளர் கிராம வைத்தியரான சூரியாராச்சி வெத ராலகாமி என்பவராவார். அவர் இரத்நாயக்க ராலகாமியின் பிரேரணையை அங்கீகரித்ததுடன் பாடசாலையின் அண்மைக்கால வரலாற்றினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகூர்ந்தார். திரு. பண்டிதசேகர அதிபராகப் பதவியேற்ற சமயத்தில் பாடசாலை மிகவும் சீர்குலைந்த நிலையிலிருந்தமையால் முப்பது ஆண்டுகளாக அப்பாடசாலையில் சேவையாற்றிய முன்னாள் அதிபரான திரு. ஆரியரத்தினவுக்கு பிரியாவிடை வைபவமொன்றைக்கூட ஒழுங்குசெய்வது சாத்தியமாக இருக்கவில்லை என்றும் திரு. ஆரியரத்தினவுக்குப் பிரியாவிடை வைபவம் ஒன்றினை ஒழுங்குசெய்தமையேயாகும் என்றும் அவர் கூறினார்.

மேலும் திரு. பண்டிதசேகரவுக்கு முன்னர் பதவி வகித்த அதிபரான திரு. ஆரியரத்தின தேசிய உடை அணிந்தாரென்றும் அவர் ஒரு பட்டதாரி அல்லர் என்றும் திரு. சூரியாராச்சி ராலகாமி தொடர்ந்து கூறினார். எனினும் தான் பதவியேற்றபோது சிறிதாக இருந்த பாடசாலையை திரு. ஆரியரத்தின அபிவிருத்தி செய்து அதனை மகா வித்தியாலய அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட பின்னர் துரதிர்ஷ்டவசமாக, சிறிது காலத்தினுள் அது துரிதமாகச் சீர்கெடலாயிற்று. அதனால் அவர் ஆற்றிய அரிய சேவையை மக்கள் மறந்துவிட்டார்கள். பாடசாலையில் நிலவிய ஒற்றுமை குலைந்தது. மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஆகியோரிடையே மனஸ்தாபம் ஏற்பட்டது. பாடசாலை சமூகத்தின் பல்வேறுபிரிவுகிடையே அவநம்பிக்கையும் அபிப்பிராய பேதமும் நிலவியது. இதன் காணமாகப் பாடசாலை சீர்குலைந்து வீழ்ச்சியுற்றது. புதிய அதிபரான திரு. பண்டிதசேகர ஆசிரியர்களை ஒன்றுபடுத்தியமையையும் வீழ்ச்சியுற்றிருந்த பாடசாலை ஒழுக்காற்றினை மீண்டும் நிலைபெறச் செய்தமையையும் விரக்தி காரணமாக பாடசாலை நடவடிக்கைகளில் பங்குபற்றாமலிருந்த அப்பிரதேச மக்களை மீண்டும் பாடசாலை நடவடிக்கைகளிற் பங்குபற்றச் செய்தமையையும் திரு. சூரியராச்சி வெத ராலகாமி தெளிவாக விவரித்தார். இறுதியாக திரு. பண்டிதசேகர ஆற்றிய விலை மதிக்கமுடியாத சேவைக்காக, அவரைக் கௌரவிக்குமுகமாக அவருக்கு அதிசிறந்த பிரியாவிடை வைபவமொன்றினைத் தாம் ஒழுங்குசெய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக, தற்போது அப்பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றும் திரு. ஜெயசேகர உரையாற்றினார். திரு. பண்டிதசேகரவின் முதலாவது ஆசிரியர் கூட்டத்தை பற்றிக் குறிப்பிடுகையில், ஆசிரியர்களிடையே ஒற்றுமை இல்லாமையினால் பாடசாலை அபிவிருத்தியடைவது சாத்தியமல்ல என்றும் ஆசிரியர் குழுவிலே பட்டதாரிகள், பட்டதாரிகள் அல்லாதவர், ஆங்கில ஆசிரியர்கள், ஆங்கில ஆசிரியர்கள் அல்லாதவர், தேசிய உடை அணிந்தவர்கள், கால்சட்டை அணிந்தவர்கள் என்றவாறு இன்னோரன்ன பிரிவுகளும் குழுக்களும் இருப்பதைத் தான் அறிந்திருந்தார் என்றும் திரு. பண்டிதசேகர மீண்டும் மீண்டும் கூறியதை திரு. ஜயசேகர நினைவுகூர்ந்தார். ஆசிரியர் மத்தியில் நிலவிய இப்பிரிவுகளுக்கு அமைய மாணவர்கள், பெற்றோர்கள் பொதுமக்கள் ஆகியோரும் குழுக்களாகப் பிரிந்தனர். இக்குழுக்கள் ஒன்றையொன்று வெறுத்தன. அவநம்பிக்கையுடன் செயற்பட்டன. ஒன்றுடனொன்று போட்டியிட்ட இக்குழுக்களின் தொழிற்பாடுகள் பாடசாலையின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தமையால், ஆசிரியர்களிடையே ஒற்றுமை ஏற்பட்டால் மட்டுமே பாடசாலையை மீண்டும் அபிவிருத்திசெய்யலாம் என்று திரு பண்டிதசேகர திரும்பத் திரும்ப வலியுறுத்தினார். திரு. பண்டிதசேகர துணிச்சலுடன் பகர்ந்த கூற்றையும் திரு. ஜெயசேகர நினைவுகூர்ந்தார். "நான் முன்னேற்றத்துக்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குகின்றேன். ஒரு மாதக் காலத்தினுள் முன்னேற்றமெதுவும் காணப்படாவிட்டால் நான் உங்களிடமிருந்து பிரியாவிடை பெறுவேன் என்பதன் மூலம் ஒரு மாத காலத்தினுள் ஆசிரியர்களிடத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்திய விதத்தினையும் அதற்குப் பின்னர் அவர் பாடசாலையினை எவ்வாறு உயர்நிலைக்குக் கொண்டுவந்தார் என்பதையும் திரு. ஜெயசேகர தெளிவுபடுத்தினார். அத்துடன் நடுநிலைமையையும் நியாயத்தையும் அடிப்படையாகக் கொண்ட அவரது உறுதிப்பாடும் அன்புடமை அனைவரது விசுவாசத்தையும் நன்மதிப்பையும் பெறுதற்கு அவருக்குப் பெருமளவில் உதவியது என்றும் திரு. ஜெயசேகர விளங்கப்படுத்தினார். ஆகவே திரு. பண்டிதசேகரவுக்குத் தங்களது நன்றியுணர்வை வெளிப்படுத்துவதற்கான வைபவம் மிகச் சிறப்பாக ஒழுங்குசெய்யப்படவேண்டும் என்று அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார்.

அப்பாடசாலையின் மற்றுமோர் உதவி ஆசிரியரான திரு. இரத்தினபால அடுத்த பேச்சாளர் ஆவார். திரு. பண்டிதசேகர அதிபராக இருந்த காலத்தில் தாமதமாகப் பாடசாலைக்கு வந்த ஆசிரியர்களைத் தண்டிப்பதற்காக அவர் சிவப்புக் கோட்டினை ஒருபோதும் ஆசிரியர் வரவுப் பதிவேட்டில் கீறவில்லை என்றும் திரு. பண்டிதசேகரவுக்கு முன்னமிருந்த அதிபரான ஆரியரத்தின சிவப்பு கோட்டினை உரிய நேரதிற் கீறிட்ட காலத்தில் நிகழ்ந்தது போன்று ஆசிரியர்கள் தற்போது தாமதமாகிப் பாடசாலைக்கு வருவதில்லை என்றும் திரு. இரத்தினபால கூறினார். உண்மையிலே திரு. பண்டிதசேகர அதிபராகப் பதவியேற்ற பின்னர் பஸ்வண்டியில் வரவேண்டியிருந்தமையால் இருந்திருந்து தாமதமாகப் பாடசாலைக்கு வந்த ஆசிரியர்கள், பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வரவேண்டுமென்பதற்காகக் கூடின பணம் செலவழித்து தனியார் வாகனங்களை ஒழுங்கு செய்வதற்கும் ஊக்குவிக்கப்பட்டனர். பாடசாலையின் ஏறத்தாள எல்லா நடவடிக்கைகளையும் "சுய மதிப்பீடு" எவ்வாறு ஊடுருவி இருந்ததென்பதையும் ஒவ்வொருவரும் தனது கடமைப்பங்கினைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு எவ்வாறு முயற்சி செய்தார் என்பதையும் அவர் எடுத்துக்காட்டினார். திரு. பண்டிதசேகர அதிபராக வருவதற்கு முன்னர், பாடசாலைக்குத் தாமதமாக வந்த ஆசிரியர்கள் தம்மை ஹீரோக்களாகத் (தலைவர்களாகக்) கருதிக்கொண்டார்களென்றும் தற்போது தவிர்க்க முடியாத காரணங்களுக்காகத் தாமதமாகி பாடசாலைக்கு வந்த ஆசிரியர்கள் மாணாக்கரிடம் மன்னிப்புக் கோருபவராக இருந்தார்கள் என்றும் திரு. இரத்தினபால கூறினார். ஆசிரியர் மனப்பாங்கில் ஏற்பட்ட இம்மாற்றம் திரு. பண்டிதசேகரவின் சாமர்த்தியத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

அடுத்ததாக, பல்கலைக்கழக மாணவனும் பாடசாலையின் பழைய மாணவனுமான திரு. சிறிபால உரை நிகழ்த்தினார். திரு. பண்டிதசேகர இல்லாவிடில் தான் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றிருக்கவேமாட்டாரென்றும் உள நோயாளர் இல்லம் போன்றிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையை, குறுகிய காலத்தில், கற்றல் தொழிற்பாட்டுக்கு உகந்த ஓர் இடமாக மாற்றியதுமன்றி உயர்தர வகுப்புகளில் புவியியல் பாடத்தைச் சிறப்பாகக் கற்பித்து தனது கற்பித்தல் திறனை வெளிப்படுத்தி ஆசிரியர்களின் நன்மதிப்பையும் திரு. பண்டிதசேகர பெற்றார் என்றும் திரு. சிறிபால கூறினார். திரு. பண்டிதசேகர நிருவாகப் பணியில் ஈடுபட்டிருந்த போதிலும் உயர் தர வகுப்பிற்கு உரிய நேரத்திற்குச் சென்று பாடங் கற்பித்து, தான் முன்மாதிரியாக இருந்துகொண்டு நேரந் தவறாமையின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் உணர்த்தினார். திரு. பண்டிதசேகர தனக்கு முன்னர் பதவி வகித்த அதிபரைப் போலன்றி அதிபர் குடிமனையில் குடும்பத்துடன் வசித்ததால் முழு நேரத்தையும் பாடசாலைக்காகவே செலவிட்டார். இப்பாடசாலையில் நல்ல விளையாட்டு மைதானம் இருக்கவில்லை. கைப்பந்து, வலைப்பந்து ஆகியன மட்டுமே விளையாடப்பட்டன. அவற்றிற்கு ஏறத்தாழ எவ்வித ஊக்கமோ உற்சாகமோ அளிக்கப்படவில்லை. உதைபந்து, கிறிக்கற், பாட்மின்றன், ரேபிள் ரென்னிஸ் போன்ற விளையாட்டுகள் உட்பட சாரணர் இயக்கம், பயிலுனர் பட்டாளம் ஆகியனவற்றையும் அவர் ஆரம்பித்தார். இதற்காகப் பாடசாலை முடிவடைந்த பின்னர் மாணாக்கருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. அதற்காக மாணாக்கர் பாடசாலையில் நிறுத்திவைக்கப்பட்டனர். இணைபாடவிதான நடவடிக்கைகள் மாணாக்கரது நாளாந்த பழக்கதுறையான நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக்கப்பட்டது. ஒரு விளையாட்டு மைதானத்தை அமைப்பது பகிரதப் பிரயத்தனமாகும். ஆனால் ஆசிரியர், மாணாக்கர், பெற்றோர் ஆகியோரின் துணையுடன் அவர் "சிரமதானம்" மூலம் சில மாதங்களில், விளையாட்டு மைதானத்தை அமைத்துவிட்டார். மேலும் சங்கீதம், நடனம், சித்திரம் ஆகியன உள்ளடங்கிய அழகியற் கலைகளுக்கு முக்கிய இடமளித்தார். இத்துறையில் மாணாக்கர் காட்டிய ஊக்கமும் உற்சாகமும் காரணமாக பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் நமது பாடசாலை பல பரிசில்களைப் பெற்றதுடன் பல வெற்றிகளையும் ஈட்டியது. இதனால் மாவட்டமெங்கும் பாடசாலையின் புகழ் பரவியது. பாடசாலையில் மாற்றங்களைப் புகுத்துவதற்கும் அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்வதற்கும் திரு. பண்டிதசேகர பாடசாலையின் பௌதீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களையும் மனித வளத்தையுமன்றி வேறு எதனையும் பயன்படுத்தவில்லை. இந்த உண்மையை திரு. சிறிபால அழுத்தமாகக் கூறினார்.

கொஞ்ச காலத்திற்கு முன்னர் இப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி, தற்போது அப்பிரதேசத்தில் மற்றொரு பாடசாலையில் அதிபராகக் கடமைபுரியும் திரு. இரத்தினதாச உரைநிகழ்த்துகையில் திரு. பண்டிதசேகராவுக்கு முன்னரிருந்த அதிபரான திரு. ஆியரத்தின அப்பாடசாலையில் முப்பது ஆண்டுகளுக்குங் கூடுதலாகப் பணிபுரிந்தார் என்றும் அப்போது சிறு அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு அவர் ஆற்றிய சேவை மிக்க பெறுமதி வாய்ந்ததாகவும் மெச்சத்தக்கதாகவும் இருந்தபோதிலும் அது பாராட்டுக்குப் பாத்திரமாகவில்லை என்றும் கூறினார் பாடசாலையானது மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்ட பின்னர் அங்கு கற்பிக்க வந்த பட்டதாரிகள், ஆசிரியர்கள் மத்தியில் குழுக்களையும் பிரிவுகளையும் ஏற்படுத்தி அதிபர் உட்பட பாடசாலையையும் சமூகத்தையும் நாசமாக்கிவிட்டார்கள் தாம் பட்டம் பெற்றிருந்தமையால் தலைவீக்கங்கொண்டிருந்த பட்டதாரி ஆசிரியர்கள் தங்களது அதிபரான திரு. ஆரியரத்தின பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியராக இருந்தமையால் அவரை மதிக்கவில்லை. உரியவாறு நடத்தவுமில்லை. அதிபரின் தலைமைத்துவத்தை அவர்கள் ஏற்கவில்லை. இதனால் பாடசாலையில் நிலவிய ஐக்கியம் கலைந்தது இதனைத் தொடர்ந்து உருவான ஒற்றுமையில்லாத நிலைமை பேரழிவுக்கு வழிவகுத்தது ஆகவே பட்டதாரிகளினால் வழிநடத்தப்பட்ட கால்சட்டை அணிந்த ஆசிரியர்களே பாடசாலையின் வீழ்ச்சிக்குக் காரணமாவர். அதிபரான திரு. ஆரியரத்தின அல்லர். எனவே முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றிய திரு. ஆரியரத்தினவுக்கு ஒழுங்குசெய்யப்பட்ட பிரியாவிடை வைபவத்திலும் பார்க்கச் சிறப்பான வைபவமொன்று இப்போது ஒழுங்கு செய்யப்படுவது குறித்த திரு. இரத்தினதாச தனது பூரண அதிருப்தியை தெரிவித்தார்.

இச்சமயத்தில் கூட்டத்துக்கு வருகை தந்த அப்பாடசாலையின் ஆசிரியர்களுள் ஒருவரான வணக்கத்துக்குரிய தம்மாராம தேரோ கூட்டத்திற்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த பிரதம் மதகுருவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிபெற்ற உரையாற்றினார். நாளை மறுநாள் மகரகம பதவிநிலை அலுவலர் கல்லூரியில் ஆரம்பிக்கும் இரண்டு வாரக் காலக் கட்டாயப் பயிற்சி நெறியொன்றினைப் பின்பற்றுமாறு திரு. பண்டிதசேகரவுக்குக் கடிதமொன்று சற்று முன்னர் கிடைத்ததென்றும் அதனால் அடுத்த நாள் மூட்டை முடிச்சுகளுடன் தான் கட்டாயமாகப் போகவேண்டியிருந்தமையால் தனது சார்பில் ஒழுங்கு செய்யப்பட்ட எந்தவொரு வைபவத்திலும் தன்னால் கலந்துகொள்ள முடியாது என்றும் பரிசில்கள் எதனையும் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் திரு. பண்டிதசேகர கூட்டத்திற் அறிவிக்க சொன்னதாக வணக்கத்துக்குரிய தம்மாராம தேரோ கூறினார். மேலும் தான் கம்புரவெல்லையில் இருந்த காலத்தில் தனக்கு ஆதரவளித்து ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்குமாறு திரு. பண்டிதசேகர கூட்டத்திற் கூறச் சொன்னதாகவும் வணக்கத்துக்குரிய தம்மாராம தேரோ கூறினார்.

1. திரு. பண்டிதசேகர அதிபராகக் கடமையாற்றிய போது அவர் வெளிப்படுத்திய முக்கியமான தலைமைத்துவப் பண்புகள் மூன்றினைத் தருக. நீர் குறிப்பிடும் ஒவ்வொரு பண்பினைப் பற்றியும் நீர் அவதானித்தவற்றைத் தருக. (25 புள்ளிகள்)
2. திரு. பண்டிதசேகர முன்னர் பதவி வகித்த திரு. ஆரியரத்தினவின் முகாமைத்துவம் தோல்வியடைவதற்கு ஏதவாயமைந்த முக்கியமான மூன்று காரணங்கள் தருக. சம்பந்தப்பட்ட துறைகளில் திரு. பணிடிதசேகரவின் முகாமைத்துவத்தின் வலுவான அமிசங்களுடன் அவற்றை ஒப்பிட்டு வேறுபாடு காட்டுக.

   (25 புள்ளிகள்)
3. பாடசாலைகளிலே ஆசிரியர்கள், மாணாக்கர் மத்தியில் "சுய மதிப்பீடு" எனும் எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்துவதனால் ஏற்படும் செயல்முறைசார்ந்த விளைவுகளைப் பரிசீலனை செய்க.

   (25 புள்ளிகள்)
4. ஆளணி முகாமைத்துவம் தொடர்பில், "போதனை செய்திலும் அனுஷ்ஷத்துக் காட்டுதல் நன்று" எனும் கோட்பாடு மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனுறுதிவாய்ந்ததாகும். மேலே தரப்பட்டுள்ள விடய ஆய்வினூடாக (விடய வகைக் கற்கையினூடாக) இக்கூற்றினது செல்லுபடியாந்தன்மையைப் பரிசீலனை செய்க.

(25 புள்ளிகள்)

விடைகள் – *1994* **(1995 மார்ச்)**

1

1. பதவியேற்றதும் பாடசாலையின் வீழ்ச்சி நிலை – பிரச்சினைகளைச் சரியாக இனங்கண்டமை – ஆசிரியர்களிடையேயான ஒற்றுமை அதை நீக்க வலியுறுத்தியமை.
2. துணிச்சலுடன் தலைமைத்துவம் – ஒரு மாதத்தில் ஆசிரியர்களிடம் ஐக்கியத்தை ஏற்படுத்தியமை.
3. நடுநிலமை – நியாயத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட உறுதிப்பாடு – அன்புடமை – புரிந்துணர்வுடன் செயலாற்றுகின்றமை.

(இவை ஒவ்வொரு பண்புகளும் வெளிவந்த சம்பவங்களையும் அவற்றினூடு சிறந்த கல்வி முகாமைத்துவ செயற்பாட்டு விளைவுகளையும் சம்பவங்களுடன் இணைத்து விளக்குக.)

2 திரு. ஆரியரத்தினாவின் முகாமைத்துவ தோல்விக்கான காரணங்கள்:

1. பாடசாலையின் ஒற்றுமை குறைந்தமை – வீழ்ச்சியடைந்தமை.
2. பாடசாலை ஆசிரியர் – மாணவர் – பெற்றோர் – அயற்சமூகத்தவரிடையே மனஸ்தாபம் ஏற்பட்டமை. அவநம்பிக்கை அபிப்பிராய பேதம்
3. புரிந்துணர்வின்மை – ஆசிரியர் பிரச்சினைகளை உணராமல் சிவப்புக் கோடிடுதல், முரண்பாடு வலுவடைந்தமை.

(தொடர்ந்து... முகாமைத்துவம், அணுகுமுறைகள், திட்டமிடல், ஒற்றுமையுடன் கூட்டாக முடிவெடுத்தல் என்ற அம்சங்களினூடு பண்டித சேகரவின் வலுவான முகாமைத்துவ அம்சங்களுடன் ஆரியரத்தினாவின் தோல்வியான விடயங்களை ஒப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 மனித வள விருத்தியுடனான கல்வி முகாமைத்துவத்திலே ஒவ்வொருவரும் தமது கடமைகளுக்கு பொறுப்புக் கூறக்கூடியவர்களாகவும், நிறுவனத்தின் விருத்திக்குத் தம்மை அர்ப்பணிப்பவர்களாகவும் வினைத்திறனுடன் இயங்கப் பல்வேறு ஊக்கப்படுத்தல் செய்முறைகள் (Motivation Process) பின்பற்றப்படுகின்றன. இவ்வூக்களினூடு தமது கடமைகளைச் சிறப்பாகச் செய்வதுடன் தமது நிறுவனம் சார்ந்த அபிவிருத்தியிலும் அக்கறையுடன் இருப்பர். பாடசாலை என்ற நிறுவனத்தில் இவ்வணுகுமுறையூடு மனச்சாட்சியின் படி ஆசிரியர்கள் தாம் செய்த கடமைகளை அவ்வாறே மாணவர் தம் கற்றல் கடமைகள் பற்றி "சுய மதிப்பீடு" ஒன்றைச் செய்தல். சுயமதிப்பீட்டு எண்ணக்கருவை பாடசாலையின் அனைத்துப் பணியாளர்களிடையேயும் நடைமுறைப்படுத்தும் போது

1. தமது பலவீனங்களையும், பிழைகளையும் தாமே உணர்ந்து திருந்த சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. உதாரணமாக குறித்த விடய ஆய்வில் சிவப்புக் கோடடித்தல் அதனால் ஆசிரியர்களிடையே ஏற்பட்ட விளைவுகள் மற்றைய அதிபரின் வெற்றிகர செயற்பாடுகள், பிந்திவந்ததால் மாணவர்களிடம் மன்னிப்புக் கோறும் மனப்பாங்கு இது சுயமதிப்பீடு தொடர்பான வெற்றியின் அம்சங்கள்
2. தமது வினைத்திறனை மேலும் அதிகரித்து தானும், நிறுவனமும் வளர முயற்சித்தல் தானும் நிறுவனத்தினையும் தேவை (need) உந்தல் (drive) செயற்பாடுகள் (active) என்பவற்றை மேலும் வினைத்திறனாக்குதல்.
3. தனது தொழிலிலும் கடமையிலும் திருப்தி – மகிழ்ச்சி அதனூடு பாடசாலையில் அதாவது தொழில் செய்யுமிடத்தில் சிறப்பாகச் சேவையாற்றல். (இவற்றை மேலதீக உதாரணங்களுடன் விரிவாக விளக்குக.)

4 ஆளணி முகாமைத்துவத்தில் போதனை செய்வதிலும் அனுஷ்டித்துக் காட்டுதல் என்ற கோட்பாடு சக்தி வாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அதிபர் பண்டிதசேகர நிர்வாகப்பணியில் ஈடுபட்டிருந்த போதும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு உரிய நேரம் சென்று பாடம் கற்பித்தமை.
2. நல்ல விளையாட்டுமைதானம், புதிய விளையாட்டுக்கள், அழகிய கலைகள் ஆகிய புதிய விடயங்களை விரைவாகப் பாடசாலையில் அமுலாக்கியமை.
3. இறுதியாக அப்பாடசாலை ஆசிரியரூடாக சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்ப..... தனது சார்பில் ஒழுங்குபடுத்தப்பட்ட எந்த ஒரு வைபவத்திலும் பங்கு கொள்ள முடியாது. ... பரிசில்கள் எதையும் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது... ஆகிய விடய சம்பவங்களையும் ஏனைய சம்பவங்களையும் உதாரணங்களாகக் காட்டி போதனை செய்வதில் அனுஷ்டித்துக் காட்டுதல் ஆளணி முகாமையின் சிறப்பை உறுதிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி நிருவாகம் தொடர்பான விடயவகைக் கற்கை -2000

இரண்டு மணித்தியாளம்

## Case Study Relating to Educational Administration

*Two hours*

கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை 111

**கீழே தரப்பட்டுள்ள தகவல்களை வாசித்து, கேட்கப்பட்ட வினாக்கள் எல்லாவற்றுக்கும் விடை தருக.**

திரு. இந்திரன் களூர் பிரதேசத்தில் இருக்கும் நவோதய மகா வித்தியாலயத்தில் ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் சேவையாற்றி, அப்பாடசாலையை அப்பிரதேசத்தின் பேர்பெற்ற மகா வித்தியாலயமாக மேம்படுத்திய அதிபர் ஆவார். பாடசாலையில் உயர்தர வகுப்புகளை ஆரம்பித்த இவர் முதற் தடவையிலேயே பல்கலைக்கழகத்திற்கு மாணவர் இருவரை அனுப்புவதிலும் வெற்றி ஈட்டினார். விளையாட்டு, நாடக, பேச்சுப் போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்ற இப்பாடசாலை, வலயக் கல்வி அதிகாரிகளின் புகழுக்கும் உரித்தாகியது. முதற்றடவையாக மாகாண முதலமைச்சரினதும் மாகாணக் கல்விப் பணிப்பாளரினதும் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவானது கொழும்பில் உள்ள பிரபலமான பாடசாலைகளில் நடைபெறும் விழாவைப் போல நடைபெற்றது.

ஆசிரியர் குழுவில் உள்ள அனைவரும் அதிபருக்கு மரியாதை அளித்தனர். அதிபர் தினமும் அவர்களுடைய நலன் பற்றி விசாரித்து அறிந்தார். வெளிப் பிரதேசங்களிலிருந்து வரும் ஆசிரியர்களுக்கு வதிவிட வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் அவர்க்ள நலனுக்குத் தேவையான செயல்களைச் செய்வதிலும் அவர் அதிக அக்கறை காட்டினார்.

அதிபரின் மனைவியாகிய திருமதி கீதா அப்பாடசாலையில் மனையியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியை ஆவார். பாடசாலை அதிபரின் வீட்டுக்கு வரும் ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் தேநீரையேனும் அளித்து உபசரிப்பதற்கு அவர் தவறியதில்லை. பாடசாலைக்கு நிதமும் தாமதமாக வருகின்றமையால் அதிபரால் எச்சரிக்கபட்பட்ட திரு. குமரன், திரு. சுந்தரம் என்ற இரு ஆசிரியர்களைத் தவிர ஏனைய ஆசிரியர் அனைவரும் அதிபரைப் போற்றி புகழ்ந்தனர்.

பாடசாலை பணிகளில் அதிபருக்கு உதவிய இளம் ஆசிரியர்கள் எண்மர் அப்பாடசாலையில் பணியாற்றினர். மாலைவேளைகளில் மேலதிக வகுப்புகளை நடத்தல், விளையாட்டுப் போட்டிகள், ஏனைய இணைப்பாட விதானச் செயற்பாடுகள் ஆகியவற்றை நடத்தல் போன்ற பணிகளை இந்த ஆசிரியர்கள் தலைமை தாங்கி நடத்தினர். ஆசிரியர் குழுவின் ஏனைய ஆசிரியர்களும் இவர்களுக்கு ஒத்தழைப்பு வழங்கினர்.

திரு. இந்திரன் ஒவ்வொரு மாதமும் ஆசிரியர் கூட்டங்களை நடாத்திய போதிலும் அவை தொடர்பான அறிக்கைகளைப் பேணவில்லை. எனினும் முக்கியமான விடயங்களைப் பொறுத்தவரை அவர் காலைக் கூட்டங்களுக்குப் பின்னர் ஆசிரியர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். அவசியம் ஏற்பட்டபோது அவர் ஆசிரியர் குழுக் கூட்டங்களை நடத்தி விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினார். முறைமையான நியமனம் பெற்ற பிரதி அதிபரோ, உதவி அதிபரோ அப்பாடசாலையில் இல்லாத போதிலும் அதிபர் இல்லாத வேளைகளில் இளம் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரான திரு. மதியழகன் பதில் கடமையாற்றினார். எனினும் அதிபர் தம்முடன் நெருங்கிப் பணியாற்றிய சில இளம் ஆசிரியர்கள் ஊடாக வெவ்வேறு பணிகளை மேற்கொண்டார்.

பாடசாலை மிக விரைவாக வளர்ச்சியடைந்தமையால் மாணவர்களும் அதிபருக்குச் சிறந்த மரியாதையையும் கௌரவத்தையும் அளித்தனர். மாணவர் தலைவர்களும் தலைவிகளும் பாடசாலையை ஒழுங்கமைக்கும் பணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த பயிற்சி பெற்றிருந்தனர். அவர்கள் தமது பணிகளைப் பொறுப்புடன் நிறைவேற்றினர்.

பிரதேசத்தில் வதியும் பொதுமக்களைப் போன்று முக்கியஸ்தர்களாகக் கருதப்படும் அரசாங்க சேவையாளர்களும் நிலவுடைமையாளர்கள் சிலரும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் சிலரும் அதிபரின் சேவையை மனதார மதித்தனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களுக்கு வந்த பெற்றோர் பாடசாலையின் முன்னேற்றம் தொடர்பாகத் தம்மாலான உதவிகளை அளித்தனர்.

பாடசாலைச் சமுதாய உறுப்பினர்கள் அனைவரும் அதிபரின் சேவையைப் போற்றினர் என்று கூறுதல் மிகையாகாது.

கல்வித் திணைக்களத்தின் அலுவலர்களும் அதிபருடன் ஒத்தழைத்தமையால் அதிபர் கல்வித் திணைக்களத்தில் தமது தேவைகளை எளிதாக நிறைவேற்றக்கூடியவராக இருந்தார்.

திரு. இந்திரனின் மூன்று பிள்ளைகள் அப்பாடசாலையின் ஆரம்ப பிரிவில் கல்வி கற்றனர். அவருடைய மூத்த மகள் இன்னும் ஓராண்டில் ஆறாந் தரத்தில் படிக்க இருந்தார். ஆகையால் அதிபர் தமது பிள்ளைகளை நகரிலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டுமென விரும்பினார். அவர் கஷ்டப் பிரதேசத்தில் நீண்டகாலம் சேவையாற்றி இருந்தமையால் இடமாற்றம் பெற்றுத் தமது கிராமத்துக்குச் சென்று தமது பிள்ளைகளுக்குப் பிரபல பாடசாலைகளில் கல்வி பயில அனுமதி பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்தார். இது தொடர்பாகப் பாடசாலைச் சமுதாயமும் கல்வி அதிகாரிகளும் பெருங் கவலை அடைந்தபோதும் திரு. இந்திரனின் குடும்பதின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்த அவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணக் கல்விப் பணிப்பாளரின் உதவியுடன் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் திருவாரூர் நகரிலிருந்து ஏறத்தாழ எட்டுமைல் தொலைவிலிருக்கும் தமது கிராமமாகிய வள்ளுவர்புரத்திலுள்ள பாரதி மகா வித்தியாலயத்திற்கு அவர் மாற்றலாகிச் சென்றார். அவர் பாடசாலை அதிபரின் விடுதியிலேயே தங்கியிருந்து நகரத்தின் பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்பதற்குத் தமது பிள்ளைகளுக்கு அனுமதி பெற்றார்.

அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் பணியாற்றும் கீழ், மத்திய தர வருமானம் உள்ள மக்கள் வாழும் நகரமாக மாறிக்கொண்டு வருகின்ற இடமே வள்ளுவர்புரமாகும். இப்பிரதேசத்தின் மத்திய தரக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளில்சிறு பகுதியினர் நகரில் உள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி கற்றனர். ஏனைய பிள்ளைகளும் அயற் கிராமங்களிலிருந்து வரும் பிள்ளைகளுமே பாரதி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றனர். இப்பாடசாலையில் பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை நவோதயப் பாடசாலையின் மாணவர்களின் எண்ணிக்கையின் இரு மடங்கிலும் கூடியது.

இப்பாடசாலையின் ஆசிரியர் குழுவில் பெரும்பாலானோர் நகரில் வேலை செய்யும் அலுவலர்களின் மனைவியர் ஆவார். அயற் கிராமங்களில் வதியும் கிராம சேவக அலுவலர், அஞ்சல் அதிபர் ஆகியோரின் மனைவிமாரும் கிராமத்திலேயே கல்வி கற்று ஆசிரியர் பதவி பெற்ற ஆசிரியர்கள் சிலரும் அவர்களில் அடங்கியிருந்தனர். கிராமத்துக்கு வெளியேயிருந்து வரும் பத்து, பன்னிரண்டு ஆசிரியர்களில் பெரும்பாலானோர் நகரிலிருந்து வருபவர்கள் ஆவர்.

பிரதி அதிபராகப் பணியாற்றிய திரு. நந்தகுமார் வள்ளுவர்புரத்திலிருந்து ஏறத்தாழ நாலு மைல் தொலைவில் வதிந்துகொண்டு காணி விற்பனைகளில் ஈடுபட்டிருந்தார். இதனால் இவர் மாலை நேரங்களில் பாடசாலைப் பணிகளில் பங்குபற்றாது இருந்தார். ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் என்னும் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக வருமானம் பெறுவதற்கு மாலை நேரங்களில் தனிப்பட்ட பிரத்தியேக (டியூசன்) வகுப்புகள் நடத்தினர். கல்வி அலுவலகத்தில் பணியாற்றிய எழுதுநர் ஒருவரின மனைவியான திருமதி. நீலாவும் கிராம சேவக அலுவலரின் மனைவியும் முன்னாள் அதிபருக்கு ஆலோசனைகள் வழங்கியவர்கள் ஆவார்.

நகரிலிருந்து பேருந்தில் வரும் ஆசிரியர்களில் பலரும் பாடசாலைக்கு அருகே வதியும் திருமணமான பெண்கள் சிலரும் பாடசாலைக்குத் தாமதமாக வருவதை திரு. இந்திரன் அவதானித்தார். ஆசிரியர்களின் வரவு இடாப்பைப் பிரதி அதிபரே பேணிக்கொண்டிருந்தார். வரவு இடாப்பின்படி ஆசிரியர்கள் மிகவும் அரிதாகவே தாமதமாக வருகை தந்திருந்தனர். இதன் விளைவாக அதிபரே வரவு இடாப்பில் சிவப்புக் கோடு இடும் பணியை மேற்கொண்டனர்.

அடுத்த வாரத்தில் மாதாந்த ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் வரவு பற்றி உரையாற்றிய திரு. இந்திரன் தாமதமாக வரும் ஆசிரியர்கள் தொடர்பாகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இவை ஆசிரியர்களின் சொந்த விடுமுறையிலிருந்து கழிக்கப்பட்டு ஈடுசெய்யப்படும் எனவும் கூறினார். இது தொடர்பாக ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் தாம் மேற்கொண்ட முடிவை அவர் நடைமுறைப்படுத்த தயங்கவில்லை.

பரீட்சைப் பெறுபேறுகள் சிறந்த முறையில் அமையாமையால் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாலை வேளைகளில் விசேட வகுப்புகளை நடத்த வேண்டுமென அதிபர் தெரிவித்த ஆலோசனையை ஆசிரியர்கள் பலர் புறக்கணித்தனர்.

இதனைப் பற்றி மேன்மேலும் சிந்தித்த அதிபர் திரு. இந்திரன் தமக்கு எதிரான ஆசிரியர்கள் பாடசாலையில் இருந்தால் பாடசாலையை முன்னேற்ற முடியாது என்பதை உணர்ந்துகொண்டார். நவோதயப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் தம்முடன் பணியாற்றிய திரு. சந்தானம் ஒரு நாள் அதிபரைச் சந்திக்க வந்தபோது அதிபர் இவ்விடயங்கள் பற்றி அவருடன் கலந்துரையாடினார். நவோதயப் பாடசாலையில் பணியாற்றும் இளம் ஆசிரியர்களில் சிலர் இப்பாடசாலைக்கு மாற்றலாகி வர விரும்புவதாகத் திரு. சந்தானம் குறிப்பிட்டார். இந்த யோசனையை உடனடியாக நடைமுறைப்படுத்திய அதிபர் ஒரு மாத காலத்துள் நவோதயப் பாடசாலையின் ஐந்து ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு மாற்றம் பெற்று வரச் செய்வதில் வெற்றி கண்டார். அவர் நவோதயப் பாடசாலையிற் செய்தவாறே புதிய ஆசிரியர்களின் துணையுடன் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஆரம்பித்தார். மூன்று மாதங்களில் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது.

தம்முடன் ஒத்துழையாத ஆசிரியர்களை இடமாற்றம் செய்து தன்னுடன் ஒத்துழைக்கும் ஆசிரியர்களை வைத்திருந்தால் மட்டுமே பாடசாலைப் பணிகளை மேலும் சிறந்த முறையில் நடத்த முடியுமெனக் கருதிய அதிபர், இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளருடனும் கலந்துரையாடினார்.

அடுத்துவரும் வாரங்களில் இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் உடன்பட்டார்.

ஏறத்தாழ ஒரு வாரத்தின் பின்னர் ஆசிரியர் இடமாற்றம் நிகழப்போகிறது என்னும் வாதந்தி ஆசிரியர்களிடையே பரவியது. ஆசிரியர்களில் ஒருவர் இது பற்றிப் பிரதி அதிபரிடம் விசாரித்தபோது திருமதி நீலாவே அக்கதையைக் கூறியதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே ஆண்டின் இறுதியில் கலைவிழா ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நவோதயப் பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்று இப்பாடசாலைக்கு வந்த இளம் ஆசிரியரான திரு. மோகனே இதற்கு முன்னின்று உழைத்தவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கும் க.பொ.த(உ.த) வகுப்பில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கும் இடையே தொடர்பு இருப்பதாகவும், நாடகப் பயிற்சி என்று கூறிக்கொண்டு அவர்கள் பேசிக் கொண்டிருப்பதாகவும் பாடசாலையில் வதந்தி ஒன்று பரவியது. கலைவிழாவின் பின்னர் அவர் அம்மாணவிக்குப் பரிசுகள் கொடுக்கப்போவதாகவும் அவளின் வீட்டுக்குச் சென்று வருவதாகவும் மாணவர்கள் தம்முள் பேசிக்கொண்டனர்.

திருமதி இந்திரனுக்கும் இச்செய்தி எட்டியது. அவர் அதனைத் தன் கணவரிடம் தெரிவித்தார். ''நான் இது பற்றி விமசாரிக்கின்றேன்'' என்று இந்திரன் கூறியபோதும் இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

ஏறத்தாழ ஒரு வாரத்தின் பின்னர் உயர் வகுப்பு ஒன்றில் பயிலும் மாணவன் ஒருவன் அதே வகுப்பில் பயிலும் மாணவி ஒருத்திக்கு எழுதிய காதல் கடிதம் ஒன்று அவ்வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியரிடம் கிடைத்தது. அதிபருக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்றது. இறுதியில் மாணவன் பாடசாலைக்கு வருவது நிறுத்தப்பட்டது. மாணவிக்குக் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மறுநாள் நடைபெற்ற கலைக் கூட்டத்தின்போது இது பற்றிக் குறிப்பிட்ட அதிபர் அத்தகைய மாணவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படுவரென எச்சரித்தார்.

அடுத்த நாள், அம்மாணவன் பூச்சிகொல்லி மருந்ததை அருந்தித் தற்கொலை புரிந்ததாகச் செய்தி பரவியது. அதிபருக்கு எதிராகப் பாடசாலைச் சுற்றுமதிலில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இது தொடர்பாக விசாரணை நடாத்துவதற்குக் கல்வி அலுவலகத்தின் அலுவலர்கள் பாடசாலைக்கு வந்தனர்.

திரு. இந்திரன் தமக்கு வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமாறு கல்வி அலுவலர்களை வேண்டிக்கொண்டார்.

1. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக.

(1) பாடசாலைச் சமுதாயம் என்பதால் கருதப்படுவது யாது?

(2) பாடசாலைக்குத் தாமதமாக வரும் ஆசிரியர் தொடர்பாகச் சட்டரீதியாக எடுக்கத்தக்க நடவடிக்கைகள் யாவை?

(3) பாடசாலை மேற்பார்வைப் பணியாளரை (Staff) நியமித்தல் தொடர்பாகத் தற்போது நடைமுறையில் உள்ள ஏற்பாடுகள் யாவை?

(4) மாணவர்களுக்குத் தண்டனை விதித்தல் தொடர்பான விதிகள் யாவை?

2. தலைவர் என்ற முறையில் திரு. இந்திரனிடம் இருந்த மூன்று சிறப்பியல்புகளையும் இரண்டு குறைபாடுகளையும் விவரிக்க.

3. தாபனம் ஒன்றின் "முகாமைப் பண்பாடு" அத்தாபனத்தைப் போன்றே சுற்றாடலுக்கும் உகந்த முறையில அமைந்திருக்க வேண்டும்

(1) "முகாமைப் பண்பாடு" என்பதை விளக்குக.

(2) நவோதய மகா வித்தியாலயமும் பாரதி மகா வித்தியாலயமும் அமைந்துள்ள வேறுபட்ட சுற்றாடல்களுக்கு ஏற்ப "முகாமைப் பண்பாடு" களை அமைத்துக்கொள்வது பற்றிய உமது கருத்துக்களை எடுத்துரைக்க.

4. திரு. இந்திரன் மாற்றலாகிச் சென்ற பின்னர் நீங்கள் பாரதி மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டால், எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வீரென விளக்குக.

**விடைகள்:-**

1)

1. பாடசாலையினுள் கருமமாற்றும் அதிபர், ஆசிரியர், மாணவர்கள், கல்விசாராத ஊழியர்கள் அடங்கிய தொகுதியினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. குறிப்பிட்ட ஆசிரியர் பிந்திவருதலை உறுதிப்படுத்தி பாடசாலை தொடங்கும் நேரத்திற்கும் பின்னர் சிவப்புக் கோடிட்டு அதற்குக் கீழ் அறிவுறுத்தல் வழங்கியும் மூன்று நாள் தொடர்ச்சியாகப் பிந்திவரும் சந்தர்ப்பத்தில் சட்டரீதியாக அரை நாள் லீவு இடலாம்.

3. நற் சிந்தனை, முக்கிய செய்திகள், பாடசாலை ஒழுங்கு தொடர்பான அறிவுறுத்தல்கள், ஆசிரியர்–மாணவர் கடமைகள் புதிய பொறுப்புக்கள், நேரமுகாமைத்துவம், இணைபாடவிதான விசேட செயற்பாடுகள், ஒழுங்குமுறையில் புதிய மாற்றங்கள், சுகாதார அறிவுறுத்தல்கள், விசேட செயற்பாடுகள், இணைபாடவிதான செயற்திட்டங்களில் பரிசு பெற்றவர் விபரங்கள், பாடசாலைக்கு மாவட்ட, தேசியமட்ட அபிவிருத்தி தொடர்பான விடயங்கள், பெற்றோர்களுக்கு வழங்கப்படவேண்டிய செய்திகள்.

4. பாடசாலையின் மேற்பார்வைப் பணியாளரை, அல்லது குறிப்பிட்ட துறைகளுக்கான பாடதர மேற்பார்வை இணைப்பாளர்களை சேவைமூப்பு, கல்வித்தகமை, வயது, நல்ல மனிதத் தொடர்புகள், வெற்றிகரமான முகாமைத்துவத்திறன், நல்லாசிரியப்பண்புகள், அர்ப்பணிப்பு, கடமையுணர்வு, ஒழுக்கம், நீதி ஆகிய பண்புகளைக் கொண்டவரை மேற்பார்வைப்பணியாளராக நியமிக்க ஏற்பாடுகள் உள்ளன.

5. தற்போது மாணவர்களுக்குப் பாடசாலைகளில் தண்டனை விதித்தல் தொடர்பாகப் பல ஒழுங்கு முறைகள் உள்ளன. குறிப்பாகச் சீர தண்டனை, வயது வந்த மாணவர்களைப் பொது இடத்தில் எல்லோருக்கும் முன் தண்டனை வழங்குதல் தொடர்பாக பல முறைமைப்படுத்தப்பட்ட முடிவுகளும், அதிபர் மட்டுமல்லாது பாடசாலையின் ஒழுக்காற்றுச் சபை கூடியே குறிப்பிட்ட மாணவர்களின் தவறுகளுக்கான தண்டனைகள் வழங்குதல், மற்றும் மனித உரிமை மிறல், சிறுவர் உரிமைப்பாதுகாப்புச் சட்டங்கள், நீதிமன்றத்தீர்ப்புக்கள் பல பரிமாணங்களில் மாணவர்களுக்குத் தண்டனை விதித்தல் தொடர்பான கட்டுப்பாடுகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானங்களையும் விதிக்கின்றன. ஏனெனில் குறித்த விடய ஆய்வில் மாணவன் பூச்சி மருந்து அருந்தி தற்கொலை புரியும் நிலையே ஏற்பட்டுள்ளது. இது போன்ற பல சம்பவங்களைத் தடுக்கவே தண்டனை தொடர்பாகப் பல ஒழுங்கு விதிகள் பேணப்படுகின்றன.

2 சிறப்பியல்புகள்:

1. குறுகிய காலத்தில் பாடசாலையின் விரைவான வளர்ச்சிக்கு முதன்மையானவராகத் திகழ்ந்தமை.
2. ஆரம்ப காலத்தில் சமூகத்துடனான பாடசாலை உறவை உயிர்த்துடிப்பாகப் பேணியமை. கல்வித்திணைக்களத்துடனான உறவும் சிறப்பாக இருந்தமை.
3. வளங்களைப் பாடசாலைக்குப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றல். அயராத உழைப்பும் தலைமைத்துவமும்

**குறைபாடுகள்:**

1. ஆசிரியர் கூட்ட அறிக்கைகள் பேணாமை, எல்லா ஆசிரியர்களுடனும் நடுநிலைமையுடன் நடக்காமை. தன்னுடன் நெருங்கிப் பணியாற்றிய சில இளம் ஆசிரியர்கள் ஊடாகப் பல பணிகளை மேற்கொண்டமை.
2. மாற்றலாகிச் சென்ற புதிய பாடசாலை ஆசிரியர்களுடனான முரண்பாடுகள். தனது முன்னைய பாடசாலையிலிருந்து குறித்த ஆசிரியர்கள் பெற்றுக் கொண்டமை, புரிந்துணர்வு இல்லாத, நீண்டகால நோக்கில்லாத கல்வி முகாமைத்துவ ஆளுமையற்ற தன்மையைக் காட்டுகின்றது. (மேற்குறிப்பிட்ட விடயங்கள் தர்க்க ரீதியாக விடயஆய்வு விடயங்களை மேலும் உதாரணம் காட்டி விபரித்து எழுதுக.)

3

1. ஒரு தாபனம் அல்லது பாடசாலையின் முகாமைக்கட்டமைப்புக்கள், பாரம்பரிய நடைமுறைகள், நம்பிக்கைகள், கலை, மாதிரியமைப்புக்கள், வழக்கங்கள், வழமைகள், பண்புகள், வெற்றிகள், செயற்பாடுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி சமுக உறவுகள் ஆகிய அனைத்தினதும் கூட்டுமொத்தக் காரணிகளின் இயக்கமே முகாமைத்துவப் பண்பாடு எனப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட பண்புகளின் வேர்களில் இருந்தே குறித்த நிறுவனத்தின் முகாமைப்பண்பாடு தோற்றம் பெறுகின்றது. பொதுவாக சமூக நடத்தைகளின், விழுமியங்களின் தொகுப்பாக சமூக முகாமைப்பண்பாடு உள்ளது. இப்பண்புகள் ஒவ்வொரு சமூக அங்கத்தவர்களது நம்பிக்கைகள், நடத்தைகளின் தொகுப்பாகவுள்ளது. இவை நிறுவனத்தின் முகாமைத்துவப்பண்பாடுகளுடன் ஊடாக அதற்கென விசேட முகாமைத்துவப்பண்பாடுகளுடன் அதற்கென விசேட முகாமைத்துவப்பண்பாகப் பரிணமிக்கின்றது. ஒரு நிறுவன நாடித் துடிப்பின் செயற்பாட்டுகள் முகாமைப்பண்பாடுகளாக இருக்கின்றன. குறித்த நிறுவனத்தின்முகாமைத்துவப் பண்பாடுகள் அந் நிறுவனத்தை மேன்மையடையச் செய்யும். சாதனைபுரிதல், வினைத்திறன், ஆற்றல்–திறமை, சிருஷ்டிப்பும் புதுமைபுகுத்தலும், முன்னேற்றம், நேர்மை, நம்பகம், நியாயம், திருப்தி, புதுப்பித்தல் ஆகிய மொத்த முகாமைத்துவ உபாயங்களின் (Total management strategy) தொகுப்பாகவும் முகாமைத்துவப் பண்பாடு விளங்குகின்றது.

2. நாளுக்குநாள் வேறுபட்டுச் செல்கின்ற சிக்கலானதாக மாறுகின்ற சுற்றாடல்களில் பாடசாலைகள் முகாமைத்துவம் செய்யப்படவேண்டியுள்ளன. பாடசாலையினுள் மனித–தொடர்பாடல்–பௌதீகவள–தகவல்கள் மற்றும் வெளியில் சமூக–அரசியல்–பௌதீக–ஒழுக்க விழுமியவியல் சுற்றாடல்களுடன் இணைத்துப் பாடசாலைகளின் முகாமைத்துவப் பண்பாடுகளைக் கட்டி எழுப்ப வேண்டும். இங்கு நவோதயா மகாவித்தியாலயச் சுற்றாடல் கூட்டுமுகாமை, ஒற்றுமையுணர்வு, ஆசிரியர்–அதிபர்–மாணவர்களிடையேயான நம்பிக்கைகள் படிப்படியாக அதிபர் திரு. இந்திரன் அவர்களால் கட்டி எழுப்பப்பட்டிருந்தது. பாடசாலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவான வளர்ச்சி பெற்றோர் சமூகவுறவை வலுப்படுத்தியது. திணைக்களத்தின் உதவிகளும் கிடைத்தன. அப்பாடசாலையின் சூழலுக்கு ஏற்ப அதிபரால் ஓரளவு சிறந்த முகாமைத்துவ பண்பாட்டைக்கட்டி எழுப்பி வெற்றிகரமாக இயக்க முடிந்தது. அதிலும் கூட பல குறைபாடுகளைக் காணமுடிந்தது.

ஆனால் பாரதி மகாவித்தியாலய சுற்றாடல் வேறுபட்டிருந்தது. ஆசிரியர்களின் நிலை– பிரதி அதிபர் திரு நந்தகுமார் அவர்களின் நிலை, ஆசிரியர் வரவு ஒழுக்கம், மாணவர்களின்–கற்றல்– அடைவுகள்–ஒழுக்கம் போன்ற பல்வேறு அம்சங்கள் ஆக்கபூர்வமான முகாமைப்பண்பாடு அற்ற திருப்திகரமான சமூகஉறவு அந்த கள நிலை அமைந்திருந்தது. இக்களநிலையை முதலில் சரியாகப் பகுப்பாய்வு செய்து பிரச்சினைகளை மிகச்சரியான இனம் காணப்பட்டே தீர்வுகளும், தீர்மானங்களும் மேற்கொள்ள வேண்டிய சூழல் காணப்பட்டது. மிக அவதானமான தீர்மானங்களினூடாக இப்பாடசாலைச் சூழலுக்கு ஏற்ப முகாமைப்பண்பாட்டை அமைத்துக் கொள்ள வேண்டும்.

4

முதலில் பாடசாலை அதனுடன் இணைந்த சமூகச் சூழ் நிலைகளை சரியாக விளங்குதல் அதனூடாகப் பாடசாலையின் பிரச்சினைகளை இனம் காண வேண்டும். இப் பாரதி வித்தியாலயச் சூழலுக்கு ஏற்ப முகாமைத்துவப் பிரச்சினை தீர்த்தலும், தீர்மானஞ் செய்தலும் மிக அவதானமாகத் தனியான தீர்மானம் எடுப்பதைவிட குழுத்தீர்மானம் எடுத்தல். முதலில் ஆசிரியர்களை ஒன்றுபடுத்தல். அதிபர்–ஆசிரியர்–மாணவர் நம்பிக்கைஈனங்களை அகற்றல், தீர்மானத்தை அடையும் போது கடந்த கால அனுபவங்கள், கிடைக்கக்கூடிய தகவல்கள், தரவுகள் அவற்றின் நம்பகத்தன்மைகள், என்பவற்றைக் கவனித்து மிக விவேகமாகச் செயற்படுவேன். ஏனெனில் இப்பாடசாலைகளில் பிரச்சினைகள் நேரத்திற்கு நேரம் வேறுபடுவதால் தீர்மானம் மேற்கொள்ளுதல் ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையாகவுள்ளது. தலைமைத்துவம், குழுச்செயல், தீர்மானம் மேற்கொள்ளல், திட்டமிடல், ஆளணிமுகாமை, அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவகையில் படிப்படியாகப் பாடசாலையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன். சமூகச் சுற்றாடலுடன் மிக நெருங்கிய சாதகமான உயிர்த் துடிப்பான உறவைப் பேணுவேன். மிகச்சரியான பாடசாலைக்கட்டமைப்பை முறையான ஒழுங்கு விதிப்படிக அனைவரது ஒத்துழைப்புடன் நிறுவி அதனோடு பாடசாலை அபிவிருத்தியை முன்னெடுப்பேன். சகல செயற்பாடுகளிலும் பங்குபற்றுநராகவும் (particpant) சாத்தியமாக்குனராகவும் (facilitator) இருந்து செயற்படுவேன்.

(பொதுவாக கல்வி நிருவாக சேவை, அதிபர், ஆசிரியர் சேவைப் போட்டிப்பரீட்சைகளில் கல்வி நிர்வாகம் தொடர்பான விடயக்கற்கைப் பரீட்சை வினாத்தாள், இரண்டு மணி நேரம் கொண்டது என்பதைக் கருத்திற் கொண்டு நேர முகாமையில் கூடிய கவனம் செலுத்தி வினாக்களின் கனதிகளுக்கு ஏற்ப விடைகளை எழுதப் பயிற்சி எடுக்க வேண்டும். இதற்குக்கற்றலுடன் எழுத்துப்பயிற்சியும் வேண்டியது அவசியம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA MEDICAL MUSEUM
★ TEACHING HOSPITAL JAFFNA ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA MEDICAL MUSEUM
TEACHING HOSPITAL JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at TECNOWA Offset Printers, 717, K.K.S. Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org